விலை: 30
பக்கங்கள்: 28

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

சுடர் 33 கதிர் 330 ஐப்பசி 05ஆம் நாள் திங்கட்கிழமை 22 ஒக்ரோபர் 2018 வள்ளுவர் ஆண்டு 2049

## விக்கிக்கு மைத்திரி அழைப்பு

யாழ்ப்பாணம், ஒக். 22
மாகாணசபைகளின் ஆயுள் காலம் எதிர்வரும் வாரங்களில் நிறைவுக்கு வரும் நிலையில், மாகாணங்களின் நிதி நிலமை, எதிர்காலத் திட்டங்கள் தொடர்பில் ஆராய்வதற்காக ஆளுநர்கள் மற்றும் தலைமைச் செயலர்களுக்கு அரச தலைவர் மைத்திரிபால » 25

# இலங்கை மீது அதிருப்தி

### வெளிப்படுத்தினார் மோடி
### மன்னிப்புக் கோரினார் ரணில்

டில்லி, ஒக்ரோபர் 22
இரண்டு நாடுகளும் இணங்கிக் கொள்ளப்பட்ட திட்டங்களை நடைமுறைப்படுத்துவதை, இலங்கை அரசு தாமதப்படுத்தி வருவதாக, இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திர மோடி கடும் ஏமாற்றத்தையும், அதிருப்தியையும் வெளியிட்டுள்ளார். » 25





## இந்திய ராணுவத்தால் கொல்லப்பட்டோருக்கு 31ஆண்டுகளாகியும் நீதி கிடைக்கவில்லை

நினைவேந்தலில் நேற்றுத் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 22
யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குள் புகுந்து இந்திய இராணுவம் மிலேச்சத்தனமாக நடத்திய தாக்குதலில் கொல்லப்பட்ட மருத்துவமனைப் பணியாளர்கள் மற்றும் நோயாளர்களுக்கு 31 ஆண்டுகள் கடந்தும் இன்னும் நீதி » 25

## அரசியல் அரிவரியே தெரியாதவர் முதலமைச்சர் விக்னேஸ்வரன்

.மாவை. எம்.பி. கூறுகிறார்

யாழ்ப்பாணம், ஒக். 22
அரசியலில் அ.ஆ அரிவரியே இப்போதுதான் படிக்கும் வடக்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், எங்களை விமர்சிக்கின்றார். வரலாறு தெரியாத அவர் எம்மைக் குறைசொல்லித் திரிகின்றார். இவ்வாறு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் » 25



## மூடிய அறைக்குள் ரணிலுடன் தனியாகப் பேசிய மோடி

டில்லி, ஒக். 22
இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திர மோடி, தலைமைஅமைச்சர்ரணில்விக்கிரமசிங்கவுடன், மூடிய அறைக்குள் தனியாகப் பேச்சுக்களை நடத்தியுள்ளார்.
புதுடில்லியில் உள்ள ஹைதராபாத் ஹவுசில், நேற்றுமுன்தினம் பிற்பகல் இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திர மோடியை ரணில் சந்தித்தார். » 25

## பதவிக் காலம் முடிந்தாலும் பாதுகாப்புத் தேவையாம்

என்.பி.சிகள் மூவர் விண்ணப்பிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 22
முதலாவது வடக்கு மாகாண சபையின் ஆயுள் காலம் நாளை மறுதினம் புதன் கிழமை நள்ளிரவுடன் முடிவுக்கு வரவுள்ளது. மாகாண சபை முதலமைச்சர், அமைச்சர்கள், » 21

## 23ஆம் திகதிக்குப் பின் "அம்மாச்சி" இருக்காது

பிரதி அமைச்சர் அங்கஜன் நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 22
அம்மாச்சி உணவகம் மாகாண அரசுக்குச் சொந்தமான திட்டமல்ல. அது கொழும்பு அரசின் திட்டமாகும். எதிர்வரும் 23ஆம் திகதிக்குப் பின்னர் திருநெல்வேலியில் உள்ள கொழும்பு அமைச்சின் ஊடாக ஆரம்பிக்கப்பட்ட உணவகத்துக்கு அம்மாச்சி உணவகம் என்ற பெயர் அகற்றப்பட்டு வேறு பெயர் சூட்டப்படும்.
இவ்வாறு விவசாயப் பிரதி அமைச்சர் இ. அங்கஜன் தெரிவித்துள்ளார். » 25

## அரசியல் பயணத்தில் சிவாஜி கைகோர்ப்பார்

சி.வி.விக்னேஸ்வரன் நம்பிக்கை

யாழ்ப்பாணம், ஒக்.22
எனது அரசியல் பயணத்தில் தம்பி சிவாஜிலிங்கம் என்னுடன் கைகோர்த்துப் பயணிப்பார் என்று எதிர்பார்க்கின்றேன் என்று தெரிவித்துள்ளார் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன். » 25

## நாடு பிரிக்கப்படாது இருக்க அதிகாரம் பிரிய வேண்டும்

எம்.ஏ.சுமந்திரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.22
இதுவரை தமிழ் மக்களின் இணக்கம் இல்லாமலேயே அரசமைப்புச் சட்டங்கள் இயற்றப்பட்டன. பிரிக்கப்படாத நாட்டில் வாழ நாம் இணக்கத் » 21

## மகிந்தவிடம் நாட்டுப் பொறுப்பை கையளிப்பது நகைப்புக்குரியது

ஜே.வி.பி. கூறுகின்றது

கொழும்பு, ஒக்.22
ரூபாவின் வீழ்ச்சியைக் கட்டுப்படுத்த எம்மால் முடியும் என்று கூறும் மகிந்த ராஜபக்சவும் அவரது தரப்பினரும் அந்த முறை எதுவென வினவும்போது பிறிதொருவரைச் சுட்டிக்காட்டுகின்றனர். » 21



## 2,600 போதை வில்லைகளுடன் யாழ்ப்பாண இளைஞர்கள் கைது

வவுனியா, ஒக். 22
யாழ்ப்பாணத்திலிருந்து தென்பகுதிக்கு ஆடம்பர மகிழுந்தில் பயணித்த இரண்டு இளைஞர்களிடமிருந்து 2 ஆயிரத்து 600 போதைக் குளிசைகள் கைப்பற்றப்பட்டுள்ளன. கடந்த வெள்ளிக் கிழமை ஆயிரத்து 600 போதைக் குளிசைகளுடன் திருகோணமலையைச் சேர்ந்த இரண்டு இளைஞர்கள் ஓமந்தைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்த நிலையிலேயே, இந்தக் கைதும் இடம்பெற்றுள்ளது. » 25



## கட்டுப்பாட்டை இழந்து தடம்புரண்டது பேருந்து

வவுனியா, ஒக்.22
வவுனியா, ஹொரவப்பொத்தன வீதியில் தனியார் பேருந்து தடம்புரண்டது. அதில் 3 பேர் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.
மடுகந்தைக்கு அண்மையில் நேற்றுமாலை இந்த விபத்து நடந்துள்ளது. வவுனியா நோக்கிப் பயணித்த பேருந்து கட்டுப்பாட்டை இழந்து வீதியோரம் உள்ள தூணுடன் மோதித் » 25

## வாளுடன் கடைக்குள் புகுந்து அடித்துநொருக்கி அட்டூழியம்

உப்புமடச் சந்தியில் நேற்றிரவு சம்பவம்

யாழ்ப்பாணம், ஒக்.22
மோட்டார் சைக்கிள்களில் வாள்களுடன் வந்த 6 பேர் கொண்ட குழு பலசரக்குக் கடை மற்றும் வீதியில் நிறுத்தப்பட்டிருந்த முக்கச்சக்கர » 25


## பலாலி வானூர்த்தித் தள அபிவிருத்தி: உதவுவதாக இந்தியா உறுதியளிப்பு

டில்லி, ஒக். 22
பலாலி வானூர்தி நிலையத்தை அபிவிருத்தி செய்வதற்கும், பலாலி மற்றும் மட்டக்களப்பில் இருந்து தென்னிந்தியாவுக்கு நேரடி வானூர்திச் சேவைகளை நடத்துவதற்கும், உதவி அளிப்பதாக இந்தியா உறுதியளித்துள்ளது.
மூன்று நாள்கள் பயணமாக இந்தியா சென்றிருந்த தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, இந்தியாவின் உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங்கை நேற்றுமுன்தினம் சந்தித்த போதே இந்த உறுதிமொழி அளிக்கப்பட்டுள்ளது.
பலாலி வானூர்தித்தளத்தை இலங்கை வான் படையினரின் உதவியுடன் இலங்கையை மறுசீரமைக்கவுள்ளதாக, » 25

# தென்னிலங்கை முற்போக்கு சக்திகளுடன் கைகோர்ப்போம்

## கட்சியை அறிமுகப்படுத்தி அனந்தி கன்னி உரை

யாழ்ப்பாணம், ஒக். 22
தமிழ் மக்களின் வேணவாக்களை வென்றெடுப்பதே தனது கட்சியின் நோக்கம் என்று குறிப்பிட்ட திருமதி அனந்தி சசிதரன், இதற்காக தென்னிலங்கைச் சிங்கள முற்போக்கு சக்திகளுடன் கைகோர்த்துச் செயற்படவும் தயாராக இருப்பதாகத் தெரிவித்துள்ளார்.



இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியிலிருந்து வெளியேறிய திருமதி அனந்தி சசிதரன், ஈழத் தமிழர் சுயாட்சிக் கழகம் என்று புதிய கட்சியை ஆரம்பித்துள்ளார். இந்தக் கட்சி தொடர்பானஅறிவிப்புக்கூட்டம், யாழ்ப்பாணநகரில்உள்ள யு.எஸ். ஹோட்டலில் நேற்றுக் காலை நடைபெற்றது.
மதத்தலைவர்களின்ஆசியுரையுடன்அனந்திதனதுபுதிய கட்சியின்கொள்ளை அறிக்கையைவெளியிட்டார். ஈழத்தமிழர் சுயாட்சிக் கழகம் என்பதே கட்சியின் பெயர். அந்தக் கட்சியின் செயலர் நாயகமாக அனந்தி தன்னையே அறிவித்தார். அனந்திதனதுஉரையில், தமிழ்த்தேசியக்கூட்டமைப்பை கடுமையாக விமர்சித்தார்.
'தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் தமிழ் அரசுக் கட்சியின் தலைமைகள் அரசுடன் இணங்கியே பயணிக்கின்றன. இதைக் கேட்கும் கட்சியின் உறுப்பினர்களை கட்சியில் இருந்து வெளியேற்றும் நடவடிக்கைகளை தமிழ் அரசுக் கட்சி மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைகள் எடுத்துவருகின்றன. மேலும் மேலும் அரசுடன்நெருக்கமானஉறவுகளைப்பேணிக்கொள்கின்றனர். கேள்விகேட்பவர்களைநெருக்கடிக்குள்உள்ளாக்குகின்றனர். இந்தப் பின்புலத்தியே அனந்தி சசிதரனாகிய நானும் எனது ஆதரவாளர்களும் ஈழத் தமிழர்களுடைய சுயாட்சியை முன்னெடுக்க இந்தப் புதிய கட்சியை ஆரம்பித்துள்ளோம்' என்றார்.
கொள்கைஅறிவிக்கப்பட்டபின்னர்கட்சியின்கொடிமற்றும் சின்னம் பற்றி அறிவிக்கப்படும் என்று முன்னர் தெரிவிக்கப்பட்டிருந்தது. இருப்பினும், அது தொடர்பில் நேற்று எதுவும்அறிவிக்கவில்லை. நிகழ்வின்முடிவில், ஊடகவியலாளர்ஒருவரின்நினைவூட்டலின்பின்னரேநன்றியுரையும் தெரிவிக்கப்பட்டது (5,21,105)

# காணி விடுவிப்புக் கூட்டம் 29ஆம்திகதிக்குஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஒக். 22
யாழ்ப்பாணக் குடாநாட்டில் தற்போது படையினர் வசமுள்ள காணிகளை விடுவிப்பது தொடர்பில்ஆராய்வதற்காகஏற்பாடுசெய்யப்பட்டகூட்டம்பிற்போடப்பட்டுள்ளது. இந்தக் கூட்டம் வடக்கு மாகாண ஆளுநர் தலைமையில் இன்று நடைபெறவிருந்த நிலையில்எதிர்வரும்29ஆம்திகதிக்குப் பிற்போடப்பட்டுள்ளது.
மாவட்டச்செயலகத்தில்நடைபெறவிருந்த இந்தக் கலந்துரையாடலில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், முப்படைத்தளபதிகள், பிரதேச செயலர்கள் பங்குபற்றும் வகையில் அரச தலைவர் செயலகம் ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தது.
வடக்கு, கிழக்கு அரச தலைவர் அபிவிருத்திச் செயலணிக் கூட்டத்தில் படையினர் வசமுள்ள காணிகள் மற்றும் பாடசாலைகள் உரிய தரப்பினரிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் என்றும், அதற்காக மாவட்டங்கள் தோறும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், படை அதிகாரிகள் கூடிஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கக்கவேண்டும்என்றும் கூறப்பட்டிருந்தது.
டிசெம்பர்31ஆம்திகதிக்குமுன்னர் படையினரின்பிடியில்உள்ளபாடசாலைகள் விடுவிக்கப்படும் என்றும் கூறப்பட்டிருந்தது. அதற்கு இராணுவத்தினர் சாதகமான நிலைப்பாட்டை எடுத்திருந்த போதும், கடற்படையினர் சாதகமானநிலைப்பாட்டைவெளிப்படுத்தவில்லை.
அதன் தொடர்ச்சியாக யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கான கூட்டம் இன்று நடைபெறும் என்று ஆளுநரால் அறிவிக்கப்பட்டிருந்தது. இந்தக் கூட்டத்தில் படையினர் வசமுள்ள காணிகள் மட்டுமன்றி வனவளத் திணைக்களத்தின் வசமுள்ளகாணிகள்தொடர்பாகஆராயப்படவிருந்தது.
வடமராட்சிகிழக்கில்உள்ளசுமார் 24ஆயிரம்ஏக்கர்காணிகள்வனவளத் திணைக்களத்தால் கையகப்படுத்தப்பட்டுள்ள நிலையில் அவற்றில் 12 ஆயிரம் ஏக்கர் மக்களின் வாழ்விடங்களாக உள்ளமை, செம்மணியில் உள்ள மாந்தை உப்பளப் பிரதேசம் என்பன தொடர்பாகவும், அவற்றை விடுவிப்பது தொடர்பாகவும் ஆராய ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.
கொழும்பில் அரச தலைவருடன் சந்திப்பு ஏற்பாடாகி உள்ளதால் இன்று நடைபெறவிருந்த கூட்டம் 29 ஆம் திகதிக்கு மாற்றப்பட்டுள்ளது என்று தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது. (ற-105)

# தவறான முடிவெடுத்து இளைஞன் உயிர்மாய்ப்பு

மன்னார், ஒக்.22
தூக்கில் தொங்கிய நிலையில் இளைஞர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டார். காதல் கை கூடாததன் காரணத்தாலேயே அவர் தவறான முடிவெடுத்தார் என்று தெரிவிக்கப்பட்டது.
சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது. மன்னார் தாழ்வுபாடு கிராமத்தைச் சேர்ந்த ஸ்ரீபன் வின்னியோசப் (வயது 21) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவர்.
நேற்று முன்தினம் சனிக்கிழமை தொழிலுக்கு கூட்டிச் செல்வதற்கு நண்பர் ஒருவர் வந்தபோதே வின்னி யோசப் தனது அறையில் தூக்கில் தொங்கிய நிலையில் இருந்தது கண்டறியப்பட்டது. அவரது அறையில் கடிதம் ஒன்று மீட்கபட்டது. அந்தக் கடிதத்தில் காதல் கைகூடவில்லை என்று எழுதப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. இறப்பு தொடர்பான விசாரணைகளை நானாட்டான் பிரதேசத் திடீர் இறப்புவிசாரணை அதிகாரி எட்வேட் குணகுமார் மேற்கொண்டார். உடற்கூற்றுப் பரிசோதனைகளின் பின்னர் சடலம்உறவினர்களிடம்கையளிக்கப்பட்டது.
(21,60)

# கட்டுப்பாட்டை இழந்து பட்டா வாகனம் விபத்து



வவுனியா, ஒக்.22
கண்டியில்இருந்துமுல்லைத்தீவுநோக்கிப்பயணித்தபட்டா ரக வாகனம் ஒட்டுசுட்டான் முல்லைத்தீவு வீதியில் கட்டுப்பாட்டை இழந்து மரத்துடன் மோதி விபத்துக்குள்ளானது. சாரதி படுகாயமடைந்தார்.
இந்தவிபத்துநேற்றுநடந்துள்ளது. விபத்தையடுத்துவீதியில் பயணித்தவர்கள் நோயாளர் காவு வண்டிச் சேவைக்கு அறிவித்து காயமடைந்த சாரதியை மாஞ்சோலை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். விபத்துத் தொடர்பாக விசாரணைகளை ஒட்டுசுட்டான் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ற-21)

# உந்துருளிகள்திருட்டு: சந்தேகநபர்கள்கைது

வவுனியா, ஒக.22
வவுனியாவில்மோட்டார்சைக்கிள்திருட்டில்ஈடுபட்டனர்என்றசந்தேகத்தில்நேற்றுஇருவர்பொலிஸாரால்கைது செய்யப்பட்டனர்.
வவுனியா தலைமைப் பொலிஸ் நிலையக் குற்றத் தடுப்புப்பிரிவுப்பொலிஸ்உத்தியோகத்தர்நியாமுக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் உப பொலிஸ் பரிசோதகர் பிரணித் மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் சாணக, கேரத், அசோக, நிசங்க, விசாநாயக, தரங்கஆகியோரைக்கொண்ட பொலிஸ்குழுசந்தேகநபர்களைக்கைதுசெய்தது.
கைதுசெய்யப்பட்டவர்கள்வவுனியாகொக்குவேலி மற்றும் தாஸ் நகரைச் சேர்ந்த 23 மற்றும் 24 வயதுடையவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது. அவர்களிடம்இருந்துமோட்டார்சைக்கிள்ஒன்றுமீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். கைது செய்யப்பட்டவர்கள் இன்று நீதிமன்றில் முற்படுத்தப்படுவார்கள் என்றும் மேலதிக விசாரணைகள் நடைபெறுகின்றன என்றும் வவுனியா குற்றத்தடுப்புப்பிரிவுப்பொலிஸார்தெரிவித்தனர். (ற-110)

# அனந்தியின் விலகலை ஏற்றது தமிழ் அரசு

யாழ்ப்பாணம், ஒக். 22
வடக்குமாகாணமகளிர்விவகார அமைச்சர்திருமதி அனந்தி சசிதரன் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியிலிருந்து விலகுவதாக அறிவித்ததை ஏற்றுக் கொள்வதாக, கட்சியின் பொதுச் செயலர் கி. துரைராஜசிங்கமும் பதில் கடிதம் அனுப்பியுள்ளார்.
2013ஆம் ஆண்டு மாகாணசபைத் தேர்தலின் போது இலங்கைத்தமிழ்அரசுக்கட்சிசார்பில்போட்டியிட்டும் திருமதி அனந்தி சசிதரன் வெற்றி பெற்றிருந்தார். 2015ஆம் ஆண்டு அரச தலைவர் தேர்தலின் போது, தேர்தலைப் புறக்கணிக்க வேண்டும் என்று அனந்தி பரப்புரை மேற்கொண்டிருந்தார். அனந்தி மீது தமிழ் அரசுக் கட்சியினால் ஒழுக்காற்று நடவடிக்கைஎடுக்கப்பட்டுகட்சியிலிருந்து இடைநிறுத்தப்பட்டிருந்தார்.
இந்தநிலையில்இலங்கைத்தமிழ்அரசுக்கட்சியிலிருந்து விலகுவதாக 19ஆம் திகதியிட்ட கடிதத்தை, கட்சிக்குகையளித்திருந்தார். அதனைஏற்றுக்கொள்வதாககட்சியின்பொதுச்செயலர்பதிலளித்துள்ளார்.
இதேவேளை, திருமதி அனந்தி சசிதரன் நேற்றுப் புதிய கட்சியைத் தொடக்கி வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (5,105)





வடக்கு மாகாண சபை உறுப்பினர் ச.சுகிர்தனின் ஆதரவாளர்கள் சந்திப்பும், முன்பள்ளி ஆசிரியர் கௌரவிப்பும் நேற்று பருத்தித்துறையில்நடைபெற்றது. அதில்நாடாளுமன்ற உறுப்பினர்களானஎம்.ஏ.சுமந்திரன், ஈ.சரவணபவன் ஆகியோரும், அரசியல் தலைவர்களும், கலந்து கொண்டனர். (ற-26)

## தோட்டத்தொழிலாளர்களுக்கு ஆதரவாக கிளிநொச்சியிலும் கவனவீர்ப்பு ஏற்பாடு

கிளிநொச்சி,ஒக்.22
அடிப்படைச்சம்பளம்ஆயிரம்ரூபாவாக இருக்க வேண்டும் எனக் கோரி, தமது போராட்டத்தை முன்னெடுத்துள்ள ,தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆதரவளிக்கும் வகையில்கிளிநொச்சியிலும்கவனவீர்ப்பு போராட்டம் நடத்த தமிழ் தேசிய கூட்டமைப்பின் மாவட்ட காரியாலயம் அழைப்பு விடுத்து ள்ளது .
இந்த போராட்டம் எதிர்வரும் 24 ஆம் திகதி புதன்கிழமை காலை 9.30 மணியளவில் கிளிநொச்சி பழையகச்சேரிக்கு முன்பாகநடைபெறவுள்ளது.
நாகரிகம்வளர்ந்துவிட்ட இந்தஉலகிலே தொழிலாளர்களாக ,முதலாளிகளுக்கு இலாபத்தை ஈட்டிகொடுப்பவர்களாக ,இந்த நாட்டினுடைய பொருளாதாரத்தினுடைய முதுகெலும்பாக உள்ள எமது உறவுகளான தோட்டத் தொழிலாளர்களால்நடாத்தப்படுகின்றபோராட்டத்துக்கு ஆஇந்தக் கவனவீர்ப்புப் போராட்டம்நடைபெறவுள்ளது.
(105)

## தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆதரவு தெரிவித்து யாழ்ப்பாணத்திலும் , மட்டக்களப்பிலும் கவனவீர்ப்பு

யாழ்ப்பாணம் ,ஒக் .22
மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் அடிப்படை சம்பளத்தை ஆயிரம் ரூபாவாக நிர்ணயம் செய்ய வலியுறுத்தி 'உரிமைக்காகப் போராடும் தோட்டத் தொழிலாளருடன் நாமும் கைகோர்ப்போம்' எனும் தொனிப்பொருளில் யாழ்ப்பாணத்தில் அறவழிப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.




நேற்றுக்காலை9.30மணிக்குயாழ். பேருந்துநிலையம் முன்பாக இடம்பெற்ற இந்தப் போராட்டத்தில் தோட்டத் தொழிலாளருக்காய் வடக்கில் இருந்து உரிமைக் குரல் கொடுக்கும் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.
சமூகவலைத்தளநண்பர்களின்ஏற்பாட்டில் "தோட்டத் தொழிலாளருக்காய் வடக்கி இருந்து ஓர் உரிமைக் குரல்" என்றதொனிப்பொருளில் குறித்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.
இதன்போது, தோட்ட தொழிலாளர்களுக்கு ஆதரவாகவும், அரசுக்குஎதிராகவும், தோட்டக்கம்பனிகளுக்கு எதிராகவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கோசங்களை எழுப்பியிருந்தனர்.
அதேவேளை மட்டக்களப்பிலும் தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆதரவு தெரிவித்து மட்டக்களப்பு வாழ் இளைஞர்களின் ஏற்பாட்டில்காந்திபூங்கா முன்றலில் கவனவீர்ப்பு போராட்டம் ஒன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது .
(105)

## பிடியாணை பிறப்பிக்கப்பட்டஐவர் கைது

கிளிநொச்சி ,ஒக். 22
நீதிமன்றினால் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட பெண் உள்ளிட்ட ஐவர் கைது செய்யப்பட்டுள்ளதாக தருமபுரம் பொலிஸ் நிலையத் தகவல்கள் தெரிவிகின்றன.
கிளிநொச்சி மாவட்டநீதிவான்மன்றில் வழக்குத் தவணைகளுக்கு வருகைதராவதவர்கள்என அடையாளம் காணப்பட்ட தருமபுரம் பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட ஐந்து பேருக்குபிடியாணைபிறப்பிக்கபட்டதற்கு இணங்க பெண்ணொருவர் உட்பட ஐவரும் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் இவர்கள்நீதிமன்றில் முற்ப்படுத்துவதற்கான நடவடிக்கைஎடுகுக்கப்பட்டுள்ளதாகவும் தருமபுரம் பொலிஸ் நிலைய தகவல்கள் தெரிவிக்கின்றன .
(6)

## கசிப்பு வைத்திருந்தவருக்கு விளக்கமறியல்

கிளிநொச்சி ,ஒக். 22
தருமபுரம்பொலிஸ்பிரிவுக்கு உட்பட்ட கட்டைக்காடு பகுதியில் 2 ஆயிரம் மில்லிலீற்றர்கசிப்பினை உடமையில் வைத்திருந்த நபரை கைது செய்த பொலிஸார், நேற்றைய தினம் நீதிமன்றில் முற்படுத்தினர். சந்தேகநபரரைவரும்25 ஆம்திகதிவரைவிளக்கமறியலில் வைக்க கிளிநொச்சி மாவட்ட நீதிவான் மன்று உத்தரவிட்டுள்ளது .
(6)

## கோத்தாவுக்கு அஞ்சும் மகிந்த கோமின் தயாசிறி தெரிவிப்பு



கொழும்பு, ஒக்.22
கோத்தபாய ராஜபக்சவை அடுத்த அரச தலைவர் தேர்தலில் நிறுத்தினால் அவர் இரண்டாவது பதவிக்காலத்தையும் பெற்றுக்கொள்வார்என்றுமகிந்தராஜபக்சஅஞ்சுகிறார்எனப் பிரபலசட்டநிபுணர்கோமின்தயாசிறிதெரிவித்துள்ளார்.
கொழும்புஆங்கிலவார இதழ்ஒன்றுக்குவழங்கியநேர்காணலிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார். அதில் தெரிவிக்கப்பட்ட விடயங்கள் வருமாறு:
பசில் ராஜபக்ச அடுத்த அதிபர் வேட்பாளராக உயர்த்தப்பட்டால் சிறிலங்கா பொதுஜன முன்னணிக்கு என்ன நடக்கும்?கோத்தாபய ராஜபக்சவை விட, பசில் ராஜபக்சவை ஊக்குவிக்கவே மகிந்த ராஜபக்ச, முயற்சிப்பதாக நான்நினைக்கிறேன். அதனால்தான், மகிந்தவின்புதிய கட்சிக்கு, பேராசிரியர்ஜி.எல். பீரிஸ்தலைவராகநியமிக்கப்பட்டார். பசில் ஒரு மக்கள் தலைவர் அல்ல.
மகிந்த ராஜபக்ச 2009 ஆம் ஆண்டு வரை, மிகவும் நல்லதொரு தலைவராக இருந்தார். அவரைச் சுற்றியிருந்தவர்கள், அவரைக் கெடுத்து விட்டனர். மக்கள் அவரை 'மகாராஜா' என்று அழைத்தார்கள்.
2015 ஆம் ஆண்டில் மகிந்த ராஜபக்சவை தோற்கடிப்பதில் அவர்கள் நல்ல வேலை செய்தனர். அவர் நல்லாட்சிக்காக இழந்தார்.
இரட்டைக் குடியுரிமை கொண்டிருப்பதால் கோத்தாபய ராஜபக்சவினால், தற்போதைய அரசியலமைப்பின்கீழ் அதிபர் பதவிக்கு போட்டியிட முடியாதா?
தனது இரட்டைக்குடியுரிமையைக்கைவிடாமல் அவர் இப்போது ஒரு மிகப்பெரிய தவறைச் செய்கிறார். அவர் கடைசி நிமிடம் வரை காத்திருக்கக் கூடாது. அது மிகப் பெரிய ஆபத்து.
கோத்தாபய ராஜபக்ச சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் செல்வாக்குள்ளவர் அல்ல. ஆனால் அவருக்குதொழில் துறையினர் மற்றும் வணிக சமூகத்தில் செல்வாக்கு உள்ளது. கோத்தா வினையாற்றுபவர், கடுமையான ஒழுக்கத்தைபின்பற்றுபவர்என்று அவர்களுக்குத்தெரியும். போர் மற்றும் நகர்புற அபிவிருத்தியில் அவர் செய்ததை அவர்கள் அறிவார்கள்.
கோத்தாவை அடுத்த அதிபர் தேர்தலில் நிறுத்தினால், அவர் இரண்டாவது பதவிக்காலத்தையும் பெற்றுக் கொள்வார் என்று மகிந்த அஞ்சுகிறார். 10 ஆண்டுகள் சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஆட்சிக்குப் பின்னர், ஐதேகவுக்கு அதிகாரம் மாறும் போது, நாமல் ராஜபக்சவுக்கு வாய்ப்புக் கிடைக்காமல் போகும் என்றும் மகிந்தவுக்கு அச்சம் உள்ளது.
பசில் ராஜபக்ச மிகவும் சக்திவாய்ந்தவர். ஆனால் அவருக்கு மக்களின் ஆதரவு குறைவு.
சிறிலங்கா பொதுஜன முன்னணி கடைசியாக நடத்திய கொழும்பை நோக்கி மக்கள் சக்தி என்ற பேரணி, கோத்தாபய ராஜபக்சவின் மதிப்பைக் குறைக்கும் வகையில் அமைந்தது. அது மகிந்த ராஜபக்சவுக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தது.
கோத்தாபயராஜபக்சஇந்தபேரணியைவிட்டுவெளியே நின்றிருக்கவேண்டும். எனது ஆலோசனை என்னவெனில், அவர், கட்சியின் நியமனத்தைப்பெறவேண்டும். சுதந்திரமான வேட்பாளராக நின்று வெற்றி பெற முடியாது.
அவரது குழுவில் உள்ள இரு கூட்டாளிகள் வெளியேற்றப்பட வேண்டும். அவர்கள் யார் என்று அவரிடம் கூறினேன். இந்த நாட்டுக்குச் சேவையாற்றுவதில் அவர் தீவிரமாகஇருந்தால், அவர் குழந்தைச்சகோதரர்என்ற மனநிலையில் இருந்து வளர வேண்டும். அவர் தன்னை உறுதிப்படுத்த வேண்டும்.
ஆனால், மகிந்த ராஜபக்சவை சிறிலங்கா பொதுஜன முன்னணியின் வேட்பாளராக நிறுத்துவதற்கான நகர்வுகள் மேற்கொள்ளப்படவில்லையே.
அவரால் மீண்டும் போட்டியிட முடியாது, மகிந்தவுக்கு எந்த வாய்ப்பும் இருப்பதாக நான் நினைக்கவில்லை. அவர்சரியானநேரத்தில், 19 ஆவதுதிருத்தச்சட்டத்துக்கு சவால் விடுக்கவில்லை.
தற்போதுசட்டம்நடைமுறைக்குவந்துவிட்டது. இல்லை என்று சொல்வதற்கு மிகவும் தாமதமாகி விட்டது.
சிறிலங்கா பொதுஜன முன்னணியின் வீழ்ச்சி என்னவாக இருக்கும்?
சிறிலங்கா பொதுஜன முன்னணி வீழ்ச்சியைச் சந்திக்கும் என்று நான் நினைக்கவில்லை. அதற்கு சக்தி வாய்ந்த, செயற்திறன் மிக்க, தொலைநோக்குடைய தலைவர் தேவை. அவர் குட்டி அரசியலுக்குக் கட்டுப்பட்டவராக இருக்கக் கூடாது. அந்த நபராக இருப்பதற்கு கோத்தாபய ராஜபக்சவுக்கு வாய்ப்புள்ளது.
ஆனால், தமிழ் மக்கள் உள்ளிட்ட குறிப்பிட்ட மக்களால் அவர் கடும்போக்காளராக பார்க்கப்படுகிறாரே?
அவர் ஒரு கடும்போக்காளர் தான்.
ஆனால், இது நல்லாட்சியுடன் இணைந்தது. கெட்டது அல்ல. அதேவேளை, இந்த நாட்டிலுள்ள 70 வீதமான மக்கள் பௌத்தர்கள். அவர்கள் தங்களை வலியுறுத்துவதற்கான உரிமையைக்கொண்டுள்ளார்கள். பிரித்தானியாவில், அரச குடும்பத்தைச் சேர்ந்தவர், அங்கிலிக்கன் அல்லாத ஒருவரை திருமணம் செய்து கொள்ள முடியுமா? அங்கிலிக்கன் அல்லாத ஒருவர், நாட்டின் தலைவராக முடியுமா?
ட்ரம்ப் இருப்பதால் அமெரிக்காவில் பயங்கரவாத பிரச்சினைஇல்லை. பௌத்தர்களுக்குஅவர்களின்உரிமைகளை வழங்குவதற்கு நேரம் வந்துவிட்டது. ஆனால் அவர்கள் காட்டுக்குதிரைகளைப்போன்றுஆட்சிநடத்த முடியாது. அவர்கள் சட்டத்தின் கீழ் தான் ஆட்சியை நடத்த வேண்டும்.

## சான்றிதழ் வழங்கும் நிகழ்வு



வவுனியா,ஒக்.22
வவுனியா திறந்தபல்கலைக்கழகத்தில் சிறு கற்கை நெறிகளை மேற்கொண்டு பூர்த்தி செய்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு, கண்டி வீதியில் அமைந்துள்ளதிறந்தபல்கலைக்கழகத்தில் நேற்று மாலை 3.30 மணியளவில் நடைபெற்றது.
திறந்தபல்கலக்கலைக்களகத்தின் வவுனியா கற்கைநிலைய உதவி இயக்குனர் வி. திவாகர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், முதன்மை விருந்தினராக யாழ் பல்கலைக்கழகவவுனியாவளாக முதல்வர் ரி. மங்களேஸ்வரன், கலந்து கொண்டதுடன், மதிப்புறு விருந்தினராகமீள்குடியேற்றபுனர்வாழ்வு வடக்கு அபிவிருத்தி அமைச்சர்காதர்மஸ்தான்கலந்து கொண்டார்.
இன்றைய நிகழ்வில் சிறு கற்கை நெறிகளானமனிதவளமுகாமைத்துவம் மற்றும் ஆங்கிலகற்றை நெறிகளைபூர்த்திசெய்த80மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கிவைக்கப்பட்டது.
குறித்தநிகழ்வில் மாவட்டசிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர் ஜெயகெனடி, விரிவுரையாளர் மனோகரன், சமூக ஆர்வலர்களான சந்திரகுமார், சபாநாதன் மற்றும் மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (110)

## இராணுவத்தால் மரம் நடுகை



மன்னார்,ஒக்.22
இலங்கை இராணுவத்தின் 69 ஆவது ஆண்டுநிறைவை முன்னிட்டு பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்து செல்லும் மன்னார் பிரதேசஇராணுவத்தினர். கடந்த வெள்ளிக்கிழமை மன்னார் பேசாலை புனித பற்றிமா மத்திய மகா வித்தியாலயத்தில் ஒரு தொகுதி பயன் தரும் மரக்கன்றுகளை நட்டுவைத்துள்ளனர்.
(56)

# வன்முறைக் கலாசாரத்தில் மூழ்கிவிட்டது யாழ்ப்பாணம்

## தென்மராட்சி உதவிப்பிரதேசசெயலர்வினோஜிதாகவலை

**சாவகச்சேரி, ஒக். 22**


**கல்வி,கலைகள்,கலாசாரம்என்றுஎதற்கெடுத்தாலும்யாழ்ப்பாணமே இலங்கையில் முதன்மையானது என்ற புகழ் இருந்தது. ஆனால் தற்போது இந்த நிலை மாற்றம்பெற்று வாள்வெட்டு, வன்முறை, போதைப்பொருள் ஆகியன சார்ந்த கலாசாரத்துக்குள் நாம் சென்றுகொண்டிருக்கிறோம் என்று தெரிவித்தார் தென்மராட்சி உதவிப் பிரதேச செயலர் க.வினோஜிதா.**

தென்மராட்சிக் கலைமன்றத்தினால் ஏற்பாடுசெய்யப்பட்ட கலாசாரப் பெருவிழா சாவகச்சேரி கலைமன்ற கலாசார மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் மதிப்புறு விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயேஅவர்இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையில்கல்விஎன்றால்யாழ்ப்பாணம்.கலைகள்என்றால்யாழ்ப்பாணம். கலாசாரம் என்றால் யாழ்ப்பாணம். பண்பாடு என்றால் யாழ்ப்பாணம் என யாழ்ப்பாணம் பல்வேறு வகைகளில் பெயர்பெற்ற பிரதேசமாகத்திகழ்ந்தது. அந்தப்புகழ்இலங்கையில் மட்டுமல்ல உலக நாடுகளிலும் பரவி வந்துள்ளது. அவ்வாறான பெருமை மிக்க யாழ்ப்பாணத்தின் புகழ் இன்று தலைகீழாக மாறி வாள்வெட்டுக்கலாசாரம்,போதைப்பொருள் கலாசாரம். வன்முறைக் கலாசாரம் ஆகியவற்றில்முன்னிலையில்உள்ள பிரதேசமாகக்காணப்படுகிறது. எமது பிரதேசத்தில்வதியும்இளைஞர்களின் தவறானபோக்குகளாலும்நடத்தைகளாலும்மதிப்புடன்போற்றப்பட்டஎமது யாழ்ப்பாணம் இன்று கேலிக்கு இடமாகப்போய்விட்டது.

ஒவ்வொரு இனத்தின் அடையாளமாகக் கலைகள் தோற்றுவிக்கப்பட்டன. அவ்வாறான கலைகளை கிராமங்களில் இன்றும் காணமுடிகின்றது. இவ்வாறான அரங்குகளின் மூலம் கலைகளின் மகிமையையும் கலைஞர்களின் ஆற்றுகையையும் வெளிக்கொணரச் செய்தல் வேண்டும். முன்னைய காலத்தில் யாழ்ப்பாணத்தில்உருவாக்கப்பட்டஇயல்,இசை, நாடகங்கள் ஆயிரத்துக்கு மேற்பட்ட தடவைகள் மேடையேறி யாழ்ப்பாணத்திற்கு பெருமை சேர்த்தன. அவ்வாறான மதிப்பினை ஏன் நாம் மீண்டும் பெறமுடியாது என்ற எண்ணம் எம்மத்தியில்உருவாகினால்நிச்சயம் அதில்நாம்வெற்றிகாண்போம். கலாசாரப் புறழ்வுகளில் ஈடுபடுவோரை கலைச் செயற்பாடுகளில் நாம் ஈடுபடுத்தி அவர்களுடன் மேலும் கலையார்வம்உள்ளவர்களைஇணைத்துச் செயற்படுவோமாயின்நிச்சயம்எமக்கு அவமானத்தைத்தேடித்தந்தகலாசாரம் அழிக்கப்பட்டுபுதிய கலைச்சமூகத்தை உருவாக்கமுடியும்என்றார். (ம-9,159)



## மிருசுவில் - குருக்கள்மாவடியில் வாள்வெட்டுக் குழு அட்டகாசம்

### மக்கள் விரட்டியதை அடுத்து தலைதெறிக்கத் தப்பியோட்டம்

கொடிகாமம் ஒக் 21

மிருசுவில்வடக்குகுருக்கள்மாவடிப்பகுதியில்நேற்றுமுன்தினம் இரவு வாள்வெட்டுக் குழுவொன்று அட்டகாசத்தில் ஈடுபட்டது என்றும் மக்கள் சுற்றிவளைத்துத் துரத்தியதை அடுத்து அந்தக் குழுவைச் சேர்ந்தவர்கள் தலைதெறிக்க ஓட்டமெடுத்தனர் என்றும் அந்தப் பகுதி மக்கள் குறிப்பிட்டனர்.

இரவு 8.40 மணியளவிலேயே அந்தக் குழு அடாவடித்தனத்தில் ஈடுபட்டது என்று தெரியவருகிறது. மக்கள் விரட்டியதை அடுத்து கத்தி, வாள், உந்துருளி என்பவற்றைக் கைவிட்டுஅடாவடித்தனத்தில்ஈடுபட்டவர்கள்தப்பியோடினார்கள் என்றும் பொலிஸார் இந்த விடயத்தில் மேலதிக விசாரணைகளைமேற்கொண்டுவருகின்றனர்என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (ம-9,159)

## தந்தையையும் மகனையும் வழிமறித்துத் தாக்குதல்

### இனந்தெரியாதோர் அடாவடி

சாவகச்சேரி, ஒக். 22

மிருசுவில் பகுதியில். வேலை முடிந்து ஈருருளியில் வந்த தந்தையும் மகனும் இனந்தெரியாதோரால் வழிமறித்துத் தாக்கப்பட்டனர். தாக்குதலுக்கு இலக்கான இருவரும் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

இந்தச்சம்பவம்மிருசுவில்வடக்கில்நேற்றுமுன்தினம்இரவுஇடம்பெற்றது. இருவரும்தோட்டவேலைக்குச்சென்றுவிட்டுத்திரும்பிவருகையிலேயே இந்தத் தாக்குதல் இடம்பெற்றது என்று தெரிவிக்கப்பட்டது. இந்த விடயம் தொடர்பில் சாவகச்சேரி பொலிஸார் மேலதிக விசாரணைகளை நடத்திவருகின்றனர். (ம-9.159)

## பருத்தித்துறைப் பகுதியில் வழிபாட்டுத்தலங்களில் நுளம்புக் குடம்பிகள்!



யாழ்ப்பாணம், ஒக். 22

பருத்தித்துறைசுகாதாரமருத்துவஅதிகாரிபணியகத்துக்கு உட்பட வழிபாட்டுத் தலங்களில் சுகாதாரப் பகுதியினர் டெங்குப் பரிசோதனைகளை மேற்கொண்டபோது பெருமளவுவழிபாட்டுத்தலங்களில்நுளம்புக்குடம்பிகள்இருந்தமை அவதானிக்கப்பட்டது.

சமீப நாள்களாக அந்தப் பகுதியில் பெய்த மழையை அடுத்தே இந்த பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன என்றும் அவ்வாறு நுளம்புக் குடம்பிகள் அவதானிக்கப்பட்ட இடங்கள் துப்புரவு செய்யப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ம-9)



வடமராட்சிவலயத்தினால்நடத்தப்பட்டசாதனையாளர்மதிப்புறுத்தலும் பரிசில் தின நிகழ்வும் நேற்றுக் காலை 9.30 மணிக்கு பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் கலந்துகொண்டார். (ம-173)

## சிறுகதைத்தொகுதி அறிமுக நிகழ்வு

கொடிகாமம், ஒக். 22

சமரபாகு உதயகுமாரின் தமிழினிசிறுகதைத்தொகுதிஅறிமுகநிகழ்வுநாளை செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.05 மணியளவில்கிளிநொச்சிஅக்கராயன் மகா வித்தியாலயத்தின் மண்டபத்தில் அக்கராயன் மகா வித்தியாலய அதிபர் க.மதுரநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது.

வரவேற்புரையை அக்கராயன் மகா வித்தியாலய ஆசிரியர் தி.நீதிராஜாவும் வெளியீட்டுரையினை ஆசிரியை திருமதி சி.நந்நினியும் நிகழ்த்தவுள்ளனர். முல்லைத்தீவுஅம்பலப்பெருமான் குளம் அ.த.க. பாடசாலை ஆசிரியர் செ.நிசாந்தன்முதற்பிரதியைப்பெறவுள்ளார். நூல் ஏற்புரையை கிளிநொச்சி அக்கராயன் மகா வித்தியாலய ஆசிரியர் கிருஷ்ணானந்தன் நிகழ்த்தவுள்ளார். (ம-159)

## குடமுழுக்குநிகழ்வு

யாழ்ப்பாணம், ஒக். 22

வடமராட்சி புலோலி வடமேற்கு காந்தியூர் ஞானவைரவர் ஆல்யத்தின் குடமுழுக்குநிகழ்வுஇன்றுதிங்கட்கிழமை காலை 9.20 மணி தொடக்கம் 10.15 வரையான சுபமுகுர்த்த வேளையில் நடைபெறவுள்ளது. (ம-124,173)

## சின்னம்சூட்டும்நிகழ்வு

கொடிகாமம், ஒக். 22

நாவற்குழி மகா வித்தியாலய சாரண மாணவர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வு நாளை செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.

நாவற்குழி மகா வித்தியாலய பிரார்த்தனைத்திடலில்நண்பகல்11.30 மணிக்கு வித்தியாலய அதிபர் சி.பவளகுமாரன் நெறிப்படுத்தலில் நாவற்குழி மகா வித்தியாலய சாரண பொறுப்பாசிரியர் திருமதி பி.அங்கசன் தலைமையில்நிகழ்வுநடைபெறவுள்ளது. (ம-159)

## பரு.செயலகத்துக்கான அரசதலைவர்பணியில் 3 ஆயிரத்து 422 பிரச்சினைகள் தீர்த்து வைப்பு

யாழ்ப்பாணம். ஒக். 22

பருத்தித்துறைபிரதேசசெயலகத்துக்குட்பட்ட பகுதியில்கடந்தசிலதினங்களுக்குமுன்னர் முன்னெடுக்கப்பட்ட அரச தலைவர் உத்தியோகபூர்வப் பணியில் 3 ஆயிரத்து 422 பிரச்சினைகள் தீர்த்து வைக்கப்பட்டன.

வடஇந்துமகளிர்கல்லூரியில்கடந்த14ஆம் திகதி காலை 7 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை அரச தலைவர் உத்தியோகபூர்வப் பணிகள் நடைபெற்றன. 83 திணைக்களங்கள் ஊடாக அன்றைய தினம் பொதுமக்களுக்குபல்வேறுபட்டசேவைகள்ஆற்றப்பட்டன. ஒட்டுமொத்தமாக 4 ஆயிரத்து 137 பிரச்சினைகள்அடையாளம்காணப்பட்டன. அவற்றில் 3 ஆயிரத்து 422 பிரச்சினைகள் தீர்த்துவைக்கப்பட்டன. 635பிரச்சினைகள் உரியதிணைக்களங்களுக்குப்பாரப்படுத்தப்பட்டன. (ம-173)

# இளைஞர்களின் எழுச்சியால்தான் குற்றங்களைக் கட்டுப்படுத்தலாம்

## சாவ. பிரதேச சபைத் தவிசாளர் வாமதேவன் இப்படித் தெரிவிப்பு

**கொடிகாமம் ஒக்.22**

**கிராம மட்டங்களில் ஏற்படக்கூடிய இளைஞர்களின் எழுச்சியால்தான் சமூக விரோதச் செயல்களையும், குற்றச் செயல்களையும் கட்டுப்படுத்த முடியும் என்று தெரிவித்தார் சாவக்சேரிப் பிரதேச சபைத் தவிசாளர் க.வாமதேவன்.**

கைதடிமேற்கு சனசமூக நிலையத்தின் பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும் அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் கலந்துகொண்டு தலைமை உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது: ஒரு சனசமூக நிலையத்தை இயக்குவதற்கும் நிர்வகிப்பதற்கும் இளைஞர்கள் முன்வருவது குறைவாகவுள்ளது. இதனால் பல்வேறு நிர்வாகச் சிக்கல்களும் ஏற்படுகின்றன. தலைமைத்துவப் பண்புகள் பாடசாலைகளில் வழங்கப்படுவதால் அதனை மேம்படுத்தும் வகையில் இளைஞர்கள் சனசமூக நிலையங்களில் நிர்வாகத்தைப் பொறுப்பெடுத்து நடத்த வேண்டும். இவ்வாறு பொறுப்பை எடுத்து நடத்தும் போது அங்கு கிடைக்கும் தலைமைத்துவப் பண்புகள், நிர்வாகத் திறமை, மக்களுடன் பழகும் தன்மை போன்றவை அவர்களின் எதிர்காலத்தில் மிகப்பெரும் தாக்கத்தைச் செலுத்தவல்லன. ஒவ்வொரு கிராமத்திலும் இளைஞர் சமூகம் அங்குள்ள நடவடிக்கைகளைக் கண்காணித்துச் செயற்பட்டால் அந்தக் கிராமத்தில் எந்தவொரு சமூக விரோதச் செயல்களும் இடம்பெறுவதைத் தவிர்க்க முடியும் - என்றார்.

இந்த நிகழ்வில் நடப்பு வருட நிர்வாகிகள் தெரிவும் இடம்பெற்றது. தலைவராக சி.கஜந்தன், செயலாளராக சி.சுவர்ணன், பொருளாளராக சி.சக்திவேல் ஆகியோரும் எட்டு நிர்வாகக் குழு உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். (ம-159,9)

## வாணி விழாக்கள்

### சாவ. ப.நோ.கூ. சங்கம்



சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் கடந்த 19ஆம் திகதி வெள்ளிக்கிழமை வாணி விழா இடம்பெற்றது.

### தென். வலய நலன்புரிச் சங்கம்



தென்மராட்சி கல்வி வலய நலன்புரிச் சங்கத்தில் கடந்த 19ஆம் திகதி வெள்ளிக்கிழமை வாணி விழா இடம்பெற்றது.

### குப்பிளான் தாயகம் கல்வி நிலையம்



யாழ். குப்பிளான் தாயகம் கல்வி நிலையத்தின் வாணி விழா நிகழ்வு நேற்றுமுன்தினம் பிற்பகல் 3 மணியளவில் தாயகம் முன்றலில் தாயகம் கல்வி நிலையத்தின் நிர்வாக இயக்குநர் றயிந்தன் தலைமையில் நடைபெற்றது. யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன், வட மாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன், குப்பிளான் விக்னேஸ்வரா மகா வித்தியாலய அதிபர் க.காராளசிங்கம், கன்னிமார் கௌரி அம்பாள் ஆலயத்தலைவர் சோ.பரமநாதன் ஆகியோரும் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

### கைதடி குருசாமி வித்தியாலயம்



கைதடி குருசாமி வித்தியாலய வாணி விழாவும் ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களுக்கு மதிப்பளிக்கும் நிகழ்வும் கடந்த வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றன. வித்தியாலய இந்து மாணவர் மன்றத் தலைவர் இ.அனிஸ்ரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபனும் சிறப்பு விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய ஆரம்பப் பிரிவு சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் எஸ்.சிவதாசனும் மதிப்புறு விருந்தினராக ஓய்வுபெற்ற அரச அலுவலர் திருமதி ப.செல்லத்துரையும் கலந்து கொண்டனர்.

### வில்சன் சனசமூக நிலையம்




மட்டுவில் வில்சன் சனசமூக நிலையத்தின் வாணிவிழா நிகழ்வுகள் கடந்த 18ஆம் திகதி மாலை 5 மணிக்கு இடம்பெற்றன. மாணவர் மதிப்புறுத்தல் நிகழ்வுகளும் அதில் இடம்பெற்றன. (ம-9,159,17,288)

## புலமைப்பரிசில் முடிவுகள் சில

**மட்டுவில் தெற்கு அ.மி.த.க.பா**
சு.தணிகன் - 174
பா.பவிந் - 172

**கச்சாய் அ.த.க.பா.**
ரி.தனுசயன் - 174
நே. தமிழ்வாணன் - 169.
(ம-159)



வடக்கு மாகாண விவசாய அமைச்சால் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளில் ஒரு தொகுதியினருக்கு வடக்கு மாகாண விவசாய அமைச்சர் க.சிவநேசனின் நிதி ஒதுக்கீட்டில் வாழ்வாதார உதவிகள் வழங்குகின்ற நிகழ்வு சாவகச்சேரி கால்நடை சுகாதார வைத்திய பணிமனையில் நேற்றுமுன்தினம் காலை 9 மணிக்கு இடம்பெற்றது. (ம-159,9)

## சுகாதார பரிசோதனை

யாழ்ப்பாணம், ஒக். 22
காலாவதியாகும் திகதி முடிவடையும் முன்னர் பழுதடையும் தன்மையில் உள்ள உணவுகள் சில நெல்லியடிப் பகுதிகளில் உள்ள பலசரக்குக் கடைகளில் நேற்று அவதானிக்கப்பட்டுள்ளன.

நெல்லியடி பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ரவிவர்மன் மற்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பயிலுநர்களால் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையிலேயே அத்தகைய உணவுப் பொருள்கள் அவதானிக்கப்பட்டன. அத்தகைய உணவுப் பொருள்கள் மீட்கப்பட்டு மேலதிகப் பரிசோதனைக்காக கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டன. (ம-422)

## மிருசுவில் றோ.க.த.க.பாடசாலையின் ஆசிரியர் தினக் கொண்டாட்டங்கள்



கொடிகாமம் ஒக் 22
மிருசுவில் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையின் ஆசிரியர் தினவிழா அண்மையில் பாடசாலை மாணவர்களின் ஒழுங்கமைப்பில் நடைபெற்றது.
விழாவில் விருந்தினராக தென்மராட்சி வலயக்கல்வி பணிமனையின் ஆசிரிய ஆலோசகர் க.சந்திரகுமார் கலந்து கொண்டார். ஆசிரியர்கள் மாணவர்களால் மதிப்புறுத்தப்பட்டதுடன் மரநடுகை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (ம-159)

## முதியோருக்கு விளையாட்டுப் போட்டிகள்

கிளிநொச்சி, ஒக். 22
பன்னாட்டு முதியோர் தினத்தையொட்டி கிளிநொச்சி மாவட்ட முதியோர்களுக்கான மாவட்ட நிலை விளையாட்டுப் போட்டிகள் இன்று திங்கட்கிழமை காலை 9 மணி தொடக்கம் கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவாளர் மண்டப வளாகத்தில் நடைபெறவுள்ளன, மாவட்டத்தில் உள்ள நான்கு பிரதேச செயலகப் பிரிவுகளில் நடைபெற்ற முதியோர் விளையாட்டுப் போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்கள் மாவட்ட நிலைப் போட்டிகளில் பங்குபற்றவுள்ளனர். (ம-9)



சாவகச்சேரி தேவாலய சாலையில் உள்ள ரீ.பீ.ஹன்ட் நினைவு ஓவியக்கூடத்தில் நேற்றுமுன்தினம் ஓவியங்களின் காட்சிப்படுத்தல் இடம்பெற்றது. வவுனியா புதுக்குளத்தைச் சேர்ந்த புருஷோத்தமன் குணேஸ், மற்றும் யாழ்ப்பாணம் உரும்பிராயைச் சேர்ந்த செல்வகுமார் திலக்ஸன் ஆகியோரின் படைப்புக்களே அவ்வாறு காட்சிப்படுத்தப்பட்டன. (ம-9,159)



## புதிதாகப் பாலம் அமைப்பு

கிளிநொச்சி.ஒக் .22

கிளிநொச்சி இராமநாதபுரம் வட்டாரத்தின் மூன்றாவது பெட்டிப் பாலம் அமைக்கும் நடவடிக்கைகள் இராமநாதபுரம் ஆறு சந்திக்கு அருகாமையில் நேற்றுக் காலை 10 மணியளவில் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் மற்றும் கரைச்சி பிரதேச சபையின் உப தவிசாளர் சி.தவபாலன் ஆகியோரால் நாள் கல் நடப்பட்டு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பாலம் கரைச்சி பிரதேச சபையின் 7இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் நடைபெறுகின்றது.

# வீதியை மறித்த கடற்படையால் முள்ளிக்குளத்தில் பதற்றம்

## மக்களின் எதிர்ப்பைத் தொடர்ந்து மீளத் திறப்பு

**முள்ளிக்குளம்,ஒக் .22**

**முள்ளிக்குளம் கிராமத்திற்கு கடற்படை முகாமினூடாகச் செல்லும் பிரதான வீதியை, திடீர் எனக் கடற்படையினர் முட்கம்பிகள் கொண்ட வேலியால் இடை மறித்து அடைத்தமையினால் நேற்றுக் காலை முதல் கடற்படையினருக்கும்,முள்ளிக்குளம் கிராம மக்களுக்கும் இடையில் தர்க்க நிலை ஏற்பட்டது. அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட பிரச்சினை சுமூக நிலைக்கு கொண்டு வரப்பட்டுள்ளதாகவும் முள்ளிக்குளம் பங்குத்தந்தை அருட்தந்தை லோரான்ஸ் லியோ தெரிவித்தார்.**

குறித்த சம்பவம் தொடர்பாக முள்ளிக்குளம் பங்குத்தந்தை அருட்தந்தை லோரான்ஸ் லியோ மேலும் தெரிவிக்கையில் :

முள்ளிக்குளம் பகுதியில் மூன்று மாதங்களுக்கு முன்னர் 77 ஏக்கர் காணிகள் விடுவிக்கப்பட்டன.

இந்த நிலையில் காணிப் பகுதிக்குச் செல்லும் பிரதான வீதிகளை நேற்று முந்தினம் தொடக்கம் கடற்படையினர் இடைமறித்து முட்கம்பிகளினால் வேலிகள் அடைத்து மக்களை உள்ளே செல்ல விடாது மறி த்து வந்துள்ளனர்.

முள்ளிக்குளம் ஆலயத்தில் நேற்றுக் காலை திருப்பலி நிறைவடைந்த நிலையில் மக்கள் மீண்டும் திரும்பிச் செல்லகின்றபோது கடற்படை முகாமில் இருந்த கடற்படையினர் குறித்த வீதிகளினூடாக சென்ற மக்களை இடைமறித்தனர் .



இதனால் கடற்படையினருக்கும், முள்ளிக்குளம் மக்களுக்கும் இடையில் தர்க்க நிலை ஏற்பட்டது.

சம்பவம் இடம் பெற்றுக் கொண்டிருந்த போது எதிர்பாராத விதமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறீஸ்கந்த ராஜா மற்றும் நானாட்டான் பிரதேச சபையின் தலைவர், உறுப்பினர்கள் முள்ளிக்குளம் பகுதிக்கு வருகை தந்திருந்தனர்.

இதனால் சிறிது நேரம் மக்களுக்கும் கடற்படையினருக்கும் இடையில் தர்க்க நிலை ஏற்பட்டது.

உயர் அதிகாரியிடம் இருந்து வந்த உத்தரவிற்கு அமைவாகவே குறித்த பாதைகளை மூடியதாக தெரிவித்த கடற்படையினர், மக்கள் மற்றும் மக்கள் பிரதி நிதிகளின் எதிர்ப்பைத் தொடர்ந்து மூடி வைத்திருத்த வீதிகளை மீண்டும் மக்களின் பாவனைக்காகத் திறந்து விட்டுள்ளனர்.

(56)



## முதியோர் மதிப்பளிப்பு நிகழ்வு

முல்லைத்தீவு .ஒக் .22

வற்றாநதி மக்கள் நலன் பேணல் அமைப்பின் ஏற்பாட்டில் முள்ளிவளை வற்றாப்பளை கிராமத்தில் உள்ள150 முதியவர்கள் வற்றாப்பளை மாகாவித்தியாலயத்தில் வைத்து மதிப்பளிக்கப்பட்டுள்ளனர்.

வற்றாநதி அமைப்பின் தலைவர்க.விமலதாஸ் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, சிறப்பு விருந்தினர்களாக வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறீஸ்கந்தராசா , வடமாகாண பிரதி அவைத்தலைவர் வ.கமலேஸ்வரன்,கரைதுறைப்பற்று பிரதேச சபை தவிசாளர், உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (ரி3)

## ஆலயங்களுக்கு 22 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு



வவுனியா.ஒக் .22

வவுனியா நகர சபை உறுப்பினரும் தமிழ் ஈழ விடுதலை இயக்கப் பொதுக் குழு உறுப்பினருமான திருமதி லக்ஸ்சனா நாகராஜவினால் ஆலயங்களுக்கான நிதி உதவிகள் நேற்று முன்தினம் வழங்கப்பட்டுள்ளன. நாடாளுமன்ற குழுக்களின் பிரதி அவைத் தலைவர் செல்வம் அடைக்கல நாதனின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் 'கம்பெரலிய வேலைத் திட்டம் 2018' நிதி ஒதுக்கீட்டில் 22 இலட்சம் ரூபா,நிதி ஒதுக்கீட்டில் வேலைத்திட்டங்கள் முன்னெ டுக்கப்பட்டுள்ளதோடு, அதற்கான அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது. வவுனியா வைரவப் புளியங்குளம் ஆதி விநாயகர் ஆலயத்துக்கு 4 இலட்சம் ரூபாவும், குட்செட் வீதி கருமாரி அம்மன் ஆலயத்திற்கு 5 இலட்சம் ரூபாவும், கற்குழி முத்துமாரி அம்மன் ஆலயத்துக்கு 5 இலட்சம் ரூபாவும், சூசைப்பிள்ளையார்குளம் சகாயமாதா ஆலயத்திற்கு 5 இலட்சம் ரூபாவும், பத்தினியார் மகிழங்குளம், தாண்டிக்குளம் முனியப்பர் ஆலயத்திற்கு 3 இலட்சம் ரூபாவும் இவ்வாறு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(56)

## உற்பத்திக் கூட்டுறவுச் சங்கங்களை அமைப்பதற்கு நிதி ஒதுக்கீடு

கிளிநொச்சி ,ஒக். 22

கிளிநொச்சி மாவட்டத்தில் 12 உற்பத்தி கூட்டுறவு சங்கங்களை அமைப்பதற்கு 100 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக மாவட்ட செயலகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

உற்பத்தி கூட்டுறவு சங்கத்தின் கருத்திட்ட செயற்பாட்டிற்கு அமைய வடக்கு மாகாணத்தில் 50 உற்பத்தி கூட்டுறவு சங்கங்களை அமைப்பதற்கு ஆயிரம் மில்லியன் ரூபா நிதி வரவு செலவு திட்ட நிதியில் இருந்து ஒதுக்கப்பட்டுள்ளது. இதற்காக திருவையாறு விவசாயிகள் சுட்டுறவு சங்கம், முழங்காவில் விவசாயிகள் கூட்டுறவு சங்கம், கரைச்சி தெற்கு மற்றும் வடக்கு விவசாயிகள் கூட்டுறவு சங்கம், அக்கராயன் விவசாயிகள் கூட்டுறவு சங்கம் போன்றவற்றின் ஊடாக அப்பள ஆலை, இயற்கை உரம் தயாரிப்பு, பழரசம் மற்றும் ஜாம், இலைகளையும் பழங்களையும் பதப்படுத்தல், நவீன வசதிகளுடன் கூடிய வெதுப்பகங்கள் போன்றவை அமைக்கபடவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (6)



## வடமாகாணசபை உறுப்பினரால் உதவிவழங்கல்

வவுனியா.ஒக் .22

வடமாகாணசபை உறுப்பினர் மயில்வாகனம் தியாகராசாவின் குறித்தொதுக்கப்பட்ட மூலதன நன்கொடை நிதியிலிருந்து கனகராயன்குளம் வடக்கு லக்சபானாவீதி,பெரியகுளம் காளிகோயிலுக்கு ஐம்பதாயிரம் ரூபாவும், கொல்லர்புளியங்குளம் சிறி முத்துமாரி அம்மன் ஆலயத்துக்கு ஐம்பதாயிரம் ரூபாவும் ,பிரதான மின் இணைப்பு வழங்குவதற்காக இருபதாயிரம் ரூபாவும், பெரியகுளம் பாலையடிப்பிள்ளையார் ஆலயத்திற்கும், வைரவபுளியங்குளம் கிராம அபிவிருத்திச் சங்கத்துக்கும் ஐம்பதாயிரம் ரூபா பெறுமதியான தளபாடங்களும் கடந்த 10 ஆம் திகதி வழங்கிவைக்கப்பட்டுள்ளன.

## உளநல தினத்தை முன்னிட்டு வவுனியாவில் சிறப்புக் கருத்தரங்கு

வவுனியாவைச் சுற்றி நடைபெறும் அசாதாரண நிகழ்வுகள் பற்றியும், அதனுடைய தாக்கம் பற்றியும் விழிப்புணர்வு உண்டாக்கும் கருத்தரங்கு ஒன்று நடைபெற்றது. வவுனியா பிரதேசசெயலகம் ,ஈசி மிசனின் முதன்மை அனுசரணையுடன் நடத்திய குறித்த உளநல கருத்தரங்கு வவுனியா நகரசபை மண்டபத்தில் நேற்றுமுன்தினம் காலை 9.30 மணிக்கு இடம் பெற்றது. வவுனியா பிரதேச செயலர் கா.உதயராசா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், மூத்த பொலிஸ் அத்தியட்சகர் எம். தென்னகோன், தெற்குபிரதேசசபை தலைவர் து.நடராயசிங்கம், ஈ.சி.மிஷன் போதகர் என்.ராயசிங்கம், மருத்துவர்சுதாகரன், அருட்தந்தையர்கள், பொதுமக்கள் எனப் பலர்கலந்து கொண்டனர். குறித்தநிகழ்வில் தவறான உயிர்மாய்ப்புக்கள் தொடர்பாக விழிப்புணர்வூட்டப்பட்டதுடன், உளநல ஆலோசனைகளும் வழங்கப்பட்டன. (110)



## நானாட்டானில்
# கட்டாக்காலிகளால் தொடரும் விபத்துக்கள்

**மன்னார்,ஒக். 22**

**நானாட்டான் கடைத்தெரு சுற்று வட்டம் மற்றும் முருங்கன் வீதி அளவக்கை கடைத் தெருக்களில் தினமும் இரவு வேளைகளில் அதிகளவான கால்நடைகள் போக்கு வரத்துக்கு இடையூறாக நடமாடுகின்றன.**

நேற்று முன்தினம் இரவு எட்டு மணியளவில் உந்துருளியில் சென்ற இளைஞர்கள் இருவரும், ஈருருளியில் வந்த முதியவர் ஒருவரும் கால் நடைகளுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளனர்.

கால்நடை வளர்ப்போரின் கவனமில்லாத செயற்பாட்டால், வியாபார நிலையங்களைத் திறப்பதில் வியாபாரிகளுக்கும் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கும், சிரமமாக உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக நானாட்டான் பிரதேச சபையின் உப தவிசாளர் புவனத்திடம் கேட்டபோது :



கால்நடைகளை கவனிப்பின்றி விடுவதால் சாதாரண பொது மக்கள் மிகுந்த சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். கட்டாக்காலியாகத் திரியும் கால்நடைகளை பிடித்து தண்டம் அறவிடப்படும் என்று ஒலி பெருக்கி மூலமாகவும் துண்டறிக்கை மூலமாகவும் அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது. அதையும் மீறி வீதிகளில் இடையூறாகத் திரியும் கால்நடைகளைப் பிடித்துத் தண்டம் அறவிடுவதற்கு நேற்று முதல் நடவடிக்கைளடுக்கப்பட்டுள்ளது என்று உப தவிசாளர் புவனம் தெரிவித்தார். (213)

## கால்நடை வளர்ப்போருக்கு உதவி

முல்லைத்தீவு,ஒக் .22

வடமாகாண விவசாய அமைச்சரின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் இருந்து முல்லைத்தீவு மாவட்டத்தில் கால் நடை வளர்ப்போருக்கு கடந்த 17 ஆம் திகதி உதவிப் பொருள்கள் வழங்கப்பட்டன.



ஒட்டுசுட்டான் கால்நடை மருத்துவ பணிமனையில் நடைபெற்ற நிகழ்வில் 31 பண்ணையாளர்களுக்குப் பால் சேமிப்பதற்கான பாத்திரங்களும் , முள்ளியவளை பகுதியில் அமைந்துள்ள கால்நடை மருத்துவ அதிகாரி பணிமனையில் 29 பண்ணையாளர்களுக்கு உள்ளீடுகளும் வழங்கிவைக்கப்பட்டுள்ளன. (ரி 3)



## உமாமகேசுவரன் நினைவிடத்துக்கு தென்னிலங்கை இளையோர் வருகை

வவுனியா ,ஒக் .22

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் இளைஞர் பரிமாற்ற நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ், வவுனியாவுக்கு மொனராகலை விபில பகுதியிலிருந்து வந்துள்ள 30 இளையோர் கடந்த 15 ஆம் திகதி மாலை 3.30 மணியளவில் வவுனியா கோவில்குளத்தில் அமைந்துள்ள புளொட் அமைப்பின் செயலதிபர் அமரர் க.உமாமகேசுவரன் நினைவிடத்துக்கும் சென்றனர் .

இதன்போது சமகால அரசியலில் கட்சியின் செயற்பாடு குறித்தும், இளைஞரணியின் செயற்பாடுகள் குறித்தும், இளைஞர் சேவைகள் மன்றத்தின் மூலமாக கடந்த காலங்களில் செயற்பட்ட விதம் குறித்தும் கலந்துரையாடப்பட்டது. தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் மாவட்ட இளைஞர் கழக சம்மேளனத்தின் தலைவராகக் கடந்த காலங்களில் செயற்பட்ட சு.காண்டீபன் தனது அரசியல் பிரவேசத்தில் இளைஞர் கழகத்தின் பங்களிப்பை எடுத்துக் கூறியதுடன். மாலை நேர விருந்துபசாரத்துடன் நிகழ்வு நிறைவுபெற்றது. (110)



## பட்டாணிச்சூர் மையவாடி துப்புரவாக்கப்பட்டது

வவுனியா,ஒக் .22

பட்டாணிச்சூர் பகுதியில் உள்ள மையவாடி கடந்த 15 ஆம் திகதி துப்பரவாக்கப்பட்டுள்ளது . இன,மத பேதமின்றி, அரசியல் கட்சி வேறுபாடின்றி அனைவரினதும் ஒத்துழைப்புடன் மையவாடி துப்பரவு செய்யப்பட்டது .

இந்தத் துப்பரவுப் பணியில் நகரசபை உறுப்பினர்களான எம். நசூல்லறிப், அப்துல் பாரி ஆகியோர் கலந்துகொண்டதுடன், மையவாடி வளாகத்தில் தென்னங்கன்றுகளையும் நட்டு வைத்தனர். (110)

## புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியின் அதிபராக நேவிற் ஜீவராஜா நியமனம்

முல்லைத்தீவு,ஒக் .22

முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரிக்கு கடந்த நான்கு மாதங்களாக அதிபரை நியமிப்பது தொடர்பான இழுபறி நிலை காணப்பட்டுள்ளது.

நேர்முகத்தேர்வு நடைபெறவுள்ளதாக முல்லை வலயக் கல்விப்பணிப்பாளர் புதுக்குடியிருப்பு பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டத்தில் தெரிவித்திருந்த நிலையில் புதுக்குடியிருப்பின் அதிக மாணவர்களைக் கொண்ட பாடசாலையான புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரிக்கு நேர்முகத் தேர்வு மூலம் நேவிற் ஜீவராஜா கடந்த 17ஆம் திகதி நியமிக்கப்பட்டுள்ளார். (ரி 3)



## திறன் வகுப்பறை கட்டடத்திறப்பு நிகழ்வு

ஐக்கிய இராட்சியத்தின் இரட்ணம் பவுண்டேசன் நிதி உதவியுடன் புதுக்குடியிருப்பு சிறி சுப்பிரமணிய வித்தியாசாலையில் அமைக்கப்பட்ட திறன் வகுப்பறை கட்டடத்திறப்பு நிகழ்வு நாளை செவ்வாய்க்கிழமை பகல் 10 மணிக்கு இடம்பெறவுள்ளது.



## ஏழு சாரணர்களுக்கு அரச தலைவரால் சான்றிதழ்கள்

வவுனியா .ஒக் .22

வவுனியா மாவட்டத்தின் 5 ஆண் சாரணர்களும், 2 பெண் சாரணர்களும் இந்த உயரிய விருதை இலங்கை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவிடம் இருந்து நேற்று முன்தினம் பெற்றுள்ளனர்.

வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய சாரணன் ஞானேஸ்வரன் நவநீதன், விபுலாநந்தா கல்லூரியின் சாரணன் யோகராஜா சதுர்சிகன், ஓமந்தை மத்திய கல்லூரியின் சாரணன் சகாதேவன் சதுசன், தாண்டிக்குளம் பிறமண்டு வித்தியாலய சாரணன் பிரான்சிஸ் கெர்சோன், பூவரசங்குளம் மகா வித்தியாலய சாரணன் கிரிசாந், கூமாங்குளம் சித்தி விநாயகர் வித்தியாலய பெண் சாரணிகளான சுகானி சாமிநாதன், சாரணி தர்சிகா வினோசானி தங்கசாமி, சாரணன் சுந்தரலிங்கம் காண்டீபன் ஆகியோர் பெற்றுக்கொண்டுள்ளனர். (222)

## திருமுறிகண்டி இந்து வித்தியாலய மாணவர்களுக்குப் பொலிஸாரால் உதவி

முல்லைத்தீவு .ஒக் .22

லைக்கா நிறுவனத்தின் அனுசரணையோடு திருமுறிகண்டி இந்து வித்தியாலய மாணவர்களுக்குப் பொலிஸாரால் உதவிகள் வழங்கப்பட்டன.

நேற்றுப் பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்ற நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்டத்தின் எல்லைக்கிராமமான முறிகண்டிப் பகுதியில் உள்ள வறிய குடும்பங்களில் இருந்து கல்வியை தொடரும் மாணவர்களுக்கு முதல் கட்ட உதவிகள் வழங்கி வைக்கப்பட்டன.

இதன்போது 10 மாண்வர்களுக்குப் பாடசாலைச் சீருடை வழங்கி வைக்கப்பட்டதுடன், 25 மாணவர்களுக்கு 2ஆயிரம் ரூபா பணம் வைப்பில் இடப்பட்ட வங்கிக் கணக்குப் புத்தகமும் வழங்கி வைக்கப்பட்டது. (35)



## அபிவிருத்திச் சங்கக் கட்டடத் திறப்பு நிகழ்வு

வவுனியா ,ஒக் .22

வடமாகாணசபை உறுப்பினர் மயில்வாகனம் தியாகராசாவின் முன்மொழிவுக்கு அமைவாக வடக்கு மாகாணசபையின் நிதி ஒதுக்கீட்டில் இருந்து கட்டப்பட்ட கிராம அபிவிருத்திச் சங்கக்கட்டடத் திறப்பு நிகழ்வு கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் ப.சத்தியசீலன் தலைமையில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

நிகழ்வுக்கு முதன்மை விருந்தினர்களாக மயில்வாகனம் தியாகராசா வடமாகாணசபை உறுப்பினர் கா.உதயராசா பிரதேச செயலர் வவுனியா ஆகியோர் கலந்துகொண்டு கட்டடத்தைத் திறந்துவைத்தனர்.



# நிலத்தின் மீதான அதிகாரமே அரசியல் தீர்வின் அத்திபாரம்

## நிலமும் மக்களும் இல்லையெனின் தேசம் இருக்காது: கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தெரிவிப்பு

முல்லைத்தீவு, ஒக். 22

நிலமும் இல்லை மக்களும் இல்லை என்றால் தேசம் இல்லை என்ற நிலை வந்துவிடும். அதுஏற்படாமல்தடுக்க இந்தவேளையிலாவதுநாங்கள்ஒருதீர்மானத்தை எடுக்கவேண்டும். அதனால்தான் பல விமர்சனங்களுக்கு மத்தியிலும் நாங்கள் இன்னமும் முயற்சி செய்துகொண்டிருக்கின்றோம். நிலத்தின் மீதான அதிகாரம் தான் எங்கள் அரசியல் தீர்வின் அத்திபாரம்.



இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 'நிலஅதிகாரமும் அதிகாரப் பகிர்வும்' என்ற சிறப்புப் பேருரை முல்லைத்தீவு ஒட்டுசுட்டான்சிவன்கோவில்வாளகத்தில்நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது. அதில் சிறப்புரையா ற்றிய போது சுமந்திரன் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
மகிந்தராஜபக்சவின்காலத்தில்அனைத்துக்கட்சிகளின் பிரதிநிதித்துவக் குழு இரண்டு தீர்மான வரைவுகளை முன்வைத்தது.
இந்தக் குழுவுக்கு ஆலோசனை கொடுக்கின்ற நிபுணர் குழு கொடுத்த அறிக்கையைப் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தலைமையிலான குழுவே தயாரித்தது.
இரண்டு அறிக்கையிலும் காணி அதிகாரங்கள் மாகாணத்துக்குக்கொடுக்கப்படவேண்டும்என்றுதெளிவாக எழுதப்பட்டுள்ளது. காணி மட்டுமல்ல தண்ணீரைப் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது.
முல்லைத்தீவு மாவட்டத்திலும் வவுனியா மாவட்டத்திலும் மகாவலி தண்ணீரைக் கொண்டுவருகின்றோம் என்றதோரணையில்குடியேற்றங்களைஅரசுசெய்துகொண்டிருக்கின்றது. தண்ணீர் சம்மந்தமான அறிக்கையில் கொழும்பு அரசுக்குப் பங்கு இருந்தாலும் மாகாண அரசுக்கு உரித்து இருக்கவேண்டும் என்பது நிபுணர் குழு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
காணிவிடயத்தில்மகாவலித்திட்டம்வந்தபோதுசுமார் 99 வீதமான குடியேற்றக் காணிகள் பெரும்பான்மையினத்தவர்களுக்கே கொடுக்கப்பட்டுள்ளன.
தேசிய இனப்பரம்பலுக்கு ஒத்தவாறுதான் இந்த காணிகள் கொடுக்கப்படவேண்டும் என்று மகாவலி சட்டத்திலேயே இருக்கின்றது.
ஏதாவது ஒரு பிரதேசத்தில் தேசிய இனப்பரம்பலைப் பேணமுடியாதுபோனால்குறைந்தளவான எண்ணிக்கையாளர்களுக்கு ஏனைய பிரதேசங்களில், வலயங்களில்அதற்குஈடுசெய்கின்றவகையாகக்கொடுக்கப்படவேண்டும் என்றும் அதில் கூறப்பட்டிருக்கின்றது.
அந்தசட்டத்தில்உள்ளபொறிமுறைநடைமுறைப்படுத்தப்பட்டால்இனிவருகின்றவலயங்கள்எல்லாவற்றிலும் தமிழ் மக்களுக்குத்தான் காணி கொடுக்கவேண்டும். ஆனால்இன்றுவரை அதுகடைப்பிடிக்கப்படவில்லை. கடந்த ஓகஸ்ட் மாதத்தில்கூட அது மீறப்பட்டுள்ளது.
முல்லைத்தீவு மாவட்டத்தில் மகாவலி அபிவிருத்தி வலயம் ஊடாகக் குடியிருப்புக் காணிகளுக்கான உரிமப் பத்திரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.
இனப்பரம்பலை மாற்றுகின்ற விதத்தில், இருக்கக்கூடாதுஎன்கின்றயோசனைகள்எல்லாம்ஏற்றுக்கொள்ளப்பட்டதாகத்தான் இருக்கின்றன. ஆனால் அவை ஒன்றுமே நடைமுறைக்கு வரவில்லை. நிலங்கள் பறிபோய்க்கொண்டே இருக்கின்றன.
புதிய அரசமைப்பு வரைவு வரவுள்ளது. அதில் காணி அதிகாரத்தைப் பற்றி என்ன சொல்லப்பட்டிருக்கின்றது என்பது பகிரங்கமாகத் தெரியவரும். அது ஏற்கனவே தெரியவந்த விடயம். அதில் செய்யப்பட்டுள்ள வரைபுகூட கடந்த ஆண்டுசெப்ரெம்பர்மாதம் 23 ஆம் திகதி வெளியிடப்பட்ட இடைக்கால அறிக்கையை ஒத்ததானது என்று சொல்லப்பட்டிருக்கின்ற து. இடை க்கால அறிக்கையில் காணி, தண்ணீர் சம்பந்தமான அதிகாரங்கள் மாகாணசபைக்குஇருக்கவேண்டிய அதிகாரம் பற்றித் தெளிவாகக் கூறப்பட்டுள்ளன.
அதில் அரசகாணிகள் பகிர்ந்தளிக்கப்படுவதற்கான முன்னீர்ப்பு எப்படியாக இருக்கவேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

**காணி பற்றிய கருத்து திருப்தியாக இல்லை**

இதில்காணிசம்மந்தமாகச்சொல்லப்பட்டிருக்கும்கருத்துகள் திருப்திகரமாக இல்லை என்ற தீர்மானத்துக்கு நாங்கள் வந்திருக்கின்றோம். இதில் பல ஓட்டைகள் இருக்கின்றன. வனபாதுகாப்பு, வனவிலங்கு பாதுகாப்பு, தொல்பொருள், மகாவலி என்று ஒருபக்கத்தில் ஓட்டைகள் இருக்கின்றன. இறுதி வரைவில் இந்தத் தீர்வைப் பலப்படுத்த வேண்டும் என்று நாங்கள் தீர்மானித்துள்ளோம்.
அதில் 'மாகாணங்களின் அனுமதி இல்லாமல் காணி அதிகாரங்கள் உபயோகப்படுத்த முடியாது' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.
இன்றைக்கு இருக்கின்ற பிரச்சினை காணி அதிகாரம் தொடர்பிலான இணக்கப்பாடு இன்றுவரை கடதாசியில் எழுத்துமூலமாகவே இருக்கின்றது.
நிலம் பறிபோய்க்கொண்டிருக்கின்றது. மக்களும் நாட்டைவிட்டுபோய்க்கொண்டிருக்கின்றார்கள். அரைவாசி மக்கள் போய்விட்டார்கள்.

**முயற்சியை கைவிடமுடியாது**

இங்குமக்கள்இருந்தால்தான்தேசம்இருக்கும். காலம் இவ்வளவுபிந்திப்போயிருந்தாலும்ஒருதீர்வுவருவதற்கான இறுதிச் சந்தர்ப்பம் இருக்கின்ற வரைக்கும் நாங்கள் முயற்சியைக் கைவிடமுடியாது. அது தோல்விகளைக்கொடுத்தாலும் முயற்சியைக் கைவிடமுடியாது. ஏனென்றால் இது எங்களின் அடிப்படை இருப்பு சம்மந்தப்பட்ட விடயம்.
இந்தத் தீவில் நாங்கள் ஒரு தேசமாக இருக்கின்றோம் என்று புகழ்பாடிக்கொண்டு மட்டும் இருக்கமுடியாது. அது ஒருசரித்திரமாகமாறக்கூடாது. தமிழ்தேசம்இருக்கிறது என்கிறதாக இருக்கவேண்டும்.
அதற்குநிலம்மீதான அதிகாரம்பகிரப்பட்ட அதிகார அலகுக்குக்கொடுக்கப்பட்டதாகஇருக்கவேண்டும். கொடுக்கமுடியாதுஎன்றுஎவரும்எந்தகாலத்திலும்சொன்னது கிடையாது. கொடுக்கவேண்டும் என்றுதான் எல்லோரும் எழுதி வைத்துள்ளார்கள். நடைமுறைக்கு கொண்டுவரவில்லை.
அதனை நடைமுறைக்குக் கொண்டுவருவதற்கான இறுதியான சந்தர்ப்பத்தைப் போல இன்னும் ஒரு ஆண்டாடோரண்டு ஆண்டுகளா என்று இருக்கின்ற காலகட்டத்தில் இதனை எப்படியாவது கொண்டுவரலாமா என்ற முயற்சியில் நாங்கள் ஈடுபட்டிருக்கின்றோம். ஏனென்றால் நிலத்தின் மீதான அதிகாரம்தான் எங்கள் அரசியல்தீர்வின் அத்திவாரம் - என்றுநாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் மேலும் தெரிவித்துள்ளார்.

(4,ரி3)

# தீர்வுசாத்தியப்படுமாயின் அது மக்களுக்குரியதாக வேண்டும்

வவுனியா, ஒக். 22

இலங்கை அரசுடன் இணைந்து தமிழ்மக்களுக்குத்தீர்வுகாண்பது எதிர்காலத்தில் சாத்தியப்படும் என்றால் நிச்சயமாக அது தமிழ் மக்களுக்குரிய தீர்வாக இருக்க வேண்டும். தனியாகஒருகட்சிக்குரியதோ அல்லது தனிநபருக்கான தீர்வாகவோ இருக்கக்கூடாது என்று ஈழப்புரட்சிஅமைப்புதெரிவித்தது.
வவுனியா பூந்தோட்டத்தில் அமைந்துள்ளஅமைப்பின்அலுவலகத்தில் கட்சியின் பொதுக்குழு கூட்டமும்நிர்வாகதெரிவும்நேற்று நடைபெற்றது. அதன்பின்னர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:
பொதுமக்களை அணிதிரட்டி அதன் ஊடாக அரசியல் உரிமைகளை வென்றெடுக்கலாம் என்ற நம்பிக்கையில் தொடர்ந்து பயணிப்போம். தமிழ் மக்கள் தெளிவான ஒரு அரசியல் பாதையை தேர்ந்தெடுக்க வேண்டிய நேரம் நெருங்கிவிட்டதை உணர்கின்றோம். அடுத்த கிழமையோடு நிறைவுக்கு வருகின்ற வடக்கு மாகாணசபை இதுவரை என்ன செய்திருக்கிறது என்று கேட்டாலும், அதுதமிழ்மக்களுக்குதுரோகம் செய்யவில்லை என்று ஒரு வார்த்தைமட்டும்உதிர்த்துவிட்டுச் செல்லலாம்.
அரசியல் நகர்வுபற்றி வடக்கு மாகாண முதலமைச்சர் காத்திரமான பதிலை எந்த இடத்திலும் கூறவில்லை. முதலமைச்சர் மீது நம்பிக்கையைவைத்துஇருக்கின்றார்கள். அந்த நம்பிக்கையைச் சிதைக்காதவண்ணம்ஈழப்புரட்சி அமைப்பு செயற்படும்.
மக்கள் நலனில் அக்கறை கொண்டகட்சிகளோடுஇணைந்து மக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய அல்லது மக்கள் விரும்புகின்ற அரசியல், ஜனநாயகஉரிமைகளைப் பெற்றுக்கொள்ள எமது அமைப்பு தொடர்ந்து பயணிக்கும்.
ஒற்றையாட்சியின் கீழ் தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு தீர்வை எட்ட முடியாது என்பதில் நம்பிக்கை கொண்டுள்ளோம் - என்று தெரிவித்தனர்.

(4,110)

### வவுனியாவில்

# அங்காடி வியாபாரிகளை தவிசாளர் அச்சுறுத்தினாரா?



வவுனியா, ஒக். 22

வவுனியாவில்வீதியோரம்உடைகளை விற்ற அங்காடி வர்த்தகர்களைநகரசபைத்தவிசாளர்அச்சுறுத்தினார் என்று வியாபாரிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.
"தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு உடைகள் விற்பனையில் ஈடுபட்டிருந்தபோது அங்கு வந்த தவிசாளர் இ.கௌதமன், தகாத வார்த்தைகளால் திட்டினார் என்றும், இந்த இடத்தில் வியாபார நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு உங்களுக்கு யார் அனுமதியளித்தார்கள்? என்றும் கேட்டுக் கோபத்துடன்நடந்துகொண்டுள்ளார்" என்று அங்காடி வியாபாரிகள் குற்றஞ்சாட்டினர்.
இது தொடர்பில்நகரசபைத்தவிசாளர்இ.கௌதமனிடம்கேட்டபோது அவர் தெரிவித்ததாவது:
அங்காடிவியாபாரிகளுக்கெனஓர் இடம்கட்டிக்கொடுக்கப்பட்டுள்ளது. தீபாவளி என்றவுடன் அவர்கள் வீதிக்கு இறங்கி வீதியோரங்கள், மதகுகளை அண்மித்து உடைகளை விற்பனை செய்கின்றனர். அதற்கு அவர்களுக்கு அனுமதி வழங்கப்படவில்லை. அவர்கள் விற்பனையின்போதுகழிவுகளை மதகுகளுக்குள்போட்டுவிடுகின்றனர். அது இடைஞ்சல். அதனால் தான் அங்குவிற்பனைசெய்யமுடியாது என்று கூறினேன். அவர்கள் கேட்கவில்லை. நாளை(இன்று) திங்கட்கிழமைஉரியநடவடிக்கை எடுக்கப்படும்" என்றுதெரிவித்தார்.

(4)

# சங்கத்தானையில் பாரதி விழா



கொடிகாமம், ஒக். 22

சாவகச்சேரி கம்பன்கழகம் நடத்திய பாரதிவிழா சங்கத்தானை தமிழ்கோட்டமண்டபத்தில்நேற்று முன்தினம்மாலைநடைபெற்றது. யாழ்ப்பாணக் கல்வி வலய முன்னாள் வலயக் கல்விப் பணிப்பாளர் ந.தெய்வேந்திரராஜா தலைமையில் இது நடைபெற்றது.
நிகழ்வில் "அக்கினிக்குஞ்சு" எனும் தலைப்பிலான எழிலுரையை வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் மன்றத் தலைவர் "தமிழ்மணி" அகளங்கன் ஆற்றினார்.
"பாரதியயைப்பெரிதும்கவர்ந்தவர்கள்தேசத்தலைவர்களா தெய்வீக ஞானியர்களா எனும் தலைப்பில் சிறப்புப் பட்டிமன்றம் நடைபெற்றது.

(159,9)

# காணி அபகரிப்பு, வேற்றின குடியேற்றத்தை சட்டம், போராட்டத்தினூடாகவே நிறுத்தலாம்!

## கிழக்கின் முன்னாள் காணி ஆணையாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 22

இலங்கை அரசின் திட்டமிட்ட குடியேற்றம், காணி அபகரிப்பு போன்றவற்றைச் சட்டத்தின் ஊடாகவும் அகிம்சைப் போராட்டத்தின் ஊடாகவும் தடுத்து நிறுத்த முடியும் என்று கிழக்கு மாகாண முன்னாள் காணி ஆணையாளர் க.குருநாதன் தெரிவித்தார்.

தமிழ்த்தேசியப்பசுமைஇயக்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற 'சூழல் அரசியலும் நில அபகரிப்பும் யுத்தத்தின் பச்சைமுகம்' என்ற கருத்தாடலில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மகாவலிஎல்வலயம், கெவுழுஓயாத்திட்டம் ஊடாகக் காணி ஆக்கிரமிப்பு நடைபெறுகின்றது. கெவுழுஓயா ஊடாக 5 ஆயிரம் சிங்களவர்களை குடியேற்றத் திட்டமிட்டுள்ளனர். அதில் 2 ஆயிரம் பேரைக் குடியேற்றிவிட்டனர். அவர்கள் அங்கு விவசாயம் செய்கின்றனர். ஆனால் அரசதலைவர் மைத்திரி அப்படியொன்றும் இல்லை என்கின்றார். அப்படியானால் அவருக்கு இது தெரியாதா? அங்கு குளமே கட்டவில்லை ஆனால் குடியேற்றம் செய்துவிட்டனர்.

அதற்காக 7 ஆயிரம் மில்லியனுக்கு அதிகமான பணம் செலவிடப்படுள்ளது. இவ்வளவு பணம் இலங்கை அரசிடம் இல்லை. அப்படியானால் உலக நாடுகளே பணம் கொடுக்கவுள்ளனர். எனவே நாம் உலக நாடுகளின் முக்கியஸ்தர்களிடம் இவ்வாறான இன முறுகலை ஏற்படுத்தக் கூடிய திட்டங்களுக்கு நிதி உதவி செய்யவேண்டாம் என்று எடுத்துக்கூற வேண்டும்.

மேலும் திட்டமிட்ட காணி அபகரிப்புக்கு எதிராக நாம் சட்ட நுணுக்கம் ஊடாக வழக்குத் தாக்கல் செய்து தடுத்து நிறுத்த முடியும். இவ்வாறு கிழக்கு மாகாணத்தில் சில சந்தர்ப்பங்களில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு காணி அபகரிப்பு தடுத்து நிறுத்தப்பட்டன. எனவே நாம் சட்டத்தின் ஊடாகவும், அகிம்சைப் போராட்டத்தின் ஊடாகவும் திட்டமிட்ட காணி அபகரிப்பைத் தடுத்து நிறுத்த வேண்டும். அதற்கு நாம் தயாராக வேண்டும் - என்றார்.

வடக்கு மாகாண சபை உறுப்பினர் பொ.ஐங்கரநேசன் தனது உரையில் தெரிவித்ததாவது:

உலக நாடுகளில் உள்ளவர்கள் போர் முடிந்துவிட்டது என்று நினைக்கலாம், ஆனால் போர் முடிந்தாலும் சத்தமில்லாத போர் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. குண்டுச்சத்தங்கள், குருதிக் கொப்பளிப்புக்கள் இல்லை. ஆனால் எம்மீது மௌனப் போர் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. எமது நிலம், இனம் திட்டமிட்ட முறையில் அபகரிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. வனவளத்திணைக்களம், தொல்பொருள்திணைக்களம் ஊடாக எமது நிலங்கள் காவுகொள்ளப்படுகின்றன - என்றார். (4,8)

---

### சாவகச்சேரிப் பிரதேச சபையின் உத்தேசவரவு-செலவுத்திட்டத்தில் 5 லட்சம் ரூபா வறுமை ஒழிப்புக்கு

*31 பங்காகப் பிரித்து வழங்கப்படவுள்ளது*

கொடிகாமம், ஒக். 22

சாவகச்சேரிப் பிரதேச சபை இந்த வருட உத்தேச வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ஒதுக்கீடுசெய்த 5 லட்சம் ரூபா பணம் வறுமை ஒழிப்புக்குப் பயன்படுத்தப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

குறித்த நிதியை அனைத்து உறுப்பினர்களுக்கும் சமமாகப் பிரிக்க வேண்டுமென்று உறுப்பினர்கள் கோரினர். அதனால் நிதி 31 பகுதிகளாகப் பிரித்து வறுமை ஒழிப்புத் திட்டத்தில் உதவிகள் வழங்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

சாவகச்சேரிபிரதேசசபையின் அமர்வு கடந்த திங்கட்கிழமை நடைபெற்றபோது உரையாற்றிய தவிசாளர், சபையின் உத்தேசவரவு-செலவுத்திட்டத்தில் வறுமை ஒழிப்புக்கென 5 லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த நிதியை சபையின் 17 வட்டாரங்களில் வறுமை நிலையில் உள்ள குடும்பங்களைத் தெரிவு செய்து அவர்களின் தேவைகளை இனங்கண்டு முன்னுரிமை அடிப்படையில் அதற்கான நிதியை வழங்க வேண்டும். சபையினர் ஒப்புதல் வழங்கி தீர்மானமாக நிறைவேற்றினால் முதலமைச்சர் செயலகத்துக்கு அனுப்பி அனுமதி கிடைத்ததும் பயனாளிகளுக்கு வழங்க முடியுமென்று தெரிவித்தார்.

அதற்கு சபை உறுப்பினர்கள், "நாங்களும் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளே. எமது பகுதியிலும் வறுமை நிலையில் பலர் உள்ளனர். ஒதுக்கப்பட்ட 5 லட்சம் ரூபாவைச் சமமாகப் பிரித்து வழங்க வேண்டும்" என்று கோரியிருந்தனர்.

இதன் பிரகாரம் ஒரு உறுப்பினருக்குதலா 16 ஆயிரத்து 129 ரூபா கிடைக்குமென்று தவிசாளர் தெரிவித்தார்.

உறுப்பினர்கள் பயனாளியின் தேவைகளை இனங்கண்டு தேவைக்கான நிதி போதாதெனில் மிகுதிப்பணம் பயனாளியின் பங்களிப்புடன் நிறைவேற்றப்பட வேண்டும் என்று கூறப்பட்டது.

குறிப்பாக தையல் இயந்திரம் மூலமாக வாழ்வாதாரத்தை அதிகரிக்க முற்படும் குடும்பத்துக்கு மேலதிகமாக தேவைப்படும் நிதியை பயனாளியிடம் பெற்று தேவைக்கு வழங்க வேண்டும்.

தென்மராட்சிப் பிரதேசத்தில் கடந்த 10 வருடங்களுக்கு மேலாகப் பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு கால்நடைகள் கோழிகள் போன்றன பயனாளிகளுக்கு வழங்கப்பட்டன. அவை மழை மற்றும் வெயில் காலங்களில் உயிரிழந்துவிட்டன. பயனாளிகளுக்கு உரிய பயன்கிட்டவில்லை.

எனவே மேசன், தச்சுவேலை உபகரணங்கள், ஈருருளியில் வியாபாரம் செய்வோருக்கு ஈருருளிகள் உள்ளிட்டவற்றை வழங்க உறுப்பினர்கள் உடனடியாகப் பயனாளிகளின் பெயர்களை வழங்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

யாழ்ப்பாணப் பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளர் அண்மையில் உள்ளூராட்சிசபைகளுக்கு அனுப்பிய சுற்றறிக்கையில், எந்தவொரு நிதிஒதுக்கீடும் வட்டாரத்துக்கே தவிர உறுப்பினர்களுக்கு அல்ல என்று குறிப்பிட்டுள்ளார். (4,159,9)

---

### 10 வருடங்களாக இடமாற்றமின்றி 30 ஆசிரியர்கள் வவுனியாவில்

*உரிய நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை*

வவுனியா, ஒக். 22

வ்வுனியா வடக்குக் கல்வி வலயப் பிரிவில் குறிக்கப்பட்ட பாடசாலைகளில் மட்டும் 30 ஆசிரியர்கள் 10 வருடங்களுக்கு மேலாக இடமாற்றமின்றிக் கடமையாற்றுகின்றனர் என்று தகவலறியும் உரிமைச் சட்டம் ஊடாகத் தெரியவந்துள்ளது.

அதனால் வசதியான பாடசாலைகளுக்கு வேறு ஆசிரியர்கள் இடமாற்றம் பெறுவது கடினமாக உள்ளது.

இது தொடர்பாக வடக்கு மாகாண ஆளுநர், வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் எஸ். சத்தியசீலன் ஆகியோரின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது. ஆளுநரின் பணிப்புக்கு அமைய வவுனியா வடக்கு கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலைகளில் 10 வருடங்களுக்கும் மேல் கடமையாற்றுபவர்களை உள்ளக இடமாற்றம் செய்யுமாறு அமைச்சின் செயலாளர் வவுனியா வடக்குக் கல்விப் பணிப்பாளருக்கு அறிவித்திருந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

ஆனால் உயர்தர மாணவர்களின் ஆசிரியர் தேவை மற்றும் 50 வயதுக்கு மேற்பட்டவர்கள் எனும் காரணங்களைக் காட்டி வவுனியா வடக்குக் கல்வி வலயத்தினர் ஆசிரியர்களுக்கு இடமாற்றம் வழங்கவில்லை என்று சுட்டிக் காட்டினர்.

இது தொடர்பாகப் பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் தெரிவித்ததாவது:

குறித்த ஆசிரியர்கள் அதிபர் மற்றும் வலயக் கல்விப் பணிப்பாளர் ஆகியோரின் செல்வாக்கின் அடிப்படையில் கடமையாற்றுகின்றனர். இது தொடர்பாக வடக்கு மாகாண ஆளுநர், கல்வி அமைச்சின் செயலாளர் மற்றும் வலயப் பணிப்பாளர் ஆகியோர் கவனத்தில் எடுத்து தகுந்த தீர்வைப் பெற்றுத் தரவேண்டும் என்று கோருகின்றனர்.

இது தொடர்பில் அமைச்சின் செயலரின் பதிலைப் பெறமுடியவில்லை. (4,422)

---

### வடக்கு கல்வி அமைச்சு இயங்கும் காணியை விடுவிக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 22

வடக்கு மாகாணக் கல்வி அமைச்சு இயங்கும் நிலம் தமக்குரித்தானது எனவே அதனை மீள ஒப்படைக்குமாறு இலங்கைத் திருச்சபையினர் கொழும்பு கல்வி அமைச்சைக் கோரியுள்ளனர்.

யாழ்ப்பாணம் செம்மணி வீதியில் அமைந்துள்ள வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் அலுவலகம் மற்றும் பாடசாலை உள்ளிட்ட வளாகம் இலங்கைத் திருச்சபைக்குச் சொந்தமானது. வளாகம் பாடசாலைத் தேவைக்காக 1960ஆம் ஆண்டு கையளிக்கப்பட்டது. பின்னர் வலயம், மாகாணம் என்று அனைத்து அலுவலகங்களும் உட்புகுத்தப்பட்டுத் தற்போது பாடசாலையின் பெயரும் அழிக்கப்படும் நிலைமைக்கு இட்டுச் சென்றுள்ளது.

எனவே திருச்சபைக்குரிய காணியை மீளவும் ஒப்படைக்க வேண்டும் என்று சபையின் ஆயர் லியோராஜ் கனகசபை கொழும்பு கல்வி அமைச்சரிடம் கோரியுள்ளார். கோரிக்கையைப் பரிசீலித்து ஆராய்ந்து தனக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு கொழும்பு கல்வி அமைச்சர் தனது செயலாளருக்குப் பணித்துள்ளார் என்று குறித்த சபையின் யாழ்ப்பாண அங்கத்தவர்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலனிடம் கேட்டபோது,

"குறித்த விடயம் தொடர்பில் இதுவரை எவரும் எம்மிடம் எந்தத் தொடர்பையும் பேணவில்லை. கொழும்பு கல்வி அமைச்சிடம் இருந்தும் எந்தவிதமான தகவலும் கிடைக்கப்பெறவில்லை" என்றார். (4,105)

---

### யாழ். நல்லூரிலிருந்து கதிர்காமம்வரை திருத்தலத் தரிசன யாத்திரை ஆரம்பம்

யாழ்ப்பாணம் நல்லூர் கந்தன் ஆலயத்தில் ஆரம்பித்து கதிர்காமம் ஆலயம் வரையான புனித திருத்தல தரிசன யாத்திரை நாளைமறுதினம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

நல்லூர் கந்தன் ஆலயத்திலிருந்து காலை 7 மணிக்கு யாத்திரை ஆரம்பமாகி முதன்மை வீதியூடாகக் கைதடிப் பிள்ளையார் கோவிலைச் சென்றடையும். தொடர்ந்து பரந்தன் முல்லைத்தீவு வீதி வழியாக புளியம் பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்தைச் சென்றடையும் பின் வற்றாப்பளை கண்ணகி அம்மன் கருந்தூர்மலை, நெடுங்கேணி வெட்டுக்குநாரி மலை சிவன், பழனிமலை முருகன், வேப்பங்குளம் சிறிபத்திரகாளி அம்மன் கோவில்களைத் தரிசித்து திருகோணமலை லக்சுமி நாராயணண் கோவிலைச் சென்றடையும். பின்னர் மட்டக்களப்பு மண்டூர்முருகன், திருக்கோவில், தாந்தாமலை, என்று பலவரலாற்றுப் பிரசித்திபெற்ற ஆலய தரிசனங்களுடன் பஜனை, வழிபாடுகளுடன் எதிர்வரும் 25ஆம் திகதி மாலை கதிர்காமம் சென்று இரவு தங்கி மறுநாள் அதிகாலை ஏழுமலையானைத் தரிசித்து அபி சேகம் செய்து வள்ளிமலையில் தரிசனம் இடம்பெறும்.

இதில் இணைய விரும்பும் அடியார்கள் ஆசார சீலர்களாக சைவத் தமிழ் கலாசாரம் பேணவேண்டும். ஒழுக்க சீலர்களாக இருத்தல் வேண்டும்.

0767181984 என்ற இலக்கத்துடன் தொடர்புகொண்டு பதிவு செய்து வரவை உறுதிப்படுத்தி, பேருந்து இருக்கைகளை உறுதி செய்துகொள்ளுமாறு இலங்கை முதல் உதவிச்சங்க இந்துசமயத் தொண்டர் சபையின் ஆணையாளர் அறிவித்துள்ளார். (4)

---

### கொக்குவிலில் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஒக். 22

சமூக விஞ்ஞானப் படிப்பு வட்டத்தின் ஏற்பாட்டில் "குப்பை நெருக்கடியும் புத்தளம் மக்களின் தூய்மைக்கான போராட்டமும்" என்ற தலைப்பிலான சிறப்புக் கலந்துரையாடல் நாளைமறுதினம் பி.ப 4 மணிக்கு இடம்பெறும்.

இல. 62, கே.கே.எஸ். வீதி, கொக்குவில் சந்தியிலுள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் இது இடம் பெறவுள்ளது.

இக் கலந்துரையாடலில் புத்தளம் கொழும்பு முகத்திடலில் இருபது நாள்களையும் கடந்து குப்பை கொட்டும் திட்டத்தைக் கைவிடக் கோரித் தொடர் சத்தியாக்கிரகப் போராட்டத்தை முன்னெடுத்துவரும் சுத்தமான புத்தளம் அணியைச் சேர்ந்த செயற்பாட்டாளர்களான ஏ.அர்சத்அலி, எம்.றஸ்மி, எம்.முவாஸ் ஆகியோர் உரையாற்றவுள்ளனர்.

தொடர்ந்து கலந்துரையாடல் இடம்பெறும். அரசியல், பொருளாதார, சமூக, விஞ்ஞான, கலை, இலக்கிய, ஆர்வலர்கள் அனைவரையும் கலந்துரையாடலில் பங்குபற்றுமாறு சமூக விஞ்ஞானப் படிப்பு வட்டத்தினர் அழைத்து நிற்கின்றனர். (4)

# இரகசியங்களை வெளியிட்ட அமைச்சர்கள் யார் என்பதை அரசு உடன் வெளிப்படுத்தவேண்டும்

நாமல் ராஜபக்ச எம்.பி கோரிக்கை

**கொழும்பு, ஒக்.22**

**அமைச்சரவையின் இரகசியங்களை வெளியிட்டதாகக் கூறப்படும் இரு அமைச்சர்கள் யார் என்பதை அரசு வெளிப்படுத்த வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச கோரிக்கை விடுத்துள்ளார்.**

கூட்டு எதிரணியில் அங்கம் வகிக்கும் நாடாளுமன்ற உறுப்பினரான நாமல் ராஜபக்ச தமது கீச்சகத்தின் ஊடாக இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

தம்மைக் கொலை செய்வதற்கு இந்தியாவின் 'றோ' உளவு அமைப்பு திட்டமிட்டதாக அமைச்சரவையில் அரச தலைவர் கூறியதாக வெளிவந்த கருத்து பெரியளவில் சர்ச்சைகளை ஏற்படுத்தியுள்ளது.

இதனை அமைச்சரவையின் அமைச்சர்கள் நால்வரே தெரிவித்ததாக அந்த செய்தியை முதலில் வெளியிட்ட 'த ஹிந்து' நாளிதழ் தெரிவித்திருந்தது.

இந்த நிலையில் அதனை வெளியிட்டவர்களின் இருவரின் பெயரைத் தாம் அறிவதாக அமைச்சர் மகிந்த அமரவீர நேற்றுமுன்தினம் தெரிவித்திருந்தார். இதுதொடர்பில் கருத்து வெளியிடும்போதே நாமல் ராஜபக்ச மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

தன்னைக் கொலை செய்வதற்கு இந்தியாவின் "றோ" உளவு அமைப்பு திட்டமிட்டதாக அரச தலைவர் கூறியதாக வெளிவந்த வதந்திக்குக் காரணம் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச இருப்பதாக இந்தியாவின் எக்கனமிக் ரைம்ஸ் ஊடகம் செய்தி வெளியிட்டிருந்தது. இந்த நிலையிலேயே நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்சவினால் இவ்வாறு கோரிக்கை விடப்பட்டது.

## 2 ரூபா சம்பளத்துக்கு கோழிக்கூடு சுத்தம் செய்த அரச தலைவர் மைத்திரி

கொழும்பு,ஒக்.22

இரண்டு ரூபா சம்பளத்துக்காக 4 மணித்தியாலங்கள் கோழிக்கூடு சுத்தம் செய்யும் வேலையைச் செய்ததாக, அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். அரச தலைவர் சாரணர் விருது வழங்கும் நிகழ்வு கண்டி பொல்கொல்ல கூட்டுறவு நிறுவனத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அரச தலைவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பரீட்சையில் சித்தி அடைந்தால் மாத்திரம் ஒரு பிள்ளையின் வாழ்க்கையைத் தீர்மானிக்க முடியாது. சாரணர் பயிற்சிகளை பயனுள்ள முறையில் பெற்றுக் கொள்ள வேண்டும். அதன் மூலம் சவால்களை வெற்றி கொள்ளும் மனநிலை ஏற்படுகின்றது. நான் 16 வயதாக இருந்த காலப்பகுதியில் சாரணராக வீடு வீடாகச் சென்று வேலை செய்துள்ளேன். ஒரு நாள் வீடு ஒன்றிற்கு சென்று வேலை கேட்டேன். பல வருடங்கள் சுத்தம் செய்யாத கோழி கூடு ஒன்றைச் சுத்தம் செய்யுமாறு என்னிடம் கூறப்பட்டது.நான் சுத்தம் செய்யும் பணியை 4 மணித்தியாலங்களுக்கு அதிகமான நேரம் செய்தேன். அதற்காக வீட்டின் உரிமையாளர் இரண்டு ரூபாவைச் சம்பளமாக எனக்குக் கொடுத்தார் - என்றார்.

## கலையரங்கம் திறப்பு

தென்மராட்சி தெற்கு கோவிலாக்கண்டி மகாவிஷ்ணு கலையரங்கு கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் திறந்து வைக்கப்பட்டது. மகாவிஷ்ணு கடற்றொழிலாளர் சங்கத் தலைவர் சி.கஜேந்திரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக நாடாளுமன்ற எம். ஏ.சுமந்திரன், வடக்கு மாகாண சபை உறுப்பினர் கே. சயந்தன் சாவகச்சேரி பிரதேச சபைத் தவிசாளர் க. வாமதேவன் ஆகியோர் கலந்துகொண்டனர். மகாவிஷ்ணு விளையாட்டுக் கழக உறுப்பினர்களுக்கும் அப்பகுதியிலுள்ள பெற்றோருக்குமான தாச்சிப் போட்டிகள் இடம்பெற்றன. மாணவர்களின் கலை நிகழ்வுகள் இடம்பெற்றதுடன் போட்டிகளில் கலந்து கொண்டவர்களுக்கான பரிசில்களும் வழங்கப்பட்டன. (159 .9)

## 'றோ' அமைப்புடன் தொடர்புடைய அமைச்சர்களே பொய்யான தகவல் வழங்கினர்

அமைச்சர்கள் யார் என தெரியும் என்கிறார் மகிந்த அமரவீர

கொழும்பு. ஒக்.22

இந்தியாவின் உளவுத் துறையான "றோ" அமைப்புடன் தொடர்புடைய இரு அமைச்சர்களே அரச தலைவர் தொடர்பான பொய்யான தகவல்களை அமைச்சரவையிலிருந்து வழங்கியுள்ளதாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான மகிந்த அமரவீர தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அமைச்சரவையில் அரச தலைவர் பேசியதாக பொய்யான தகவல் வழங்கிய அமைச்சர்கள் நான்கு பேரில் இருவர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்களின் பெயர்களை மிக விரைவில் வெளியிடப்படும்.

இந்த இருவர் தொடர்பிலும் அரச தலைவரும், தலைமை அமைச்சரும் தீர்க்கமான முடிவொன்றை எடுக்க வேண்டும்.

பொதுஜன பெரமுனவில் மகிந்த ராஜபக்சவைவிட பிரபல்யமான நபர் யார் உள்ளார்கள். 19 ஆவ்து அரசிலயமைப்பு சீர்திருத்தம் சர்வாதிகார ஆட்சியினை முடிவிற்கு கொண்டு வரும் நோக்கிலே கொண்டு வரப்பட்டது. ஆகவே இந்தத் திருத்தத்துக்கு மகிந்த ராஜபக்ச மாத்திரம் விதிவிலகக்கல்ல.

ஐக்கிய தேசியக் கட்சிக்கோ, பொதுஜன பெரமுனவிற்கோ தனித்து போட்டியிட்டு அரச தலைவர் ஒருவரை தெரிவு செய்யும் மக்கள் பலம் கிடையாது. இந்த நாட்டில் அரச தலைவர் ஒருவரை சிறிலங்கா சுதந்திர கட்சியால் மாத்திரமே உருவாக்க முடியும் - என்றார்.

## திகன வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் அறிக்கை

கொழும்பு, ஒக். 22

கண்டி - திகன பகுதியில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் அறிக்கை தயாரிக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு கடந்த மே மாதம் 9ஆம் திகதி தொடக்கம் 12ஆம் திகதி வரை விசாரணைகளை முன்னெடுத்திருந்தது.

இந்த விசாரணைகள் ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் ஆணையாளர்களினால் நடத்தப்பட்டதுடன், பொது மக்களிடம் சாட்சியங்களும் பதிவு செய்யப்பட்டிருந்தன.

இந்த நிலையில் இது தொடர்பான அறிக்கையைத் தயாரிக்கும் பணிகள் நிறைவடைந்ததன் பின்னர் அதனை வெளியிடவுள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கண்டி - திகன பகுதியில் இடம்பெற்ற இந்த வன்முறைச் சம்பவங்கள் காரணமாக நாடளாவிய ரீதியில் சில தினங்களுக்கு சமூக வலைத்தளங்கள் முடக்கப்பட்டிருந்தன.

## சிறைச்சாலை கைதிகள் போராட்டம்

கொழும்பு. ஒக்.22

அங்குணகொலபெலஸ்ஸ சிறைச்சாலையில் உள்ள கைதிகள் நேற்று அதிகாலை தொடக்கம் எதிர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர் என்று சிறைச்சாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

சிறைச்சாலையின் சில நடவடிக்கைகளுக்குப் பொலிஸ் சிறப்பு அதிரடிப் படையை ஈடுபடுத்துவதற்கு எதிர்ப்பு தெரிவித்தே இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

சுமார் 400 கைதிகள் சிறைச்சாலை கூரை மீதேறி இந்த எதிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்த போராட்டத்தை முன்னிட்டு அங்குண கொலபெலஸ்ஸ சிறைச்சாலை யின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதுடன் ஆயிரத்து 200 கைதிகளைத் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

## கடந்த ஒரு மாதத்தில் மட்டும் தொடருந்து விபத்துகளால் 5 யானைகள் சாவு

கொழும்பு,ஒக்.22

கடந்த ஒரு மாதத்தில் மட்டும் இதுவரையான காலப்பகுதியில் தொடருந்து விபத்துக்களால் 5 யானைகள் உயிரிழந்துள்ளதுடன் ஒரு யானை காயமடைந்துள்ளது.

பளுகஸ்வெவ மற்றும் கல்ஓயாவிற்கு இடையில் மட்டக்களப்பு நோக்கி நேற்றுமுன்தினம் இரவு பயணித்த கடுகதி தொடருந்துடன் யானை ஒன்று மோதியது.

இந்த விபத்தின் போது யானை உயிரிழந்துள்ளதாகத் தொடருந்து கட்டுப்பாட்டு நிலையம் தெரிவித்துள்ளது.

இதனால், திருகோணமலை வரை பயணித்த இரவு நேர தபால் தொடருந்து கெக்கிராவ ரயில் நிலையத்தில் நிறுத்திவைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கல்கமுவ மீ ஓய பாலத்துக்கு அருகில் தொடருந்துடன் மோதி யானையொன்று உயிரிழந்துள்ளதுடன், மற்றுமொரு யானை பலத்த காயங்களுக்கு உள்ளாகியுள்ளது.

கோட்டையிலிருந்து காங்கேசன்துறை நோக்கிப் பயணித்த கடுகதி தொடருந்துடனேயே இவ்வாறு காட்டு யானைகள் மோதியுள்ளன. இதே வேளை கடந்த செப்ரெம்பர் மாதம் 18 ஆம் திகதி கொழும்பில் இருந்து மட்டக்களப்பு நோக்கி பயணித்த எரிபொருள் ஏற்றிச் சென்றதொடருந்துடன் மோதி மூன்று யானைகள் உயிரிழந்துள்ளன.



## சனசமூக நிலையத்தின் ஆண்டு நிறைவு

கொடிகாமம் ஒக் 22

கைதடி மத்தி குமரநகர் சனசமூக நிலையத்தின் 62 ஆம் ஆண்டு நிறைவு நிகழ்வு நேற்றுமுன்தினம் சனசமூக நிலைய நகுலன் கலையரங்கில் இரவு 7 மணியளவில் நிலையத்தின் தலைவர் பா.மோகன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் எம். ஏ.சுமந்திரன், சிறப்பு விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் கே.சயந்தன், மதிப்புறு விருந்தினர்களாக சாவகச்சேரி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டபிள்யூ எம். எஸ் .பி. விக்ரமசிங்க, சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் சு. கேதீஸ்வரன், முன்னாள் சனசமூக நிலையத்தின் தலைவர் அ.செந்தூரன், கைதடி மத்தி கிராம அலுவலர் கு.சிவகுமாரசர்மா, முன்னாள் சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் ச.தங்கராசா ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன்போது தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களும் முதியோர்களும் நிலையத்தின் முன்னாள் தலைவர்களும் மதிப்பளிக்கப்பட்டனர். (159,9)

# மாலிக்கு அனுப்பிய இலங்கைப் படையினர் தமது ஆய்வுக்கான பட்டியலில் இல்லை!

*மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் தெரிவிப்பு*




**கொழும்பு, ஒக். 22**
**மாலிக்கு அனுப்பப்பட்ட இலங்கைப் படைப்பிரிவினர் இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் ஆய்வுகளுக்கு உட்படுத்தப்பட்டு அனுமதிக்கப்பட்டவர்கள் அல்ல என்று மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் கலாநிதி தீபிகா உடகம தெரிவித்தார்.**

மாலியில் இலங்கை படைப்பிரிவின் கட்டளை அதிகாரியான லெப்.கேணல் அநுபுரவைத் திருப்பி அனுப்ப ஐ.நா எடுத்துள்ள நடவடிக்கை தொடர்பாகக் கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது,
ஐ.நா. அமைதிப்படைக்குத் தெரிவு செய்யப்படும் இலங்கைப் படைப்பிரிவினரை ஆய்வு செய்வதற்கு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு இணங்கியிருந்தது.
இந்த விவகாரம் தொடர்பாக எமக்கு எந்த தகவலும் கிடைக்கவில்லை. இது எமது ஆணைக்குழு ஊடாக நடக்கவில்லை.
மாலிக்கு அனுப்புவதற்கான இலங்கை படைப்பிரிவை 2017ஆம் ஆண்டு தொடக்கத்தில், முதலில் மீளாய்வுக்காக வந்தது.
நாங்கள் எமது ஆய்வுகளின் ஊடாகச் சிலருக்கு அனுமதி அளித்தோம். சிலர் தொடர்பாக மேலதிக தகவல்களைக் கோரினோம்.
அப்போது ஐ.நா. ஏற்கனவே இந்தப் படைப்பிரிவை ஆய்வுக்குட்படுத்தி விட்டதாகவும், உங்களின் சேவை எமக்குத் தேவையில்லை என்றும் இராணுவத் தளபதியாக இருந்த லெப்.ஜெனரல் கிரிசாந்த டி சில்வா கடிதம் அனுப்பினார்.
எனவே நாங்கள் ஒட்டுமொத்தப் படைப்பிரிவை ஆய்வுக்குட்படுத்துவதை நிறுத்தினோம். ஐ.நாவும் இலங்கைப் படையினருமே அதனைக் கையாண்டன.
திருப்பி அனுப்புதல் தொடர்பான நியூயோர்க்கில் உள்ள இலங்கை வதிவிடப் பிரதிநிதி இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவுக்குத் தெரியப்படுத்திய போது, விவரங்களை பரிசோதித்தோம்.
அப்போது, லெப்.கேணல் அநுமபுரவின் பெயர், ஆணைக்குழுவுக்கு ஆய்வுக்காக அனுப்பப்பட்ட மூலப் பட்டியலில் இருக்கவில்லை என்று கண்டறியப்பட்டது.
இது இலங்கை இராணுவத்துக்கும், ஐ.நாவுக்கும் இடையிலான விவகாரம்."
என்றார்.
மாலியில் ஐ.நா. அமைதிப்படையில் பணியாற்றும் இலங்கைப் படைப் பிரிவின் கட்டளை அதிகாரி போர்க்குற்றம் சுமத்தப்படும் ஒருவர் என்றும்,அவரை உடனடியாக நாடு திரும்புமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது.



## 173 ரூபாவை தொடுகின்றது அமெரிக்க டொலர்!

கொழும்பு, ஒக். 22
இலங்கை வரலாற்றில் முதல் முறையாக அமெரிக்க டொலர் ஒன்றின் விற்பனை பெறுமதி 173 ரூபாவை நெருங்கியுள்ளது.
இலங்கை மத்திய வங்கி வெளியிட்ட நாணய மாற்று வீதத்துக்கு அமைய அமெரிக்க டொலர் ஒன்றின் விற்பனை பெறுமதி 172.99 ரூபாவராக அதிகரித்துள்ளது.




## சோளத்தின் உத்தரவாத விலையை உறுதிப்படுத்த அமைச்சு நடவடிக்கை

கொழும்பு, ஒக்.22
சோளத்தின் உத்தரவாத விலையை உறுதிப்படுத்த விவசாயத்துறை அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.
இதன் மூலம் உள்ளூரில் சோள உற்பத்தியை மேலும் அதிகரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கமைய, ஒரு கிலோ சோளத்தின் விலை 43 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
ஏற்கனவே சோள விவசாயத்தில் ஈடுபட்டிருக்கும் விவசாயிகளுக்கு அதிக உற்பத்தியை வழங்கக் கூடிய முறைமை தொடர்பில் விவசாயத் திணைக்கள அதிகாரிகள் சிறப்புத் திட்டங்களை முன்வைத்துள்ளனர்.
இதேவேளை, அத்தியாவசிய உணவு பொருள்களைச் சதொச மற்றும் கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக சலுகை விலையில் வழங்குவதற்குரிய நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சு அறிவித்துள்ளது.

## உழுந்து, நிலக்கடலை இறக்குமதியை நிறுத்த நடவடிக்கை



கொழும்பு, ஒக்.22
உள்நாட்டுப் பயிர்செய்கையாளர்களை ஊக்குவிக்கும் நோக்கில் உழுந்து மற்றும் நிலக்கடலை இறக்குமதி செய்வதை நிறுத்த அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.
அதேநேரம், சோளம் மற்றும் பயறு உள்ளிட்ட பல தானியங்களுக்கான வரி அடுத்த வருடத்திலிருந்து இரு மடங்காக அதிகரிக்கவுள்ளதாக விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர் தெரிவித்தார்.
இதேவேளை, அடுத்த வருடத்திலிருந்து உழுந்து மற்றும் நிலக்கடலை போன்றவற்றை இறக்குமதி செய்வதற்கான அனுமதிப்பத்திரத்தை இல்லாமல் செய்யவுள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.



## ஒல்லாந்தர் காலத்து நாணயம் மத்திய கல்லூரியில் கண்டுபிடிப்பு

திருகோணமலை, ஒக். 22
ஒல்லாந்தர் காலத்து வி.ஓ.சி நாணய்ம் ஒன்று திருகோணமலை மூதூர் மத்திய கல்லூரியில், கண்டெடுக்கப்பட்டுள்ளது.
பாடசாலை மாணவன் ஒருவன் பாடசாலை முதன்மை வாயில் முன்பாக இருந்து நேற்றுமுன்தினம் இந்த நாணயத்தைக் கண்டெடுத்துள்ளார்.
மூதூர் மத்திய கல்லூரி அமைந்துள்ள இடத்தில், ஒல்லாந்தர்களின் முதலாவது கோட்டை அமைக்கப்பட்டிருந்தது.
வி.ஓ.சி என்பது ஒல்லாந்தர் கால "கிழக்கிந்தியக் கம்பனி" எனும் பெயரைக் குறிக்கும் சுருக்கக் குறியீடாகும். இந்த நாணயம் 1750 ஆம் ஆண்டு பொறிக்கப்பட்டுள்ளது.

## மைத்திரி- ரணில் முரண்பாட்டால் அரசு மீது பொதுமக்கள் வெறுப்பு



கொழும்பு, ஒக்.22
அரச தலைவருக்கும், தலைமை அமைச்சருக்கும் இடையில் ஏற்பட்டுள்ள முரண்பாடுகளால், மக்கள் வெறுப்படைந்திருப்பதாக அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
வெறுப்படைந்துள்ள மக்களை தவறான பாதைக்கு தள்ளிவிட வேண்டாம் என்று நான் இரு தலைவர்களிடமும் வேண்டுகோள் விடுக்கிறேன். நாங்கள் கூட்டாட்சி அரசை உருவாக்கினோம். இந்த அரசு தொடர வேண்டும். இந்த அரசில் பல பிரச்சினைகள் இருந்தாலும் நாட்டில் அன்று இருக்காத சுதந்திரம் இன்று உள்ளது -என்றார்.

## நாட்டைக் கயவர்களின் கைகளில் மீண்டும் ஒப்படைக்க முடியாது

*கூறுகின்றார் அமைச்சர் சஜித் பிரேமதாச*

கொழும்பு, ஒக். 22
நாட்டை மீண்டும் கயவர்களின் கைகளில் ஒப்படைக்க முடியாது. நாட்டில் காணப்படும் இனவாதங்கள், மதவாதங்கள், மொழிவாதங்களுக்கு எப்போதும் நாங்கள் எதிரிகளே என்று அமைச்சர் சஜித் பிரேமதாசதெரிவித்தார்.
மட்டக்களப்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
இந்த நாட்டை மீண்டும் ஒருமுறை நாடகக்காரர்களுக்கும் வேசம் தரிப்பவர்களுக்கும், ஒப்பனைகலையாமல் மேடைகளில் அமர்ந்திருப்பவர்களுக்கும் ஏழை எளிய மக்களின் பசித்த வயிறு தெரியாதவர்களுக்கும் வழங்கமுடியுமா?
கடந்த ஆட்சியில் பேச்சுச் சுதந்திரம் மற்றும் ஊடக சுதந்திரம் இருக்கவில்லை, ஊடகவியலாளர்கள் படுகொலை செய்யப்பட்டனர், போராட்டங்கள் செய்தவர்கள் இனங்காணப்பட்டுப் படுகொலை செய்யும் நிலைமையும் காணப்பட்டது. எந்தச் சுதந்திரமும் அந்த ஆட்சிக் காலத்தில் இருக்கவில்லை.
தாங்களும் தங்கள் குடும்பங்களும் நாட்டைச் சூறையாடிவிட்டு இந்த நாட்டு மக்களை ஒரு பொருட்டாகக் கொள்ளாமல் தங்களது நிலைப்பாடுகளையே நாட்டின் குறிக்கோளாகக் கொண்டு செயற்பட்டனர்.
அவ்வாறான கயவர்களுக்கு இந்த நாட்டைத் தொட்டுத் தழுவுவதற்கு நாட்டைக் கொடுக்கப்போகின்றீர்களா?, இதனை ஒவ்வொருவரும் தங்களது மனசாட்சியுடன் சிந்தித்துப் பார்க்க வேண்டும். கடந்த காலங்களில் பெற்ற அனுபவத்தைச் சிந்தித்துபாருங்கள்.
மதவாதங்களை உருவாக்கி, இனவாதங்களை உருவாக்கிச் சமய ஸ்தலங்களை எரித்துவிட்டு அதில் குளிர்காய்ந்தவர்கள் மக்களினால் விரட்டியக்கப்பட்டனர்.
மீண்டும் ஒருமுறை எரித்த சமய ஸ்தலங்களுக்கு வருகை தந்து வழிபாடுகளில் கலந்துகொள்கின்றனர்.
இவர்கள் தொடர்பில் மக்கள் நன்றாகசிந்திக்கவேண்டும், அவர்களை வேறுபடுத்தி பார்க்கவேண்டும். இந்த நாட்டில் ஜனநாயகத்தை அடக்கி ஆட்டவர்கள். நாட்டின் வளங்களைச் சூறையாடியவர்கள், மக்களின் வாழ்விடங்களை அழித்தவர்கள் இன்று மீண்டும் ஒருமுறை ஆட்சியில் அமர்ந்து அந்த மாளிகையில் பள்ளி கொள்ள வேண்டும்எனச்சிந்திக்கின்றனர். இந்த நாட்டை நாங்கள் கயவர்களின் கைகளில் ஒப்படைக்கமாட்டோம். அதே போன்று இந்த நாட்டில் காணப்படும் இனவாதங்கள், மதவாதங்கள், மொழிவாதங்களுக்கு எப்போதும் நாங்கள் எதிரிகளாகவே இருப்போம். இந்த நாட்டில் உள்ள அனைத்து மக்களும் மதங்கள், மொழிகளை மறந்து ஒருதாய் பிள்ளைகள்போல் ஒன்றாக வாழ வேண்டும்.
அதற்காக கடந்த காலத்தில் கசப்பான அனுபவங்களைக் கொண்டுவந்த தலைவர்களை மீண்டும் ஒருமுறை சிம்மாசனத்தில் அமரவைப்பதா? அல்லது வீடுகளுக்கு வந்துஉங்களதுதேவைகளை நிறைவேற்றுபவர்களுக்கு இந்த நாட்டில் இடமளிப்பதா? என்பதை மக்களே சிந்திக்கவேண்டும்-என்றார்.

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# ஜமாலுக்கான நீதி!!!

பன்னாட்டுச் சமூகத்தைக் கடந்த சில நாள்களாகப் புரட்டிப் போட்டுக்கொண்டிருந்த ஊடகவியலாளர் ஜமாலின் விவகாரம் தற்போது மேலும் பூதாகரமாகியுள்ளது. கட்டுரையாளரும் செய்தியாளருமான ஜமால் கொல்லப்பட்டது உண்மை என்று சவூதி ஏற்றுக்கொண்டதை அடுத்தே இந்தக் களேபர நிலை தோன்றியுள்ளது.

அமெரிக்காவில் இருந்து வெளிவரும் 'வொஷிங்டன் போஸ்ட்' செய்தி நிறுவனத்தில் சவூதியையும், பின் சல்மானையும் காட்டமாக விமர்சித்துவந்தார் ஜமால். இவர் துருக்கியில் உள்ள சவூதி அரேபியாவின் தூதரகத்துக்குள் வைத்து அண்மையில் கொல்லப்பட்டார் என்று தெரிவித்து அதற்குரிய ஆதாரங்களைத் துருக்கி வெளிப்படுத்தியிருந்தது. எனினும் தன் மீதான குற்றச்சாட்டுக்களை ஆரம்பம் முதல் தொடர்ச்சியாக மறுத்து வந்தது சவூதி. கடந்த வெள்ளிக்கிழமை ஜமாலின் கொலை தொடர்பிலான காணொலி ஆதாரங்களை துருக்கி வெளியிட்டதைத் தொடர்ந்து ஜமாலின் கொலையை ஏற்றுக்கொண்டுள்ளது சவூதி அரேபியா. துருக்கியில் உள்ள சவூதித் தூதரகத்துக்குள் அதிகாரிகளுடன் ஏற்பட்ட வார்த்தை மோதலையடுத்துத்தான் ஜமால் கொல்லப்பட்டார் என்று குறிப்பிட்டுள்ள சவூதி அரேபியா, தனது சில அதிகாரிகளையும் பதவி நீக்கம் செய்துள்ளது.

ஜமாலின் கொலையை சவூதி ஏற்றுக்கொண்டாலும், பன்னாட்டு அரசியல் கோர்வைக்குள் அடுத்தொரு விளையாட்டாகவும், பகடைக் காயாகவும் மட்டுமே இந்த விவகாரம் அமைந்துள்ளது, அமையப்போகிறது. இது உலக அளவில் ஊடகங்களின் மீது மேற்கொள்ளப்பட்ட பெரும் படுகொலையேயன்றி வேறொன்றுமில்லை.


ஜமாலின் கொலையை அடுத்து சவூதிக்குத் தனது கடும் கண்டனத்தைத் தெரிவித்துள்ளது அமெரிக்கா. எனினும் இந்த விடயத்தில் சவூதியைத் தனிமைப்படுத்தவோ அல்லது சவூதிக்கு எதிராகக் கடும் நடவடிக்கையை எடுக்கவோ அமெரிக்காவால் முடியாது. ஏனெனில், சவூதி அமெரிக்காவின் மிகநெருங்கிய நட்புநாடு; செல்லப்பிள்ளையும்கூட. மத்திய கிழக்கில் இஸ்ரேலை தனது வலது கையாக அமெரிக்கா கொண்டுள்ளதைப்போல வளைகுடாவில் அமெரிக்காவுக்கு உள்ள நாடுதான் சவூதி.

வளைகுடாப் பகுதியில் தனது திட்டங்கள், எண்ணங்கள் அனைத்தையும் சவூதியின் மூலமாகத்தான் அமெரிக்கா நிறைவேற்றி வருகிறது. அது மட்டுமல்லாமல் அமெரிக்காவுடன் பல ஆயிரம் கோடி டொலர்கள் பெறுமதியான ஆயுத ஒப்பந்தத்தையும் சவூதி கொண்டுள்ளது. எல்லாவற்றையும்விட மத்திய கிழக்கில் ஈரான் மீது தனக்கு இருக்கும் பகையைத் தீர்த்து ஈரானைத் தனிமைப்படுத்தவும், ஈரானின் முக்கிய வருவாயான கச்சா ஏற்றுமதியை முடக்கவும் அமெரிக்காவுக்குப் பெரும் துணையாக இருப்பது சவூதிதான். அதாவது சவூதி கச்சா உற்பத்தியை இரட்டிப்பாக்கினால்தான் ஈரானை அமெரிக்காவால் தனிமைப்படுத்த முடியும். ஒரு பக்கத்தில் சவூதியைப் பகைத்துக்கொண்டு மறு பக்கத்தில் ஈரானைத்தனிமைப்படுத்த அமெரிக்காவால் முடியாது. இத்தகையதொரு பின்னணியில் ஜமால் விவகாரத்தில் தற்போது துள்ளிக் குதித்துக்கொண்டிருக்கும் அமெரிக்கா, தொடர்ந்தும் தனது நிலையைப் பேணுமா என்று கேட்டால் அதற்கு துல்லியமான பதிலை வழங்குவதென்பது பெரும் சிரமமே. இத்தகையதொரு பின்னணியில் ஜமாலுக்கு நீதி கிடைப்பதென்பது சாத்திமில்லாத ஒன்றே.

ஒருவேளை அமெரிக்கா சவூதியை எதிர்க்கத் துணிந்தால் ரஷ்யா சவூதிக்காகக் குரல்கொடுக்கும். இதற்கு அத்திபாரமாக "உண்மைநிலவரத்தைப்புரிந்துகொள்ளாமல் சவூதியை மட்டும் சாடுவது சரியல்ல" என்று குறிப்பிட்டுள்ளார்புடின். ஆக, உலக அரசியல் வலைப்பின்னலுக்குள் ஊடகக் குரலொன்று கொல்லப்பட்டுள்ளது. அதற்குரிய நீதி கிடைக்குமா என்பதற்கு காலமே பதில்.

# புதிய தமிழர் தேசிய கூட்டமைப்பின் தேவை!

ஒக்ரோபர் 21ஆம் திகதியன்று (நேற்று) தன்னுடைய அரசியல் பயணத்தின் 17ஆவது ஆண்டை நிறைவு செய்திருக்கிறது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு. அரசியல் தீர்வு அடையப்படும் வரை தமிழ் மக்களுக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எனும் ஒருமைப்பட்ட சக்தி ஒன்று தேவை. அன்று கைச்சாத்திட்டு உருவான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எனும் வரலாற்றுக் கருவூலம் இன்றில்லை. அன்று உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைபோல மக்கள் பிரதிநிதிகள், தமிழ்க் கட்சிகள் அனைத்தையும், உண்மையான ஆர்வலர்கள் அனைவரையும் உள்ளடக்கிய, உள்வாங்கிய புதிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பொன்று கைச்சாத்திடப்பட்டு உருவாக்கப்பட வேண்டும். எனும் சாரப்பட கூட்டமைப்பின் வழித்தடம் பற்றியும் புதிய கூட்டமைப்பின் உருவாக்கம் பற்றியும் விவரிக்கும் வகையிலானது இந்தக் கட்டுரை.



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாகி 17ஆண்டுகள் நிறைவு பெறுகின்றன. கடந்த 17 ஆண்டுகளில் ஒரு முக்கியமான காலகட்டத்தில் வடக்குக் கிழக்குத் தமிழர்களின் அரசியல் தலைமையாகத் தமிழ் மக்களால் பல்வேறு தேர்தல்கள் ஊடாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றது கூட்டமைப்பு. ஆனால், அன்று கைச்சாத்திட்டு உருவான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்றில்லை. அன்று உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்று அத்தனை அர்த்தம் பொருந்தியதாக அன்றி அர்த்தம் குறைந்து இருப்பதாகவே உணரப்படுகின்றது. இந்தப் பிரச்சினைக்குரிய காரணங்களில் அது ஓர் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியாகப் பதிவுசெய்யப்படாமலிருப்பதைத் தமிழ் அரசுக் கட்சியின் முக்கியஸ்தர்கள் பெரிதும் விரும்பியதும், தனிமனித, தனிக்கட்சியே கூட்டமைப்பின் முடிவுகளை அறிவித்து ஏனையவை ஒதுக்கப்பட்டமை ஆகியவை முக்கியமானவை. தொடக்க காலத்தில் கைச்சாத்திட்ட நான்கு கட்சிகளில் இரண்டு கட்சிகள் இன்று கூட்டமைப்புடன் இல்லை. தமிழர் விடுதலைக் கூட்டணிக்குப் பதிலாக மீளுயிர்ப்புடன் வந்த தமிழ் அரசுக் கட்சி, தமிழ் அரசுத் தலைமை, ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப்., சுரேஷ் பிரேமச்சந்திரன் உள்ளிட்டவர்களை அரவணைத்து ஒருமைப்பாட்டை ஏற்றப்படுத்த வேண்டிய பணிக்கு முன்னுரிமை கொடுக்கவில்லை. அதனாலேயே அன்று உருவான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது இன்றில்லை என்றாகின்றது.

### கூட்டமைப்பு உருவாக்கத்துக்கான கருக்கட்டல்


தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உருவாக்கும் எண்ணம் முதலில் கிழக்கு மாகாணத்திலே கருக்கொண்டது. ஆயுதப் போராட்டத்தின் நோக்கம் நாடாளுமன்றத்தை நோக்கியது அல்ல ஆதலால், அதற்கு இணையாகத் தமிழர் தம் அபிலாசைகளை எண்ணத்தில் கொண்டவர்கள் நாடாளுமன்றத்தில் தமிழ் மக்கள் பிரதிநிதிகளாக இருக்க வேண்டியதும் அல்லாது போனால் ஏற்றப்படக்கூடிய விளைவுகளும் தமிழர் தம் அபிலாசைகளை நேசித்தவர்களால் நன்கு உணரப்பட்டது. கிழக்கு மாகாண அறிஞர்கள், ஊடகவியலாளர்கள், கொழும்பு வாழ் தமிழர் பணிக்குழு வேலாயுதபிள்ளை, சரவணமுத்து, ராஜதந்திரி விஜயசிங்கம், திருநாவுக்கரசு, குமார் பொன்னம்பலம், சற்குணம், ஐ.நா. கடற் துறைமுகத் தரவியல் நிபுணர் இ. நடராஜா, சட்டத்தரணிகள் காண்டீபன், மோகன் பாலேந்திரா, நல்லையா குருபரன் உள்ளிட்ட கொழும்பு வாழ் தமிழர் பணிக்குழுவால் நாடாளுமன்றத்தில் தமிழ் மக்கள் பிரதிநிதிகளாக இருக்க வேண்டிய தேவை தெளிவாக உணரப்பட்டது.

2001ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்னர் இதற்கான பணிகளைச் சிவராம் முன்னெடுத்திருந்தார். சரஸ்வதி மண்டபக் கூட்டத்துடன் ஆரம்பித்து, நான்கு கட்சிகள் ஒன்றுபட்டுக் கொள்ளுப்பிட்டியில் உள்ள தமிழ் ஆர்வலரும் வர்த்தக முக்கியஸ்தருமான வி.ஆர். வடிவேற்கரசனின் இல்லத்தில் மூன்று நாள்களாக மாலையளவில் ஆரம்பித்த பேச்சுக்கள் நள்ளிரவுவரை இடம்பெற்றன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கக் கைச்சாத்திடும் வைபவம் 2001 ஆம் ஆண்டு ஒக்பரோபர் மாதம் 21ஆம் திகதி நான்கு தமிழ்க் கட்சிகள் இணைந்து நடந்தேறியது. இந்த விடயத்தின் ஆரம்ப கர்த்தா அமரர் சிவராம். தேர்தலுக்காக அன்றி நீடித்துச் செல்லும் தீர்வு காணப்படாத எமது அரசியல் உரிமைகள் சம்பந்தமான விடயங்களுக்கு மக்கள் ஆணை பெறும் வகையில் அர்த்த புஷ்டியாக ஒன்றுபட வேண்டும் எனும் தமிழ்க் காங்கிரஸின் நிலைப்பாடும் மாற்றுச் சொற்பயன்பாடுகள் மூலம் வலியுறுத்தப்பட்டு ஆரம்பிக்கப்பட்டது. தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பாக இராஜவரோதயம் சம்பந்தனும், ரெலோ செல்வம் அடைக்கலநாதன் சார்பாக அன்றைய ரெலோ முதல்வர் சட்டத்தரணி என்.ஸ்ரீகாந்தாவும், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் சார்பாக என்.குமரகுருபரனும், ஈபி.ஆர்.எல்.எப், சார்பாகச் சுரேஷ் பிரேமச்சந்திரனும் கைச்சாத்திட்டுத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது. சித்தார்த்தனின் புளொட்டும் உடனிருந்தது. இதில் அனுசரனையாளர்களாகச் சில முக்கிய தமிழ் ஆர்வலர்கள், இந்து மாமன்றத் தலைவர் திரு. கைலாசபிள்ளை, கப்பல்துறை வர்த்தகர் ஜெயபாலசிங்கம், வர்த்தகர் வடிவேற்கரசன், ஐ நா. ஆலோசகர் (தில்லைக்கூத்தன்) இளையதம்பி நடராசா, சட்டத்தரணி க.நீலகண்டன் ஆகியோர் கலந்து கொண்டனர். கூட்டமைப்பு உருவாக்கத்தின் பின்னர் இந்தியாவின் அன்றைய உயர் ஸ்தானிகர் இவர்களை மகிழ்வுடன் சந்தித்திருந்தார்.

### அன்றைய கூட்டமைப்பும், ஒருமைப்பாடும் இன்றில்லை

அன்று உருவான கூட்டமைப்பானது இன்றில்லை என்றால் அதில் உண்மை இருக்கின்றது என்பது பொய் ஆகாது. அன்று முதுமைக்கும் ஒவ்வொரு கட்சியின் பங்காண்மைக்கும் மதிப்பளிக்கப்பட்டது. அனைவரும் ஒன்றிணைந்தே முடிவுகளை எடுத்தார்கள். ஒரு கட்சி ஏனைய கட்சிகளின்றி முடிவுகளை ஆக்கிரமித்ததில்லை. இதை மூத்த தலைவர் இரா.சம்பந்தன் நன்கு அறிவார். இன்றைய நிலைக்கான காரணத்தையும் அவர் நன்கு அறிவார். அன்று உரு வான கூட்டமைப்பு இன்றில்லை என்பது உண்மை என்பதை மறுக்க முடியாது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வலுவிழந்து விட்டது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஓர் அரசியல் கட்சியாக இலங்கைத் தேர்தல் திணைக்களத்தில் பதிவு செய்யப்படாமையால், தமிழர் விடுதலைக் கூட்டணியின் சூரியன் சின்னத்தில் இலங்கை நாடாளுமன்றத் தேர்தல், 2001 நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு 15இடங்களைக் கைப்பற்றியது. இன்றிருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழர் விடுதலைக் கூட்டணி, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் என்பவற்றின் பங்காளிப்பற்றது. அன்று அனைத்துக் கட்சிகளுமே ஒன்றுகூடி, விட்டுக்கொடுத்து, ஒருமைப்பட்டு முடிவெடுக்க பட்டது.

தமிழ் அரசுக் கட்சிக் காரரும் பக்குவமாக நடந்து கொண்டனர். அனைவரையும் அரவணைத்தனர். கூட்டு அமைப்பு என்பதை மனதில் கொண்டனர். ஆதலின் பெரியளவில் விமர்சனங்கள் எழவில்லை. கூட்டமைப்பு கட்சிகளாகப் பிரிந்துநின்று முடிவுகளை அறிவித்ததில்லை. ஒருவரை ஒருவர் விமர்சித்ததில்லை. அந்த ஒருமைப்பாடு பின்னர் உடைந்து விட்டது



**வெளியேற்றங்களும் முரண் நிலைகளும்**


தமிழர் விடுதலைக் கூட்டணியும் அதன் செயலாளர் நாயகம் ஆனந்த சங்கரியும் வெளியேற வேண்டிய சூழல் ஏற்றப்பட்டது. இதற்கு அவர் கூறும் கரணங்கள் பல உண்டு. அத்துடன், தமிழ்க் காங்கிரஸின் பொதுச்செயலாளரான குமார் பொன்னம்பலத்தின் புதல்வர் கஜேந்திர குமார் பொன்னம்பலமும் கொள்கை மாறுபாடுகளை வெளிப்படுத்தி, முரண்பாடுகளுடன் கூட்டமைப்பை விட்டு அகன்றார். தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் மு. சிவசிதம்பரத்தின் மறைவின் பின் கைச்சாத்திட்ட ஒப்பந்தப்படி தேசியப்பட்டியலில் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் சார்பில் ஏற்கனவே நியமிக்கப்பட்ட அதன் பொதுச் செயலாளர் என். குமரகுருபரன் நியமனம் பெற்றிருக்க வேண்டும் . ஆனால், தன்னோடு திருகோணமலையில் போட்டியிட்டுத் தோல்வியடைந்த துரைரட்ணசிங்கத்தை நியமிக்கின்ற தன்னுடைய முடிவை வெளிப்படுத்தினார் இரா.சம்பந்தன். சட்டரீதியாக இடமிருந்தும் நீதியை நாடுவதற்குக் குமரகுருபரன் விரும்பியிருக்கவில்லை, அவர் சார்ந்து அதற்கான முன்னெடுப்பை அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் செய்யவுமில்லை. ஆதலால் தமிழ்க் காங்கிரஸ் சார்பாகக் கையொப்பமிட்டுக் கூட்டமைப்பை உருவாக்கியிருந்த குமரகுருபரனும் வெளியேறினார். கூட்டமைப்பின் பங்காளர்கள் ஒன்றுபட்டு அரவணைக்க வேண்டிய தமிழரசுத் தலைமைக் கூட்டமைப்பு உருவானபோது அது தந்தை செல்வா உருவாக்கிய தமிழர் விடுதலைக் கூட்டணியாக்வே இருந்தது. நிராகரிக்கப்பட்டவர்கள் என்று ஒரு கருத்து இன்று உலாவருகின்றது. ஆனால் இந்தக் கருத்தைச் சொல்பவர்கள் தமது அரசியல் வாழ்வில் ஒருதடவையெனும் நிராகரிக்கப்பட்டவர்கள் தான் என்பதை மறந்துவிடுகின்றார்கள்.

**தலைமைகளின் சாணக்கியமும் தமிழர்களின் தயக்கமும்**

காலத்துக்குக் காலம் தமிழ்த் தலைமை புது வடிவம் எடுத்து வரவேண்டிய தேவை ஏற்படுவதும் புதிய தலைமைத்துவம் கொடுக்கப்படுவதும் இயல்பான வரலாற்று நிகழ்வாகும். இந்த வரிசையிலே கடந்த 17ஆண்டுகளாக, தமிழினத்தின் வரலாற்றில் ஒரு முக்கியமான காலகட்டமான போர்க்காலம் உட்படத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வடக்குக் கிழக்கு வாழ் தமிழினத்தின் அரசியல் தலைமைத்துவமாகப் பரிணமித்திருக்கின்றது. அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், தமிழ் அரசுக் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி எனும் வரிசையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் உரிமை சார்ந்த தமிழர் அபிலாசைகள் எதையும் பெறமுடியாத நிலையில் பயணித்துக்கொண்டிருக்கிறது. விசுவாசமான, நம்பிக்கைக்குப் பத்திரமாக நடக்கும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைமை எனும் சாணக்கியம், பண்டா செல்வா ஒப்பந்தம் , டட்லி-செல்வா ஒப்பந்தத் தோல்விகள், உருவாக்கப்பட்ட மாவட்டசபைத் தோல்வி என்பனபோன்று அமைந்துவிடப் போகின்றது எனும் தயக்கமும், பயமும் தமிழ் மக்கள் மத்தியில் ஏற்றப்பட்டு விட்டது. எஞ்சி இருக்கும் குறுகிய காலத்திலேனும், தம்மை நம்பி, நல்லாட்சிக்கு ஒத்துழைத்த தமிழ் அரசின் தலைமையை, தலைவர்களை தமிழ் மக்கள் மத்தியில் தவறிழைத்தவர்களாகப் பார்க்கும் நிலைக்கு நல்லாட்சியின் பங்காளர்களான அரசதலைவரும், தலைமை அமைச்சரும் தள்ளி விடக்கூடாது. இதற்கான கருமங்களைத் துணிவோடு ஆற்ற வேண்டியவர்கள் இரா சம்பந்தனும், அவரது நம்பிக்கைக்குப் பாத்திரமான எம். ஏ. சுமந்திரனுமே. இவர்களைப் பலிக்கடா ஆக்கிவிட்டு ஏனையவர்கள் ஒதுங்கி விடுதல், தப்பிப் பிழைத்தல் சாணக்கியமாகிவிடும்.

**தலைமைத்துவங்களில் மாற்றங்கள்**

தமது அரசியல் வரலாற்றில் பல்லாண்டுகளுக்கு ஒரு தடவை ஒன்றுபட்ட அரசியல் தலைமைக்காக உதிரம் பாய்ச்சப்பட்டு, தமிழ் மக்களால் புதிய தலைமைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டு வந்திருப்பதைத் தெளிவாக அவதானிக்க முடியும். அந்த வகையில் சேர்.பொன்னம்பலம் இராமநாதன், சேர். பொன்னம்பலம் அருணாச்சலம் என்னும் சகோதரர்களின் தலைமை 1933ஆம் ஆண்டு வரை நீடித்தது. நல்லை நகர் ஆறுமுகநாவலரும் தமது சமயப் பங்களிப்புகளுக்கு அப்பால் சமுதாயப் பங்களிப்பாக இவர்களது தலைமைத்துவத்தைப் பெருமளவில் ஆதரித்தார். அதன் பின்னர் மேல்மாகாணத்தில் எழுந்த பேரினவாதமானது அருணாச்சலத்துக்குச் சட்டசபைப் பிரதிநித்துவம் கிட்டாது போக ஒரு வகையில் காரணமாயிற்று. அதேபோல் இராமநாதனும் ஐக்கிய இலங்கைக்குள் சிங்கள பௌத்தத்தின் வளர்ச்சிக்காகவும் உண்மையான இலங்கையராகப் பணியாற்றித் தமிழர் உரிமைகளை வலியுறுத்தியபடி தனது உலக வாழ்வை நீத்துக் கொண்டார். அடுத்த கால கட்டத் தலைமையாக 1929ஆம் ஆண்டு முதல் சட்டமேதை ஜி.ஜி.பொன்னம்பலமும், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரசும் அதன் தலைவர்களும் திகழ்ந்தனர். இந்தக் கால கட்டத்தில் தான் சுதந்திர இலங்கையின் முதலாவது அரசமைப்புச் சட்டம் சோல்பரி பிரபுவால் வரையப்பட்டது. சம பலத்தை வலியுறுத்தி சிறுபான்மை மக்களுக்கும் ஐம்பது வீத சம உரிமையைக் கோரி நின்றார் ஜி.ஜி.பொன்னம்பலம். அதேபோல் தமிழ்ப் பிரதேசங்களில் பெரிய அபிவிருத்தித் திட்டத்தையும், சீமெந்துக் கூட்டுத்தாபனம், பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனம, கிழக்கிலங்கைக் கடதாசி ஆலை கூட்டுத்தாபனம் மற்றும் பொற்தொழிலாளர், புகையிலை உற்பத்தி என்பவற்றுக்கான மானியங்கள் எனத் தமிழ்ச் சமுதாயத்தின் பொருளாதார வளர்ச்சியில் பெரும் பங்காற்றினார். இதன் பின்னர் சிங்கள தேசம் ஏற்படுத்திய இனவாத நடவடிக்கைகளின் பாதிப்பால். குறிப்பாகத் தனிச் சிங்களச் சட்டம், சிங்கஎளஸ்ரீ அறிமுகம், இனக்கலவரங்கள் என்பவற்றின் காரணமாக அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் எழுச்சி மாற்றம் காண நேரிட்டது.



**வட்டுக்கோட்டைத் தீர்மானமும் சுயநிர்ணய உரிமைப் போராட்டமும்**

1972ஆம் ஆண்டில் இலங்கையின் முக்கிய தமிழ்க் கட்சிகளான தமிழ் அரசுக் கட்சி, தமிழ்க் காங்கிரஸ், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் என்பவை சேர்ந்து தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி என்னும் கூட்டமைப்பை உருவாக்கின. மேற்படிக்கட்சிகளின் தலைவர்களாக இருந்த எஸ். ஜே. வி. செல்வநாயகம், ஜீ. ஜீ. பொன்னம்பலம், சௌ. தொண்டமான் ஆகியோர் கூட்டுத் தலைவர்களாக நியமிக்கப்பட்டனர். 1976ஆம் ஆண்டில் இந்த அமைப்பு தமிழர் விடுதலைக் கூட்டணி எனப் பெயர் மாற்றம் பெற்றது. வட்டுக்கோட்டையில் நடந்த அதன் மாநாட்டில், 'வட்டுக்கோட்டைத் தீர்மானம்' என்று பரவலாக அறியப்படும் தீர்மானத்தையும் நிறைவேற்றியது. இந்தத் தீர்மானதில் எஸ்.ஜெ.வி. செல்வநாயகம் தான் அறவழிப் போராட்டங்களில் தோல்வி கண்டுவிட்டதாகவும் ஆதலின் சுயநிர்ணய உரிமைக்கான போராட்ட ஆரம்பத்தையும் வெளிப்படுத்தினார். 1977ஆம் ஆண்டில் நடைபெற்ற பொதுத் தேர்தலில், கொள்கைக்கு மக்கள் ஆணை கோரிப் போட்டியிட்ட தமிழர் விடுதலைக் கூட்டணி பெரும் வெற்றி பெற்று முதன்மை எதிர்க் கட்சியாக அமரும் வாய்ப்பைப் பெற்றது. கூட்டணித் தலைவர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் எதிர்க்கட்சித் தலைவரானார். அன்று உருவாகிய தமிழ்க் கோஷம் இன்றுவரை தமிழர் தம் அபிலாஷைகளை அடையவில்லை என்று உறுதியாகக் கூற முடியும்.

**அரசியலில் நேர்மை இருக்கவேண்டும்**

இன்று நாம் நமக்கு நேர்மையானதாகப் பார்ப்போமானால் தமிழருக்கு இருக்கக் கூடிய தலைமைத்துவ வல்லமைக்குள்ளேயும் ஆட்சியிலிருக்கின்ற அல்லது சிங்களத் தலைமைகளால், இனவாதங்களுக்குள் அமைந்து வழங்கக் கூடிய அரசியல் தீர்வு, ஒன்றுபட்ட இலங்கைக்குள்ளான கூடுதலான அதிகாரப் பகிர்வாகவோ, அன்றிவேறொன்றாக ஒருபொழுதும் அமையாது என்பது திண்ணம். ஏனையவை எல்லாம் பேச்சளவில் எமது அபிலாசைகளாக எப்போதுமே நிலவும். அல்லது ஒருவரை ஒருவர் குறை கூறுவதற்குப் பயன்படும். அரசியலிலும் நேர்மையிருக்க வேண்டும் என்று கூறுவார் அமரர் குமார் பொன்னம்பலம். கூட்டமைப்பின் சிதைவும், பெரியளவில் பணி ஆற்றியிருக்க வேண்டிய வடமாகாண சபை பற்றிய பார்வையையும் பல்வேறு மட்டங்களிலும் மக்களைப் பாதித்துள்ளது. அரசியல் தீர்வு அடையப்படும் வரை இன்றுள்ளது போலன்றிய தமிழ் மக்களின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எனும் ஒருமைப்பட்ட சக்தி-ஒன்று தேவை. அன்று உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப்போல மக்கள் பிரதிநிதிகள், தமிழ்க் கட்சிகள் அனைத்தையும், உண்மையான ஆர்வலர்கள் அனைவரையும் உள்ளடக்கிய, உள்வாங்கிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பொன்று கைச்சாத்திடப்பட்டு உருவாக்கப்பட வேண்டும். இதுவே அர்த்த புஷ்டி யுள்ளதாக அமையும். இதற்குச் சம்பந்தனின் பொறுமைக்கான அமைதி எனும் சாணக்கியப் பாதையும், உரிமையுடன் கூடிய ஆனால், சாணக்கியமறிந்து பேசவல்ல விக்னேஸ்வரன் போன்ற சக்தியும் இணையவேண்டும். ஏனையவர்களும் அரசியல் காழ்ப்புணர்வற்ற முதுமையை நேர்மையைத் தமது கருத்தில் பேணவேண்டும். புதிய தமிழர் தேசியக் கூட்டமைப்பு உருவாக வேண்டும்.

கட்டுரையாளர்–
கலாநிதி நல்லையா குமரகுருபரன்
முன்னாள் மேல் மாகாணசபை உறுப்பினர்
தலைவர் தமிழ்த் தேசியப் பணிக்குழு

## ஆசிரியருக்கான கடிதம்

# தகுந்த பாடத்தைக் கற்பிப்பார்களா வடபகுதி மக்கள்?

தமிழ்த் தலைவர்கள் மேடைப் பேச்சுக்கே இலாய்க்காணவர்கள். எமது பிரதிநிதிகளுக்கு தோசையே போடத் தெரியாது. இவ்வாறெல்லாம் கிண்டலடித்திருக்கிறார். வெகுவிரைவில் வடக்கு மாகாண முதலமைச்சரின் இருக்கையை விட்டுவிலகப்போகும் சி.வி. விக்னேஸ்வரன். அவர் யாரைப் பார்த்து இவ்வாறான கிண்டல் வார்த்தைகளைப் பயன்படுத்தினார் என்பதைக் கூறத் தேவையில்லை. ஏனென்றால் அவர் தற்போது நின்கின்ற இடமே வேறு.

2013ஆம் ஆண்டு கூட்டமைப்புத் தலைமை விக்னேஸ்வரனைப் பார்த்துச் சுண்டு விரலைக் காட்டியதால் வடபகுதி மக்கள் அவருக்குத் தமது அமோக ஆதரவைத் தெரிவித்திருந்தனர். விக்னேஸ்வரனும் ஒரு லட்சத்துக்கும் அதிகமான விருப்பு வாக்குகளைப் பெற்று முதலமைச்சரின் கதிரையில் அமர்ந்து கொண்டார். அவர் பதவிக்காகவே கூட்டமைப்புடன் இணைந்திருந்தமை பின்னர்தான் தெரியவந்தது. நம்பிக்கையில்லாத் தீர்மானம் மூலமாக அவரைப் பதவியிலிருந்து அகற்றி விடுவதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன. அப்போது கூட்டமைப்புக்கு எதிராக சக்திகள் அவருக்கு நேசக் கரங்களை நீட்டின. இதைக் கண்டு புளகாங்கிதம் அடைந்த விக்னேஸ்வ ரன் மக்கள் அனைவரதும் ஆதரவு தமக்கேயெனத் தப்புக்கணக்குப் போட்டுக்கொண்டார். இதன் பின்னர் கூட்டமைப்புக்கு எதிராகத் தீவிரமாகச் செயற்பட ஆரம்பித்தார்.


கூட்டமைப்பின் தலைமையை விமர்சிக்க ஆரம்பித்தார். தலைமை காத்துவந்த மௌனம் அவருக்கு உற்சாகத்தைக் கொடுத்துவிட்டது.

அவர் தமது அரசியல் எதிர்காலம் தொடர்பாக விரைவில் அறிவிக்கவுள்ளார். கூட்டமைப்புக்கு எதிராக கொள்கையையே எதிர்காலத்திலும் அவர் கடைப்பிடிப்பாரென்பதும் எவருமே சந்தேகப்படமுடியாது.

ஆனால், வடபகுதி மக்கள் மனச் சலனத்துக்கு இடம் கொடுக்காது தம்முடன் என்றுமேகூட இருந்து கொண்டு பணியாற்றுபவர்கள் எவரென்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். விக்னேஸ்வரன் போன்றவர்கள் பதவிச் சுகத்துக்காகவும், ஆடம்பர வாழ்வுக்காகவும் மட்டுமே வடபகுதியை நாடி நிற்கின்றனர். பதவி துறப்பதற்கு இன்னமும் சில தினங்களே உள்ள நிலையில் கோடிக்கணக்கான ரூபா பெறுமதியான சொகுசு வாகனம் தமக்குத் தேவையென அடம்பிடித்தவர்தான் இந்த விக்னேஸ்வரன். இவர் மேடைகளில் பேசுவதைத் தமது வாழ்க்கையில் கடைப்பிடிப்பதில்லை. மக்கள் தன்னைத் தொடரவேண்டும் என்பதற்காக வீர வசனங்களை அள்ளிக்கொட்டுகின்றார்.

இவர் போன்றவர்களுக்கு வட பகுதி மக்கள் தகுந்த பாடம் கற்பிக்க வேண்டும். எதிர்காலத்தில் இவர் போன்றவர்கள் உருவாகாமல் இருப்பதற்கு இதுதான் சரியான வழியாகும்.

*வா.சந்திரசேகரன், யாழ்ப்பாணம்.*




## பாகிஸ்தானில் நில நடுக்கம் 5.3 ரிக்டர்களாகப் பதிவு

இஸ்லாமாபாத்.ஒக்.22
பாகிஸ்தானில் நேற்றுமுன்தினம் நிலநடுக்கம் ஏற்பட்டிருக்கிறது. ரிக்டர் அளவுகோலில் அது 5.3 புள்ளிகளாக அது பதிவானது. தஜிகிஸ்தான்-ஸின்ஜியான் எல்லைப்பகுதியில், 120 கிலோ மீற்றர்கள் ஆழத்தில் இந்த நில நடுக்கம் மையம் கொண்டிருந்தது. இஸ்லாமாபாத், பெஷாவர், சுவாட், புனிர், சாங்கலா, மலாகண்ட் உள்ளிட்ட பாகிஸ்தானின் பல்வேறு நகரங்களில் நில நடுக்கம் உணரப்பட்டது. நில நடுக்கம் ஏற்பட்டபோது மக்கள் அச்சம் அடைந்தனர். அவர்கள் வீடுகள், அலுவலகங்கள், வணிக நிறுவனங்கள், வணிக வளாகங்கள் உள்ளிட்ட கட்டடங்களை விட்டு வெளியேறி வீதிகளிலும், திறந்தவெளி மைதானங்களிலும் தஞ்சம் புகுந்தனர். இந்த நில நடுக்கத்தால் உயிர்ச்சேதமோ, பொருட்சேதமோ ஏற்பட்டதாகத் தகவல்கள் இதுவரை வெளியாகவில்லை.



## சீனாவின் செயற்கை நிலவு நிலவைக் காட்டிலும் பிரகாசம்!

பீஜிங்.ஒக்.22
சீனாவில் நகர்ப்புறங்களில் மின்சாரச் செலவினங்களைக் குறைப்பதற்காக தெரு விளக்குகளுக்குப் பதிலாக 'செயற்கை நிலவை' 2020ஆம் ஆண்டு அறிமுகம் செய்யும் என்று சீன ஊடகம் தெரிவித்துள்ளது. சீனாவின் தென்மேற்கு சிச்சுவான் மாகாணத்தில் உள்ள செங்டு நகரம் இதற்காகவென்றே 'ஒளிபாய்ச்சும் செய்மதிகளை' உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது. இவை உண்மையான நிலவுடன் சேர்ந்து வெளிச்சம் பாய்ச்சும் ஆனால், உண்மையான நிலவைக் காட்டிலும் 8 மடங்கு அதிக வெளிச்சம் பாய்ச்சுபவையாக இவை இருக்கும் என்று சீன ஊடகம் தெரிவிக்கிறது. மனிதனால் உருவாக்கப்படும் இந்தச் செயற்கை நிலவு ஜீசாங் செய்மதி மத்திய நிலையத்திலிருந்து சிச்சுவானில் அறிமுகம் செய்யப்படவுள்ளது. 2020ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தி 2022ஆம் ஆண்டில் மேலும் 3 செயற்கை நிலவுகள் சீன வானில் ஒளிரும். 2020ஆம் ஆண்டு அறிமுகம் பரிசோதனை முயற்சி என்றால் 2022ஆம் ஆண்டில் இது முழு சக்தியுடனான வர்த்தக ஆற்றல் மிக்க கண்டுபிடிப்பாக இருக்கும் என்று சீனா கூறுகிறது. சூரியனிலிருந்து ஒளிபெற்று பூமியில் பாய்ச்சும் இத்தகைய செயற்கை நிலவு ஆண்டுக்கு 1.2 பில்லியன் டொலர்கள் வரை மின்சாரச் செலவினங்களைக் குறைக்கும் என்று சீனா கூறுகிறது.

இந்தச் செயற்கை நிலவுகள் 50 சதுர கிலோ மீட்டர்கள் பரப்பளவு வரை வெளிச்சம் பாய்ச்சும். விண்வெளி ஆய்வில் அமெரிக்கா, ரஷ்யாவை விஞ்சத் துடிக்கும் சீனா இன்னும் சில திட்டங்களை வைத்துள்ளது. ஆயினும் இந்த ஒளியைப் பூமிக்குப் பிரதிபலிக்கச் செய்யும் முயற்சியில் சீனா முதன் முதலாக ஈடுபட்ட நாடாகாது.

இதற்கு முன்னர் 1990ஆம் ஆண்டில் ரஷ்யாவில் பெரியளவிலான கண்ணாடிகளை வைத்து சூரிய ஒளியை மறுபிரதிபலிப்பு செய்யும் முயற்சி மேற்கொள்ளப்பட்டிருந்ததும், இந்தத் திட்டத்துக்கு 'ஸ்னாம்யா' அல்லது 'பேனர்' என்று பெயரிடப்பட்டிருந்ததும் குறிப்பி டத்தக்கது.

## பத்திரிகையாளர் ஜமால்

# கொலையை ஏற்றுக்கொ

# ஜமாலின் உடலைக் கேட்கி



நியூயோர்க்.ஒக்.22
காணாமல்போயிருந்த ஜமால் கஷோகிஜி துருக்கியில் உள்ள சவூதியின் தூதரகத்தில் கொலை செய்யப்பட்டதை சவூதி அரேபியா முதன்முறையாக ஏற்றுக்கொண்டுள்ளது. அத்துடன் அதில் ஈடுபட்ட உளவுத் துறை அதிகாரிகளை அது பணிநீக்கம் செய்துள்ளது. இந்த நிலையில், ஜமாலின் உடல் எங்கே என்று கேட்டும், அமெரிக்க அதிபர் ட்ரம்ப் இதற்குக் கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அமெரிக்க அதிகாரிகள் குரல் கொடுத்து வருகின்றனர்.





ஜமால் விவகாரம் நாளுக்கு நாள் பெரிதாகிக்கொண்டே போனது. துருக்கியின் ஆதாரபூர்வமான குற்றச்சட்டுக் காரணமாகவும், பன்னாட்டு அளவில் சவூதி அரேபியாவுக்கு ஏற்பட்ட நெருக்கடி காரணமாகவும் துருக்கியின் இஸ்தான்புலில் உள்ள தன்னுடைய தூதரகத்தில் ஜமால் கொலை செய்யப்பட்டதைச் சவூதி ஏற்றுக்கொண்டது. சவூதி அரேபியத் தூதரகத்தில் ஜமால் சந்திக்கச் சென்ற நபருடன் அவருக்கு மோதல் ஏற்பட்டுள்ளது. அந்த மோதலில் ஜமால் இறந்திருக்கலாம். முதல்கட்ட விசாரணையில் இது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்பதாகவே சவூதியின் கொலையை ஏற்கும் பேச்சு இருக்கின்றது. எனினும் அவரை யார் கொன்றது. அவரது உடல் எங்கே? என்ற விவரங்களைச் சவூதி தெரிவிக்கவில்லை. ஆனால், தனது உளவுப்பிரிவுத் துணைத் தலைவர் அகமது அல் அன்சாரி மற்றும் அரசின் ஊடக ஆலோசகர் சவுத் அல் கதானி ஆகிய இருவரையும் பணி நீக்கம் செய்துள்ளது. இந்த விடயத்தில் ஆரம்பத்தில் இருந்தே கரிசனை காட்டி வந்தது அமெரிக்கா. ஜமாலின் கொலையில் சவூதி அளிக்கும் விளக்கம் போதுமானதாக இ
உடல் எங்கே என்பது
களை அந்த நாடு வெ
அவர்கள் கூறுவதை
ஆய்வு செய்ய வேண்
பர் ட்ரம்ப் கடும் ந
வேண்டும்" என அமெ
சர் ஒருவர் கூறியிருக்

**பின்னணி**

கொலை செய்யப்பட்
டும் ஜமால் அமெரிக்க
டன் போஸ்ட்' பத்திரி
விமர்சித்தும் குறிப்ப
முகமது பின் சல்மா
கட்டுரைகளை எழு
யைச் சேர்ந்த பெண்
ணம் செய்யவிருந்த

## "தேர்தலைச் சீர்குலைப்பதற்கு சீனா, ரஷ்யா, ஈரான் வியூகம்"

## அமெரிக்கா குற்றச்சாட்டு; ரஷ்யாவைச் சேர்ந்தவர் கைது



வோசிங்டன்.ஒக்.22
அமெரிக்காவில் நடக்கவிருக்கின்ற இடைத்தேர்தலைச் சீர்குலைப்பதற்குச் சீனா, ரஷ்யா, ஈரான் ஆகிய நாடுகள் காத்திருப்பதாக அமெரிக்கா குற்றச்சாட்டியுள்ளது. அமெரிக்காவில் அடுத்த மாதம் இடம்பெறவுள்ள இடைத் தேர்தலைத் தங்களது செல்வாக்கைப் பயன்படுத்திச் சீர்குலைப்பதற்கு சீனா, ரஷ்யா, ஈரான் ஆகிய நாடுகள் காத்துக் கொண்டிருக்கின்றன. அவர்கள் சமூக வலைதளங்களின் மூலம் வேட்பாளர்களைப் பற்றி பொய்யான தகவல்களைப் பரப்புவார்கள். வெளிநாட்டினர் நமது தேர்தல்களில் தலையிடுவது நமது ஜனநாயகத்துக்கு அச்சுறுத்தலாகும் என்று அமெரிக்க அரசதரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. மேலும், ரஷ்யாவைச் சேர்ந்த எலினா அலெக்சீவ்னா குஸ்யாய்நோவா(வயது44) என்பவர் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், 2018ஆம் ஆண்டில் குற்றம் சாட்டப்பட்டுள்ள முதல் நபர் இவர்தான் என்றும் இது தொடர்பாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

**தேர்தல் தலையீடு**

2016ஆம் ஆண்டு நவம்பரில் அமெரிக்க அதிபர் தேர்தலில் குடியரசுக் கட்சி சார்பில் தொழிலதிபர் டொனால்ட் ட்ரம்பும், ஜனநாயகக் கட்சி சார்பில் முன்னாள் அயலுறவுத் துறை அமைச்சர் ஹிலாரி கிளிண்டனும் போட்டியிட்டிருந்தனர். தேர்தல் பரப்புரை உச்சக் கட்டத்தை எட்டிய நிலையில் ஹிலாரியின் சர்ச்சைக்குரிய 6.5இலட்சம் மின்னஞ்சல்கள் இணையத்தில் வெளியாகின. மேலும் ஹிலாரியின் உடல்நலம் குறித்த தகவல்களும் சமூக வலைதளங்களில் அதிகமாகப் பரப்பப்பட்டன. இவற்றின் பின்னணியில் ரஷ்ய ஆதரவு அமைப்புகள் செயற்பட்டதாகக் கூறப்பட்டது. அதிபர் தேர்தலில் ஹிலாரியைத் தோற்கடிப்பதற்கு ரஷ்ய அமைப்புகள் சமூக வலைதளங்களில் எதிர்மறையான கருத்துகளைப் பரப்பியதாக ஜனநாயகக் கட்சி பகிரங்கமாக குற்றம் சாட்டியிருந்தது. குறிப்பிட்ட விடயத்தை ஆராய்வதற்குத் தனி ஒரு குழுவும் நியமிக்கப்பட்டுச் செயற்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

# மால் விவகாரம்

# கொண்டது சவூதி
# ட்கிறது அமெரிக்கா

யின்
றை
அதிகா
ங்கே
க்கை
றனர்.



காலை
சவூதி
க்கும்
க்கம்
மானதாக இல்லை. ஜமாலின்
எங்கே என்பது உள்ளிட்ட விவரங்
அந்த நாடு வெளியிட வேண்டும்.
கள் கூறுவதை நம்பாமல் அதை
செய்ய வேண்டும். அமெரிக்க அதி
ம்ப் கடும் நடவடிக்கை எடுக்க
டும்" என அமெரிக்காவின் அமைச்
வர் கூறியிருக்கிறார்.

ணி

ல செய்யப்பட்டிருப்பதாகக் கருதப்ப
மால் அமெரிக்காவிலுள்ள 'வோஷிங்
ாஸ்ட்' பத்திரிகையில் சவூதி அரசை
த்தும் குறிப்பாக அதன் இளவரசர்
து பின் சல்மானை விமர்சித்தும்
ரைகளை எழுதி வந்தார். துருக்கி
சேர்ந்த பெண்ணை ஜமால் திரும
செய்யவிருந்த நிலையில், கடந்த


வாரம் துருக்கியின் இஸ்தான்புல் நகரிலுள்ள சவூதித் தூதரக அலுவலகத்துக்குச் சென்றவர் காணாமல் போனார். இந்த வழக்குத் தொடர்பாகச் சவூதியைச் சேர்ந்த 15 பேரின் பெயரை வெளியிட்டு ஜமாலை சவூதிதான் கொலை செய்திருக்கிறது என்று துருக்கி உறுதியாகக் கூறியதுடன், இதற்கான கானொலி மற்றும் ஒலிப்பதிவு ஆதாரத்தைத் துருக்கி வெளியிட்டிருந்தது. இதைச் சவூதி மறுத்து வந்தது. சவூதி பொறுப்புக் கூறவேண்டும் என்றிருந்தார் அமெரிக்க அதிபர். அத்தோடு அமெரிக்க அயலுறவுத்துறை அமைச்சரையும் சவூதிக்கு அனுப்பியிருந்தார். பத்திரிகையாளர் ஜமால் கசோக்கி சவுதி அரேபியாவால் கொலை செய்யப்பட்டிருந்தால், அந்த நாட்டின் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் ட்ரம்ப் எச்சரித்திருந்தார்.



தங்கள் எதிர்காலமே கேள்விக்குறியாகி உள்ள நிலையில் ஆயிரக்கணக்காண அகதிகள் கோட்டமாலா நகரில் காத்திருக்கின்றனர். இவர்களில் எதையுமே அறியாத பாலகன் ஒருவன் தன் பொம்மையுடன் நிலத்தில் காத்திருக்கிறான்

# ஆப்கானிஸ்தானில் நாடாளுமன்றத் தேர்தல் நடக்கிறது அங்கு நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலில் பலர் சாவு!

காபூல்.ஒக்.22
ஆப்கானிஸ்தானில் நடாடளுமன்றத் தேர்தல் நடைபெற்று வருகிறது. பல்வேறு பகுதிகளில் வாக்குச் சாவடிகளைக் குறி வைத்துத் தலிபான் ஆயுததாரிகள் தாக்குதல்களை நடத்திவருகிறார்கள். இதுவரை இதில் 13க்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர்.



249 உறுப்பினர்களை கொண்ட ஆப்கானிஸ்தான் நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறுகிறது. 2ஆயிரத்து 500க்கும் அதிகமான வேட்பாளர்கள் போட்டியிடுகின்ற இந்தத் தேர்தலில் சுமார் 89இலட்சம் பேர் வாக்களிக்கவுள்ளனர். இதற்காகச் சுமார் 5ஆயிரம் வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த நாடாளுமன்றத் தேர்தலைப் புறக்கணிக்க வேண்டும் என அறித்துள்ள தலிபான் ஆயுததாரிகள், நாட்டின் பல பகுதிகளில் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர். கடந்த சில நாட்களில் இவர்கள் நடத்திய தற்கொலைக்குண்டுத் தாக்குதல்களில் பத்துக்கும் அதிகமான வேட்பாளர்களும் நூற்றுக்கணக்கான பொதுமக்களும் உயிரிழந்தனர். ஆயிரத்துக்கும் அதிகமானோர் காயமடைந்தனர். தலிபான்களின் கோட்டை என்று கருதப்படும் கந்தஹார் மாகாணத்தில் உள்ள ஆளுநர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் அவர்கள் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் கந்தஹார் மாகாணத்தின் பொலிஸ் தலைவர் ஜெனரல் அப்துல் ரசிக், உளவுத்துறைத் தலைவர் மற்றும் ஒரு பத்திரிகையாளர் ஆகியோர் கொல்லப்பட்டனர். ஆளுநர் உள்பட 13 பேர் காயமடைந்தனர். வாக்குப்பதிவின்போதும் தலிபான்கள் இதுபோன்ற கொடூரமான தாக்குதல்களில் ஈடுபடலாம் என அங்குள்ள பொதுமக்களிடையே பீதி நிலவியது. இதைத் தொடர்ந்து, கந்தஹார் மாகாணத்தில் மட்டும் தேர்தல் ஒருவாரத்துக்கு பின்னர் நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில், நேற்றுக் காலை வாக்குப் பதிவு தொடங்கியதும் வாக்குச் சாவடிகளாக மாற்றப்பட்ட பள்ளிகளில் ஏராளமான வாக்காளர்கள் ஆர்வத்துடன் வாக்களிக்கச் சென்றனர். தலைநகர் காபூலில் உள்ள சில பள்ளிகள் மீது தலிபான் பயங்கரவாதிகள் நேற்று வெடிகுண்டுகளை வீசி தாக்குதல் நடத்தினர். இதனால் பீதியடைந்த வாக்காளர்கள் அங்கிருந்து தப்பி ஓடினர். இதேபோல் நாட்டின் பிறபகுதிகளிலும் வாக்குச்சாவடிகள் மீது தலிபான்கள் தாக்குதல் நடத்தினர். இந்த தாக்குதல் சம்பவங்களில் 13க்கும் அதிகமானவர்கள் உயிரிழந்ததாகவும் பலர் காயமடைந்ததாகவும் ஆப்கானிஸ்தான் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கம்"
கது



கிளிண்
ப்புரை
ாரியின்
சல்கள்
ாரியின்
லதளங்
பின்ன
பட்டதா
ரியைத்
வலை
பரப்பி
ம் சாட்டி
தற்குத்
ற்பட்டு

# ரஷ்யாவுடனான அணு ஒப்பந்தத்தில் இருந்து அமெரிக்கா வெளியேறும்

வோஷிங்டன்.ஒக்.22
அணு ஆயுத ஒப்பந்தத்தை மீறிவரும் ரஷ்யாவுடன் இனியும் இணைந்திருப்பதில் அர்த்தமில்லை. அந்த ஒப்பந்தத்தில் இருந்து அமெரிக்கா வெளியேறும் என அமெரிக்காவின் அதிபர் டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

அணு ஆயுத ஒப்பந்தத்தில் உள்ள நிபந்தனைகளுக்கு ரஷ்யா கட்டுப்படவில்லை. அவர்கள் பல ஆண்டுகளாக இதை மீறி வந்துள்ளனர். இதுதொடர்பாக, முன்னாள் அதிபர் ஒபாமா ஏன் பேச்சுவார்த்தை நடத்தி வெளியேறவில்லை என்பது எனக்குத் தெரியவில்லை. எங்களுக்கு அனுமதி இல்லாத ஆயுதங்களை அவர்கள் தயாரிப்பதை இனியும் அனுமதிக்க முடியாது. எனவே, அந்த அணு ஆயுத ஒப்பந்தத்தை நாங்கள் நீக்கப் போகிறோம் என அமெரிக்க அதிபர் ட்ரம்ப் தெரிவித்திருக்கிறார்.



**பின்னணி**

அணு ஆயுதப் பரவலைக் குறைக்கும் வகையில் அதிபயங்கர பேரழிவை ஏற்படுத்தும் போர் ஆயுதங்களைத் தயாரிப்பதில்லை என ரஷ்யாவும் அமெரிக்காவும் ஒப்பந்தம் செய்திருந்தன.



1987ஆம் ஆண்டிலிருந்து இந்த ஒப்பந்தம் பதவிக்கு வருகின்ற இரண்டு நாட்டு அதிபர்களால் அடுத்தடுத்துப் பத்தாண்டுகளுக்கு ஒருமுறை புதுப்பி க்கப்பட்டு வருகிறது.

தரையில் இருந்தோ, கடலில் இருந்தோ 300முதல் 3ஆயிரத்து 400 மைல் தூரம்வரை பாய்ந்து சென்று தாக்கும் அணு ஆயுத ஏவுகணைகளை இரண்டு நாடுகளும் ஒழிக்க வேண்டும் இந்த ஒப்பந்தத்தின் முக்கிய அம்சமாகும். இந்த ஒப்பந்தத்தை ரஷ்யா மீறி வருவதாக அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் தொடர்ந்து குற்றம்சாட்டி வருகின்றார். இந்த நிலையில்தான் அவர் மேற்கண்டவாறு தெரிவித்திருக்கிறார்.



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** உயர்ந்த குறிக்கோளுடன் செயல்படுவீர்கள். தொழில், வியாபாரம் செழிக்க புதிய நுட்பங்களை பயன்படுத்துவீர்கள். மேலதிக வருமானம் கிடைக்கும்.

**இடபம்:** உங்கள் செயல்களில் நியாய, தர்மத்தை பின்பற்றுவீர்கள். பலரும் உங்கள் மீது நல்லெண்ணம் கொள்வர். தரும். கூடுதல் பணவரவு கிடைக்கும்.

**மிதுனம்:**பொது பிரச்சினையில் கருத்து சொல்ல வேண்டாம். நற்பெயரை பாதுகாப்பது நல்லது. தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்கை அடைய கூடுதல் பணிபுரிவீர்கள்.

**கடகம்:** சிலரது பேச்சால் அதிருப்தி கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் கூடுதல் பணிச்சுமை ஏற்படும். பணவரவுக்கேற்ப செலவுகளைத் திட்டமிடுவீர்கள்.

**சிங்கம்:** வாழ்வில் புதிய நம்பிக்கையுடன் செயல்படுவீர்கள். உறவினர்களை மதிப்புடன் நடத்துவீர்கள். தொழில் வளம் பெற இஷ்ட தெய்வ அருள் துணை நிற்கும்.

**கன்னி:** சாதுர்யகுணத்தால் தடைகளை வெல்வீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியில் திட்டமிட்ட இலக்கு நிறைவேறும். தாராள பணவரவில் சேமிப்பீர்கள்.

**துலாம்:**உங்களின் யதார்த்த பேச்சு பிறரை சங்கடப்படுத்தும். தொழில், வியாபாரத்தில் கூடுதல் பணிச்சுமை உருவாகும். அதிக நிபந்தனையுடன் பணம் கடன் பெற வேண்டாம்.

**விருச்சிகம்:** உங்களின் யதார்த்த பேச்சு பிறரை சங்கடப்படுத்தும். தொழில், வியாபாரத்தில் கூடுதல் பணிச் சுமை உருவாகும்.


**தனுசு:** உழைப்பின் அருமையால் உயர்வு பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி விற்பனை அதிகரிக்கும். ஆதாயம் கூடும். வீடு, வாகன வகையில் பராமரிப்பு பணி செய்வீர்கள்.

**மகரம்:** மனசாட்சிக்கு முக்கியத்துவம் அளிப்பீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி பெற கூடுதல் பணி புரிவது அவசியம். இலாபம் மிதமாக இருக்கும்.

**கும்பம்:** திட்டமிட்ட செயல் நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் இருந்த போட்டி குறையும். தாராள பணவரவால் சேமிப்பு கூடும். குடும்பத்தில் மங்கல நிகழ்வு ஏற்படும்.

**மீனம்:** மனதில் அதிருப்தி ஏற்படலாம். அந்தஸ்தை பாதுகாப்பதில் உரிய கவனம் செலுத்தவும். தொழில், வியாபாரத்தில் அளவான மூலதனம் போதும்.

# 'வட சென்னை'யை எதிர்க்கும் மீனவர்கள்!



வட சென்னை திரைப்படத்தில் மீனவர்களைதரக்குறைவாகச்சித்திரித்துள்ளனர். அந்தப்படத்தைத்தடைசெய்யவேண்டும் எனவலியுறுத்திக்காவல்ஆணையர்அலுவலகத்தில் முறைப்பாடு அளிக்கப்பட்டுள்ளது.

தனுஷ் நடிப்பில் தமிழில் வெளிவந்த 'வட சென்னை' திரைப்படம் மீனவர்களைத் தவறாக சித்திரிக்கும் வகையில் உள்ளதால் அந்த படத்தைத் தடை செய்வதோடு நடிகர் மற்றும் தயாரிப்பாளர் தனுஷ், இயக்குநர் வெற்றி மாறன்மற்றும்இயக்குநர்அமீர்ஆகியோர்மீது தக்கநடவடிக்கை எடுக்கவேண்டும்எனப்பாரதிய மீனவர் கூட்டமைப்புச் சார்பில் சென்னை காவல் ஆணையர் அலுவலகத்தில் முறைப்பாடு அளிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்துசெய்தியாளர்களிடம்பேசியமீனவர் அமைப்பின்தலைவர், வடசென்னைதிரைப்படத்தில்மீனவர்களையும்மீனவர்சமுதாயத்தையும்தவறாகச்சித்திரிக்கும்வகையில்உள்ளதாகவும் இது தங்களை வெகுவாக மன உளைச்சலுக்கு ஆளாக்கியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## தண்ணீரை சேமிப்போம்






**அம்மா:**
"மகனே ஏன்டா இந்தப் படத்துக்கு இப்படி அழுவுற...??!!!"

**அப்பா:**
"ஹலோ, அழுதது அவன் இல்ல.... நான்...!!"

**96 மெமரிஸ்**

## twitter



**MOHANRAM.KO@MOHANRAMKO**
வெளியே புறப்படும் போதெல்லாம் 'தூக்கிபோட்டு மிதிக்க வேண்டியிருக்கு', செருப்பை...



**முகிலன்™@MJ_TWETS**
அரசு ஏழ்மையை ஒழிக்கும் என்று பார்த்தா, ஏழைகளை ஒழிச்சிடும் போல.!




**சாய்ராம்@SAIRSAIRAM**
ஒருவரின் புகழ் இறந்த பின்பும் நிலைக்க அவர் சம்பாதித்த பணத்தால் வராது... இருந்த போது அவர் செய்த நற்செயல்களால் மட்டுமே வரும்...



**ச ப் பா ணி @MANIPMP**
சம்பளம்வாங்கியதும்சலூன்கடைக்கு போகிறவனே "சேவிங்" செய்வதில் சிறந்தவன்



திறமை என்பது
கடவுளால் கொடுக்கப்பட்டது
அடக்கத்துடன் இருங்கள்

புகழ் என்பது
மனிதரால் கொடுக்கப்பட்டது
நன்றியுடன் இருங்கள்

அகம்பாவம் என்பது
எமக்கு நாமே கொடுத்துக் கொண்டது
எச்சரிக்கையுடன் இருங்கள்.



## சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | 2 | 4 | | |
| | 7 | 6 | 4 | | | | 9 | |
| 3 | | | | 1 | | | 5 | |
| 6 | | | | | | | 7 | |
| | | 4 | | | | 2 | | |
| | 5 | | | | | | | 1 |
| | 1 | | | 5 | | | | 4 |
| | 9 | | | | 3 | 1 | 6 | |
| | | 8 | 2 | | | | | |

நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 9 | 7 | 1 | 6 | 3 | 8 | 2 | 4 |
| 2 | 6 | 3 | 4 | 8 | 7 | 1 | 9 | 5 |
| 4 | 1 | 8 | 2 | 9 | 5 | 3 | 6 | 7 |
| 3 | 2 | 9 | 8 | 5 | 6 | 4 | 7 | 1 |
| 8 | 4 | 1 | 9 | 7 | 2 | 5 | 3 | 6 |
| 6 | 7 | 5 | 3 | 1 | 4 | 9 | 8 | 2 |
| 1 | 8 | 2 | 7 | 4 | 9 | 6 | 5 | 3 |
| 9 | 3 | 6 | 5 | 2 | 1 | 7 | 4 | 8 |
| 7 | 5 | 4 | 6 | 3 | 8 | 2 | 1 | 9 |



# கண்ணீர் விடுவதில் தவறில்லை

வாய்விட்டுச் சிரித்தால் நோய்விட்டுப் போகும் என்பது போல் அழுகையும் உடலுக்கு ஆரோக்கியத்தைத் தரும் என விஞ்ஞானிகள் உறுதிபடக் கூறியுள்ளனர். கண்களை உணர்வுகளின் கண்ணாடி எனலாம்.

பெரும்பாலும் துன்பம், கவலை, வேதனை, பயம், ஏமாற்றம், இழப்பு, பிரிவு போன்ற உணர்ச்சிகளால் ஏற்படும் மன அழுத்தம் போன்வற்றால் கண் அதிகமாக கண்ணீரைச் சுரந்ததும் எமக்கு அழுகை வருகிறது. அளவுக்கு மீறிய மகிழ்ச்சியிலும் கூட கண்கள் கண்ணீரைச் சொரிகின்றன. இதனையே ஆனந்தக் கண்ணீர் என்கின்றோம்.

ஆயிரம் ஆறுதல் வார்த்தைகளை விடவும் தனிமையில் இருந்து சிறிதளவு நேரமாவது அழுது தீர்ப்பதன் மூலம் மனதில் ஏற்பட்ட அதிகளவு சோகத்தை வெளியேற்ற முடியும். அழுகை சோகத்தைக் கண்ணீராகக் கரைத்து வெளியேற்ற வல்லது.

கண்களில்உள்ளவிழிச்சுழல்வுகளுக்கான ஈரப்பசை தரும் சுரப்பிகள் இயல்பான அளவுக்கு மேல் அதிகமாகச் சுரப்பதால் மேலதிக நீர் கண்ணீராக வெளியேறுகிறது.


**கண்ணீரின் பயன்கள் பல:**

மனதிலுள்ள அழுத்தம் கண்ணீர் மூலம் வெளியேறிவிடும்.

கண்களில் உள்ள தூசு போன்ற அழுக்குகள் நீங்கி விடுகின்றன.

கண்ணீர் விடுவதால் அந்தச்செயல் கண்களுக்கு ஒரு பயிற்சியும் ஆகிறது.

கண்ணீர் விடுவது ஒரு கழிவு நீக்கச்செயற்பாடு என விம்பியம் பல்ரே என்ற அமெரிக்க விஞ்ஞானி கூறியுள்ளார்.



# தவளையின் பின்னங்கால்கள் ஏன் நீளமாக இருக்கின்றன?

தவளைகள் நீரிலும் நிலத்திலும் வாழக்கூடியவை. இடம்பெயர்வதற்காகத் தாவுகின்றன, நடக்கின்றன, ஓடுகின்றன, நீந்துகின்றன, மரம் ஏறுகின்றன. இந்த இயக்கங்களுக்கு எல்லாம் தவளையின் உறுதியான பின்னாங்கால்கள்தான் துணைபுரிகின்றன. குறிப்பாக நீர்நிலைகளில் திசை மாற்றுவதற்குப் முன்னாங்கால்கள் பயன்படுகின்றன.

தண்ணீரை உந்தி, முன்னோக்கிச் செல்வதற்கு நீண்ட பின்னாங்கால்கள்தான் உதவிபுரிகின்றன. வேகமாக நீந்துவதற்கும் எதிரிகளிடமிருந்து சட்டென்று தப்பிப்பதற்கும் காரணம் நீண்ட பின்னாங்கால்களே. தவளையின் வெற்றிகரமான வாழ்க்கைக்கு நீண்ட பின்னாங்கால்களே காரணமாகும்.

# நத்தை தந்த படிப்பினை



நல்லூர் பள்ளியில் சரவணன் படித்து வந்தான். அவனுக்கும் படிப்புக்கும் வெகுதூரம் வகுப்பிலே கடைசி மாணவனாக இருந்தான். இதற்குக் காரணம் வீட்டில் அவன் பாடப்புத்தகத்தைக் கண்ணெடுத்தும் பார்ப்பதில்லை.

சரவணனுக்கு ஆண்டவன் நல்லறிவை அளித்திருந்திரும் அதனை அவன் சரியான வழியில் வளர்த்துக் கொள்ளாததால் வெறும் சோம்பேறியாக மாறிவிட்டான். அது மற்றவர்களிடம் முட்டாள் பட்டத்தையும் வாங்கிக் கொடுத்தது. அதனால் மற்ற மாணவ, மாணவிகளும் கூட அவனைச் சிறிதும் மதிப்பதில்லை.

ஆசிரியர் பல வழிகளில் எத்தனையோ முறை புத்திமதி சொல்லியும் சரவணன் திருத்தியபாடில்லை.

ஆண்டுத் தேர்வு நெருங்கிக் கொண்டிருந்தது. பள்ளிப் பிள்ளைகள் எல்லோரும் இரவும் பகலும் இடையறாது கண் விழித்துப் படித்துக் கொண்டிருந்தனர். ஆனால் சரவணன் மட்டும் படிக்காமல் காலத்தைக் கடத்திக் கொண்டிருந்தான்.

ஒருநாள் காலை நேரம் சரவணன் படுக்கையை விட்டு எழுந்து வந்து கண்ணைக் கசக்கிக் கொண்டு நின்றான். அவனது தாயார் அவனைப் பார்த்து "ஏண்டா சரவணா பரீட்சை வருகிறது. இப்பவாவது புத்தகத்தை எடுத்து படிக்கக் கூடாதா? காலைப்படிப்பு மனதில் பதியும் என்று பெரியவர்கள் சொல்வார்கள். அதெல்லாம் உனக்குச் சொன்னாலும் புரியாதா?" என்று மகனைக் கோபித்துக் கொண்டார்.

சரவணன் தன் தாய் சொன்னதைக் காதில் வாங்கிக் கொள்ளாது பல்துலக்குவதற்கு வீட்டுத் தோட்டத்தை நோக்கிச் சென்றான். கிணற்றடியில் நின்று பல்தேய்த்துக் கொண்டிருந்த அவன் தோட்டத்தின் ஒரு பக்கத்து மூலையில் ஒரு நத்தை ஊர்ந்து வருவதைக் கண்டான். அடுத்த கணமே அவன் பார்வை வேறு பக்கங்களில் சென்றது. இவ்வாறு தோட்டத்தைப் பல பக்கங்களிலும் நோட்டம் விட்டவன் தற்செயலாகச் சற்றுமுன் நத்தை ஊர்ந்து வந்த அந்த மூலையைப் பார்த்தான். அங்கே நத்தை காணப்படவில்லை. வியப்படைந்த அவன் சுற்றும் முற்றும் பார்த்தபோது அந்த நத்தை அவன் காலடிக்கு அருகில் ஊர்ந்து வந்த வண்ணம் இருந்தது. இது அவனுக்கு மிகவும் ஆச்சரியமாகப் பட்டது. மீண்டும் மீண்டும் அவன் சிந்தித்தும் பார்த்தபோது அவனுக்கு ஒரு நல்ல படிப்பினை கிடைத்தது.

இவ்வளவு சிறிய நத்தை மெதுவாக ஊர்ந்த போதிலும் இவ்வளவு தூரத்தைக் கடக்க முடியும்போது புத்தியுள்ள நான் ஏன் தினம் தினம் கொஞ்சம் கொஞ்சமாகப் படித்து கல்வியில் முன்னேறக் கூடாது? என்று எண்ணினான்.


அப்போது அவனுள்ளே ஞானஒளி பிரகாசிக்கத் தொடங்கியது. அந்தச் சுடரில் அவனது ஆசிரியர் தோன்றி "தினமும் படித்தால் பரீட்சையில் வெல்லுவாய்" என்று சொல்வது காதில் ஒலிப்பது போல் இருந்தது.

நத்தையை உதாரணமாகக் கொண்டு நல்ல முடிவெடுத்த சரவணன் அன்று முதல் உற்சாகமாகக் கற்று பரீட்சைகளில் நிறையப் புள்ளிகள் பெற்றுக் கல்வியில் சிறந்து விளங்கினான்.






# உடலின் தூண்கள் எலும்புகளே



அறிவியல்

ஒரு கட்டடத்துக்குத் தூண்களும் சுவர்களும் உள்ளதுபோல், உடலுக்குள் எலும்புகள் உள்ளன. இவை பார்ப்பதற்குத் தனித்தனி எலும்பாகத் தெரிந்தாலும், தனி ஓர் எலும்பால் இயங்க முடியாது. அருகிலுள்ள தசைகள், தசைநாண்கள், பிணையங்கள் (Ligaments) ஆகியவற்றுடன் இணைந்து இயங்கும் ஒரு கட்டமைப்பு இது. அதனால்தான், இதை 'எலும்புக் கூடு' (Skeleton) என அழைக்கிறோம்.

உடலுக்கு உருவம் கொடுப்பதும் வலுவைத் தருவதும் எலும்புகளே. எலும்புகளுக்கு உடலைத் தாங்கும் உறுதி இருப்பதால்தான் நம்மால் நிற்க முடிகிறது. அதேபோல் ஓடியாடி விளையாடவும், குனிந்து நிமிர்ந்து, வளைந்து நெளிந்து செல்லவும், நடனம் ஆடவும் முடிகிறது என்றால், அதற்கு எலும்புகள் தரும் அசைவுகள்தான் காரணம்.

உடலில் எலும்புகள் இருக்கும் இடம், அங்குள்ள அசைவுகள், தேவைகள், வலு ஆகியவற்றைப் பொறுத்து எலும்பு ஒவ்வொன்றும் ஒவ்வொரு வடிவத்திலும் அளவிலும் உள்ளது. அதைவைத்து, எலும்புகளைக் குட்டை எலும்புகள் (Short bones), நெட்டை எலும்புகள் (Long bones), தட்டை எலும்புகள் (Flat bones), ஒழுங்கில்லாத எலும்புகள் (Irregular bones), நாண் உள்எலும்புகள் (Sesamoid bones) என வகைப்படுத்தி உள்ளனர்.

மணிக்கட்டு எலும்புகள் குட்டையாகவும், கை, கால் எலும்புகள் நீண்டதாகவும், நெஞ்செலும்பு (Sternum) தட்டையாகவும், முதுகெலும்பு சீரில்லாமலும் இருப்பதைக் காணலாம். முழங்கால் மூட்டுச்சில்லு எலும்பு (Kneecap) நாண் உள் எலும்புகளில் மிகப் பெரிது.


என்றாலும் நெஞ்செலும்பு, இடுப்பெலும்பு, தொடை எலும்பு போன்ற பெரிய எலும்புகள் ஒரு பொதுவான அமைப்பைப் பெற்றுள்ளன.

தாயின் வயிற்றில் இருக்கும் கருவில் தொடங்கி 18லிருந்து 25 வயதுவரை எலும்புகளின் வளர்ச்சி இருக்கிறது. அதன் பின்னர் வளர்ச்சி நின்றுவிடுகிறது. எலும்பின் வளர்ச்சிக்கு உணவுச் சத்துகளும், ஓமோன்கள், விற்றமின் டி, கல்சியம் ஆகியவையும் தேவை.



# மாற்றமும் அபிவிருத்தியும்!

பா.தனபாலன்



மாற்றங்களை உள்வாங்கிக் கொள்வதற்கான வாழ்க்கை நீடித்த செயன்முறைக் கற்றலாக விளங்குகிறது. அதீத பலம் கொண்டவை அல்லது அதீத நுண்ணறிவு கொண்டவை தாண்டி மாற்றங்களுக்குச் சீரான முறையில் உட்படும் உயிரிகள் மட்டுமேதப்பிப்பிழைக்கின்றன. எனவே கல்வியியலிலும், பாடசாலை தாண்டிய சமூக அரசியல் வாழ்விலும் மாற்றங்களை முகாமைசெய்யும் தேர்ச்சி அனைவருக்கும் தேவையாகவுள்ளது. ஆனால் எமது பிராந்தியத்தில் மாற்ற முகாமைத்துவம் தொடர்பான பிரயோகங்கள் போதுமானவையாகக் காணப்படவில்லை. இந்த விடயங்கள் பிரதேச அபிவிருத்தியைப் பாதிப்படையச் செய்துவிடும். மனிதனின் மிகப்பெரிய பலம் என்பது ஏற்படும் மாற்றத்துக்கு ஏற்ப அவனால் அசைவியக்கம் கொள்ள முடிவதாகும். அத்துடன் தனது தேவைக்கு ஏற்பவே சூழலை மாற்றிக் கொள்ள முடிவதும் ஆகும். ஆனாலும் சூழலின் இயற்கை விதிகளுக்கு முரணாகப் பொருத்தமற்ற விதத்தில் கட்டுப்பாடில்லாத மாற்றங்களை ஏற்படுத்தும் போது. அதன் தீய விளைவுகளை மனிதன் சந்திப்பதுடன் அதன் தாக்கவன்மையையும் மனிதன் கண்டுகொள்கிறான்.

### மாற்றம்

வித்தியாசத்தை ஏற்றல் அல்லது ஏற்படுத்தல் மாற்றம் எனப்படுகிறது. இரண்டாம் உலகப் போரின் முடிவில்ல அணுக்குண்டுத் தாக்குதலுக்கு உள்ளான ஜப்பான், தன்னைத் தாக்கிய அமெரிக்கர்களின் உதவியுடன் தனது சொந்தத் தலைமைத்துவம், அர்ப்பணிப்பு, அதிக உழைப்பு என்பவற்றின் பாவனை கொண்டு உலகின் இரண்டாவது பெரிய பொருளாதார வல்லமையுடைய நாடாக மாற்றமடைந்தது. இது ஒரு தேசத்தில் நிகழ்ந்த சாதகமான மாற்றத்துக்குச் சிறந்த உதாரணமாகும். மாற்றத்தின் செய்முறை அபிவிருத்திகளாகப் பின்வருவன குறித்துக்காட்டப் பட்டுள்ளன.

•மாற்றம் அத்தியர்வசியமானது என்பதை உறுதிப்படுத்தல்.
•மாற்றத்தை முன்னெடுத்துச் செல்லக்கூடிய குழுக்களை உருவாக்கல்.
•மாற்றம் தொடர்பான ஒரு தரிசன நோக்கையும், மூலோபாயத்தையும் விருத்தி செய்தல்.
•குறித்த துறையினரை மாற்றத்தைச் செயற்படுத்தும் விதமாக வலுப்படுத்தல்.
•மாற்றத்தை நடைமுறைப்படுத்தி சிறு சிறு வெற்றிகளை ஏற்படுத்தல். இந்த வெற்றிகளை அபிவிருத்தி செய்து அடுத்தடுத்த மாற்றங்களை ஏற்படுத்தல்.
•புதிய வெற்றிகரமான மாற்றங்களை நிறுவனக் கலாசாரத்தில் உறுதிப்படுத்தல்.

இந்தவகையில் மாற்றங்கள் தவிர்க்க முடியாதவையாகக் காணப்படுகின்றன. எனவே தனி மனிதர்களும், நிறுவ னாங்களும் மாற்றங்களை உள்வாங்கிக் கொள்ள வேண்டும். அவற்றின் இயல்புகளுக்கு ஏற்பவே துலங்க வேண்டும். அபிவிருத்தி என்பது மாற்றங்களுக்கிடையில் ஒழுங்கைப் பேணலும், ஒழுங்குகளுக்கிடையில் மாற்றங்களை ஏற்படுத்தலும் என்ற வகையில் அமைந்துள்ளது. போரால் சிதைவடைந்த எமது மண்ணில் மிக அவசியமாகத் தேவைப்படுவது மாற்ற முகாமைத்துவமும் அபிவிருத்தியுமாகும்.

### மாற்ற முகாமைத்துவம்

தனி மனிதரில், அல்லது நிறுவனத்தில், அல்லது நாட்டில் ஏற்படக்கூடிய மாறுநிலைகளை உறுதிப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு அபிவிருத்திக்கு ஏற்ப வித்தியாசத்தைத் திறம்பட நடைமுறைப் படுத்தவே மாற்ற முகாமைத்துவமாகும். இதற்கு நிறுவனத் தலைவர் மாற்ற முகாமையாளராகத் தன்னை உருமாற்றிக் கொள்ள வேண்டும்.
நிறுவனத் தலைவர் அபிவிருத்திக்கான மாற்றத்தை வழிநடத்தப் போகிறார் எனில், அந்த மாற்றம் தொடர்பான உடன்பாடான மனப்பாங்கைக் கொண்டிருக்க வேண்டும். மாற்றங்களை நிறுவன உறுப்பினர்கள் முழுமனதோடு ஏற்றுக் கொள்ளும்படி அவர்களை ஊக்கப்படுத்த வேண்டும். மாற்றங்கள் அவசியமானவை என்பதை அவர்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் வினைத்திறனான தொடர்பாடலைப் பேணிக்கொள்ள வேண்டும்.



நிறுவனத் தலைவர் தனது மாற்ற முகாமைத்துவம் தொடர்பான உணர்வுகளைப் பற்றிய சுயவிளக்கத்தைக் கொண்டிருக்க வேண்டும். அதனடிப்படையில் எழும் நடத்தை மாற்றம் என்பது ஏனையவர்களில் என்ன வகையான தாக்கத்தை ஏற்படுத்தும் எனும் விழிப்பு ணர்வையும் கொண்டவராக இருக்க வேண்டும்.

### பொருத்தமான வகையில் மாற்றத்தை ஏற்படுத்துதல்

குறிப்பிட்ட மாற்றம் உண்மையில் அவசியம் தானா..?, மாற்றத்தை எங்கு நடைமுறைப்படுத்த வேண்டும்..?, மாற்றச் செயன்முறைக்குப் பொருத்தமான வளங்களை எவ்வாறு தேடுவது..?, மாற்றத்தை நடைமுறைப்படுத்துவதற்கான பொறுப்பாளர், செயற்பாட்டுக் குழுக்கள் யாவை? என்ற விதமாக மாற்ற முகாமைத்து வத்தின் இறுதி விளைவு அபிவிருத்தியாகக் காணப்படும்.
எம்மிடையே அமைவுபெற்றுள்ள பாடசாலைகளையும், அரச நிறுவனங்களையும், அரசியல் அமைப்புக்களையும் விரைவாக அபிவிருத்தி நோக்கிய மாற்றத்துக்கு உள்ளாக்கவேண்டும். இதற்குப் பாடசாலை அதிபர்களுக்கும், நிறுவனத் தலைவர்களுக்கும் மாற்ற முகா மைத்துவம் தொடர்பான விழிப்புணர்வுகளை ஏற்படுத்த வேண்டியுள்ளது. 'பொருத்தமான மாற்றம், புத்தாக்க மாற்றம், தீவிரமான மாற்றம்' என்ற வகையில் மாற்றத்தைப் பிரயோகிக்க வேண்டியவர்களே தாம் இருக்கும் சூழ்நிலைகளைக் குறை கூறுகின்றனர். உண்மையில இந்த செயல்முறைகளைப் பின்பற்றவதன் ஊடு வாழ்க்கையில் வெற்றிபெறமுடியாது.

### மாற்றமும் யதார்த்தமும்

எமது கல்வி, பொருளாதாரம், அரசியல், வாழ்வியல் சுபீட்சம் காணல் மற்றும் தோல்வியடைந்த வரலாற்றுத் திருப்பங்களில் இருந்து மீள்தல் போன்ற சிந்தனை பூர்வமான அறிவியல்த் தேடலும், யதார்த்த பூர்வமான எண்ண மாற்றமும் எமக்குத் தேவையாகவுள்ளது. யதார்த்தமான மாற்றங்களுக்கு ஏற்பவே அபிவிருத்தியை உள்வாங்கிக் கொள்ள வேண்டியுள்ளது. அது தருகின்ற பட்டறிவினூடே மாற்றங்களை முன்னுணர்ந்து தீர்க்க தரிசனத்துடன் எமது மண்ணுக்கான கல்வி, அரசியல், பொருளாதார விருத்திக்கு புதிய செயற்றிட்டங்களை உரு வாக்கவும் வேண்டியுள்ளது.

இலங்கையில் கடந்த பலநூறு வருட காலங்களாக தமிழ் மக்கள் தமது அரசியல், சமூக பொருளாதாரக் கல்வித்துறையில் தொடர்ந்து தோல்வியடைந்து வருகின்றனர். இது தொடர்பான விழிப்புணர்வு எம்மிடம் போதுமானதாக இல்லை என்றே தோன்றுகிறது. தோல்விகளில் இருந்து பாடங்களைக் கற்றுக் கொண்டு வெற்றிக்கான வழிகளைத் தேடல் கொள்ளாத இனமாக மாற்றங்கொண்டு ஈழத்தமிழினம் அடிமையாகவுள்ளது. அந்தவகையிலே அடிமைப்பட்டுள்ள இனத்தின் பண்புகளை ஆய்வாளர்கள் பின்வருமாறு எடுத்தியம்புகின்றனர்.

•மாற்றத்துக்கு ஏற்ப துலங்க முடியாத தன்மை.
•ஒற்றுமையின்மை.
•காட்டிக் கொடுத்தல் மற்றும் சுயநலமிகுதி.
•தலைவனை ஏற்காமை, பொருத்தமற்ற விமர்சனங்கள்.
•இனப் பாரம்பரியங்களை, கலாசார பெறுமானங்களின் பெறுமதியை உணர மறுத்தல்.

தவிர, ஈழத்தமிழர்களைப் பொறுத்தவரை அவர்கள் இனவாத ஒடுக்குமுறைக்கு உள்ளாகின்றனர். அறிவியல் ரீதியான மாற்றங்களுக்கு ஈடுகொடுக்கக் கூடிய அரசியல் ஆய்வுகளை நோக்கிப் பயணப்பட முடியாதுள்ளது. தமிழ்த்தேசிய சமூக, கல்வி, அரசியல் வளர்ச்சிக்கான ஆய்வுகள் அரச ஆதரவு அற்றவையாகவும், அரசின் எதிர்வினைக்கு உட்பட்டவையாகவும் உள்ளன. மேலும் இங்குள்ள புத்திஜீவிகளும், அரசியல்வாதிகளும் சுயமிழந்தவர்களாக உள்ளனர். சுயநலமான, தீர்க்க தரிசனமற்ற செயலாற்றுகைகளையே மேற்கொண்டு வருகின்றனர். இது எதிர்கால மாற்றங்களில் பெரிய பாதிப்புக்களை ஏற்படுத்தப் போகின்றது.

அந்தந்தக் காலப் புவிசார் அரசியல், சமூக மாற்றங்களுக்கு ஏற்ப தீர்க்க தரிசனமான ஒன்றிணைவையும், சரியான முடிவுகளையும், அபிவிருத்தித் திட்டங்களையும் தந்திரோபாய பொறிமுறைகளினூடாக செயற்படுத்த எத்தனங்களை மேற்கொள்ள வேண்டும். அதுவே இன்றை தேவையாக உள்ளது. ஏனைய இனக் குழுமங்கள் மாற்றங்களுக்கு ஈடுகொடுத்து முன்னேறிவரும் சூழலில், தமிழினம் தன்னைத் தானே அங்கீகரிக்காதுள்ளது. ஏனையவர்களின் அங்கீகாரத்துக்காக காத்திருக்க வேண்டிய தன்மைகளைப் பெற்றுக்கொண்டுள்ளது.

### சமூக அபிவிருத்திக்கான தலைமைத்துவம் வேண்டும்!

இந்த சந்தர்ப்பத்திலே தமது நீண்டகால எதிரியை தற்காலிக நண்பனாகக் கையாளவும், தற்காலிக நெருக்கடியைக் கடந்த பின்பு தற்காலிக நண்பர்களை விட்டு தங்கள் நீண்டகால நோக்கை அடையும் மாற்றத்துக்கான இராஜதந்திரத்தைப் பிரயோகிக்கவும் முடிந்த, நீண்ட கால நலன்களைப் பலியிடாத சமர்த்தியம் உள்ள மாற்றங்களைச் சாதகமாக எதிர்கொள்ளும் தலைமைத்துவம் எமக்குத் தேவையாகவுள்ளது.
அத்தோடு முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு பன்னாட்டுத் தரப்புகளிடையே பேசுபொருளாகியுள்ள ஈழத்தமிழர் பிரச்சினைகள் பன்னாட்டுப் புவிசார் அரசியல் தந்திரோபாய மாற்றத்துக்கு உட்பட வேண்டும். அதற்கான காய்நகர்த்தல்களைத் தமிழர்கள் சாதுரியமாக ஒற்றுமையுடன் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

இதற்கு வடக்குக் கிழக்கு தமிழ் மக்களின் ஒன்றிணைந்த அரசியல் ரீதியான பலத்தை ஒற்றுமையுடன் நிரூபிக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. அதை உணர்ந்துகொள்ள வேண்டும். மக்களுக்கும், மாற்றத்துக்கும், அபிவிருத்திக்குமான விழிப்புணர்வை பரவலாகவும், விரைவாகவும் மேற்கொள்ள வேண்டியுள்ளது. இதற்குத் தற்போதைய அமைப்புக்களின் செயலாற்றுகை போதுமானதாக இல்லை என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

ஆகவே, சமூக அமைப்புக்களை ஒன்றிணைத்து வலுவூட்டி மக்கள் விழிப்புணர்வுக்கான வேலைத்திட்டங்களை விரைவாகச் செய்ய வேண்டியுள்ளது. அத்தோடு கல்வி, பொருளாதார, கலாசார மற்றும் சமூக அபிவிருத்திக்கான வேலைத்திட்டங்களையும் விரைவு படுத்திக் கொள்ளவேண்டும்.


ES Printers
GRAPHIC design
Flyers
Print
Labels
Letter heads
DESIGNE
Scanning
Posters
Business cards
Booklet
Binding
PADDING
Envelopes
Annual Reports
2019 இற்கான அனைத்து வகையான
கலண்டர்களையும் குறைந்த விலையில்
செய்து பெற்றுக்கொள்ள நாடுங்கள்.
அனைத்தும்
தனித்துவமான
கணினி வடிவமைப்புடன்
2019
CALENDAR
2019
2016
Calendar 2019
JUNE
பனர் பிரிண்ட் (Banner),
வியாபார மற்றும்
ஏனைய நிறுவனங்களுக்கான
பெயர் பலகைகள் (Name Board),
மக் பிரிண்ட், ரீ-சேட், புத்தகங்கள்,
கையேடு (Handbills),
நோட்டிஸ் (Notice) மற்றும்
அனைத்து ஓவ்செற்,
டிஜிற்றல் அச்சக வேலைகள்
சகல நிறுவனங்களுக்குமான
பட்டியலேடு ( Bill Book)
காபன் பிரதி மற்றும் காபன்
பிரதி அற்ற, வர்ண மற்றும்
கறுப்பு வெள்ளை நிறத்தில்,
விரும்பிய அளவுகளில்
குறித்த நேரத்தில்
குறைந்த விலையில்
தரமாக செய்துதரப்படும்.
குறைந்த விலையில் உங்களுடைய
சகல அச்சக வேலைகளையும் செய்து
பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்...
357, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
கரடிப் போக்குச் சந்தி, ஏ-9 வீதி,
கிளிநொச்சி.
நவீன சந்தை, முதலாம் மாடி, சாவகச்சேரி.
021 222 7432
021 492 7454 / 021 492 7471 / 021 492 7472
esprintersjaffna@gmail.com
www.esprinters.com

## சேவைநலன் பாராட்டும் 60 ஆவது பிறந்தநாள் வாழ்த்தும்



யா/கொடிகாமம் திருநாவுக்கரசு
மத்திய கல்லூரியில்
நல் ஆசானாய் அரும்பணியாற்றி
60 ஆவது அகவையில்
ஓய்வுபெறும்
**திருமதி விமலா இரவீந்திரன்**
அவர்களின் கல்விச் சேவையைப்
பாராட்டி மேன்மேலும்
சிறப்புற்று இவ்
வையத்துள் வாழ்வாங்கு
வாழ்கவென சிரம்
தாழ்த்தி கரம் கூப்பி
வாழ்க! வாழ்கவென
வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:-
**2011/ O/L (11B)**
**மாணவர்கள்**

## SUPER BALL

சீட்டிழுப்பு வாரம் ▶ **871**
சீட்டிழுப்பு திகதி ▶ **2018.10.20** சனிக்கிழமை

**B 15 38 59 67**

அடுத்த சுப்பர் ஜக்பொட்
**ரூ. 55,836,840/-**

தொ.பே: 011 4062002 / 011 4062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்

2018.10.22ம் திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியின் ஆசிரியை
**திருமதி திலகவதி சிவானந்தம்**
அவர்களின் பாசமிகு தந்தையார்
**மூத்ததம்பி துரைராசா**
அவர்களின் பிரிவினால்
துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவிப்பதுடன் ஆத்மா சாந்தியடையவும்
பிரார்த்திக்கின்றோம்.

**வட்டமேசை**
**யா/ சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி**

## புதிய Car, Van வாடகைக்கு உண்டு

திருமண, சுற்றுலா தேவைகளுக்கேற்ற புதிய ரக Car, Van கள், Bus கள் உண்டு.

KDH Van - **3300.00** - **100Km 6 Hour**
Kybrid Car - **3200.00** - **100Km 6 Hour**

நாள் அடிப்படையிலும் பெற்றுக்கொள்ளலாம்.
**Jaffna** **077 888 7051**

## யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)
### பதவி வெற்றிடம்
### விண்ணப்பம் கோரல் - வெளிவாரி

### பதவி - விற்பனை உதவியாளர் 308/17

**01. சம்பள அளவுத்திட்டம் -**
(கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுவின் 13/2015 சுற்று நிருபத்துக் கமைய 308/17 ஆவது சம்பளக் குறியீட்டின்படி சம்பளத்திட்டம்.

12,800 - 14,900
100 x 10 - 110x 10

இதர படிகள் விசேட படிகளும் வழங்கப்படும்

**02) வயதெல்லை :-** 18 தொடக்கம் 45 வரை
(சங்கப்பணியாளர்களுக்கு வயதெல்லை பொருந்தாது)

**03) அங்கீகரிக்கப்பட்ட தகைமை -**
அ) கூட்டுறவு ஊழியர் கனிஷ்ட தரச் சான்றிதழ்
அல்லது
ஆ) 08 ஆம் வகுப்புச் சித்தியுடன் விற்பனை அலுவல்களுடன் தொடர்புடைய தாக மூன்று (03) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

**குறிப்பு :-** சங்க எல்லைப்பரப்புக்கு உட்பட்டவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**விண்ணப்ப முடிவு திகதி :- 2018.11.08**

**04) விண்ணப்பிக்கும் முறை:-**
மேற்படி பதவிக்கான விண்ணப்பப் படிவத்தினை சங்கத்தின் தலைமைக் காரியாலயத்தில் **ரூபா 10.00** இனைச் செலுத்திப் பெற்றுப் பூரணப்படுத்தப் பட்டு சான்றிதழ்களின் பிரதிகளும் இணைத்து கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் “ **விற்பனை உதவியாளர் குறி இல.308/17 பதவிக் கான விண்ணப்பம்**” எனக் குறிப்பிட்டு “ **தலைவர், யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து). இல.127, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்**” என்னும் முகவரிக்கு 2018.11.08 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாகப் பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

**திரு.என்.எஸ்.சத்தியதாசன்,**
**தலைவர்,**
**யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து).** 2018.10.22

(C8118)(11.17)

## கடை வாடகைக்குண்டு

பண்டத்தரிப்பு ரவுனில் 50 வருடமாக இயங்கிக் கொண்டிருக்கும் சில்லறைக் கடை தற்போதும் இயங்கிக் கொண்டிருக்கின்றது. அதே வியாபாரம் செய்பவர்களுக்கு வாடகைக்கு விடப்படும்.
**077 665 2003, 077 899 9994** து.சிங்கராசா

## தேவை

யாழ். நகரில் உள்ள சிறிய வைத்திய குடும்பம் ஒன்றிற்கு வீட்டில் தங்கியிருந்து பணிபுரியக் கூடிய பணிப்பெண் தேவை. - **075 039 9441**

## காணி விற்பனைக்கு

சீனியர் ஒழுங்கை, கலட்டியில் ஒரு பரப்புக் காணி உடன் விற்பனைக்கு உண்டு. தரகர் தேவையில்லை.
**தொடர்பு - 071154 4609**

## மணமகள் தேவை


யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட IT முதுமாணி, Consultant in A Leading New York Based Co இல் தொழில்புரியும் மணமகனுக்கு, வயது - 30-33, உயரம் -5'5" -5'8", மெல்லியவர், நிறம் முக்கியமல்ல, பல்கலைப் பட்டம் பெற்ற மணமகள் தேவை.
**754 252 0213 (அமெரிக்கா)**

## உதயன்

### விளம்பர தொடர்புகளுக்கு

**0214931111**
**advt@uthayan.com**

## மரண அறிவித்தல்



# சோமசுந்தரம் நல்லம்மா

(சண்டிலிப்பாய்)

சங்கானையைப் பிறப்பிடமாகவும் ஐயனார்கோயிலடி, சண்டிலிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் நல்லம்மா நேற்று (21.10.2018) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்து விட்டடார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபை - தங்கம்மா தம்பதியரின் அன்பு புதல்வியும், காலஞ்சென்ற மருதகுட்டி சோமசுந்தரத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சுந்தரேஸ்வரன் மற்றும் மீனலேஸ்வரி (கனடா), சிவனேசசுந்தரம், சர்வேஸ்வரன், காலஞ்சென்ற நாகேஸ்வரி மற்றும் பரமேஸ்வரன், லோகேஸ்வரன் (கனடா), ஜெயபாலசுந்தரம் (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயும், செல்வநாயகி, ஜெயபாலசிங்கம், அருட்செல்வி, ராஜசௌந்தரி, காலஞ்சென்ற பஞ்சலிங்கம் மற்றும் விஜயகுமாரி, அனுரா, பானுமதி ஆகியோரின் பாசமிகு மாமியும், சுதர்ஜன் (செயலாளர், பிரதேசசபை நல்லூர்), தினேஷ், சுமணன், சுஜிதினி, சிந்துஜா, சர்மிலன், சிவசெந்தூரி, பிரியவ்ருண், துவாரகன், தஷ்யா, தினுஷா, கபில், பஜித், அபிலாஷ், அனோஜன், அபினயா, ஆதித்யா, தானவி, தருண் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், ரிஷி, ரியா ஆகியோரின் பூட்டியும், காலஞ்சென்ற இரத்தினம் (பேபி) மற்றும் இராசம்மா, இராசையா, தட்சணாமூர்த்தி ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்றவர்களான நடராசா, சண்முகநாதன் மற்றும் மகேஸ்வரி, ரஞ்சிதம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.10.2018) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சங்கானை கரைச்சி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**ஐயனார் கோயிலடி,**
**சண்டிலிப்பாய்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**077 327 7746, 077 066 3424, 076 756 3383**

## மரண அறிவித்தல்

# கந்தசாமி நிமலன்

(கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் வ.மா)



புளியங்கூடலைப் பிறப்பிட மாகவும், இல. 29, ஆசிர்வாதப்பர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணத்தினை வசிப் பிடமாகவும் கொண்ட கந்தசாமி நிமலன் (கூட்டுறவு அபிவிருத்தி உத்தி யோகத்தர் வ.மா) (19.10.2018) வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னார் புளியங்கூடல் கந்த சாமி செல்வநாயகி (ஓய்வு பெற்ற அதிபர்கள்) தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும் கல்முனை பாலரெட் ணம் மங்கையற்கரசி தம்பதியரின் அன்பு மருமகனும் கவிதாவின் (மகளிர் விவகார அமைச்சு வ.மா) அன்புக் கணவரும் கிருத்திகன் (யாழ். இந்துக்கல்லூரி), ஜக்சியா (புனித யோன் பொஸ்கோ), நிவா சன் ஆகியோரின் அன்புத்தந்தையும் கலைச்செல்வி (ஆசிரிய ஆலோசகர் வலயக் கல்விஅலுவலகம் கிளிநொச்சி), நிரஞ்சன் (கனடா) ஆகியோரின் அன்புச்சகோதரரும் சங்கர் (சங்கர் ஸ்ரூடியோ - கிளிநொச்சி), புவனராஜன், அருள்ராஜன் (A.T.அச்சகம் திருக்கோயில்) கோகிலராஜன் (RDO, கல்முனை), குமுதினி (CDO,கல்முனை), பகீரதன் (தபாலதிபர் அம்பாறை), ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்றவர்களான வடி வேலு, சொர்ணகாந்தி, ரகுபதி (ஓய்வு பெற்ற பிரதிக்கல்விப் பணிப்பாளர், வவுனியா வடக்கு), கமலாதேவி காலஞ்சென்றவர்களான தவராசா, தர்மராசா, தயாபரன் ஆகியோ ரின் அப்புப் பெறாமகனும் காலஞ்சென்ற தர்ம ராசா (கனடா) மற்றும் சண்முகராசா (கனடா), இராஜேஸ்வரி (கனடா), நிர்மலா (கனடா), காலஞ்சென்ற நாகராசா லோகேஸ் வரி (நர்மதா நகையகம்) ஆகியோரின் அன்பு மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.10.2018) செவ்வாய்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப. 10.00 மணியளவில் செம் மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ள வும்

**021 222 6763,**
**077 376 1793**

(cs.20748)

**தகவல் :**
**குடும்பத்தினர்.**

## நாடு...

தயார். ஆனால் அதற்கான நிபந்தனை ஆட்சி அதிகாரங்கள் பிரிக்கப்பட வேண்டும். இதையே தெற்கில் சிங்களப் பகுதிகளில் சொல்லியிருக்கின்றேன். இவ்வாறு தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன்.

வடமராட்சியில் நேற்று நடைபெற்ற நிகழ்வான்றில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தெரிவித்ததாவது:

நாடு தான் பிரிக்கப்பட முடியாது. ஆட்சி அதிகாரங்கள் பிரிக்கப்பட வேண்டும். அதை நாங்கள் தெளிவாகச் சொல்லியிருக்கின்றோம்.

ஆட்சி முறையைக் குறிக்கும் யுனிற்றரிஸ்ரேட் மற்றும் ஒன்றையாட்சி என்பன தவிர்க்கப்பட்டு, நாட்டின் ஒருமித்த சுபாவத்தைக் குறிக்கும் சொற்பதம் உபயோகிக்கப்பட்டுள்ளது.

ஏக்கிய ராஜ்ய அல்லது ஒருமித்த நாடு என்பது பிரிக்கப்படாததும், பிரிக்க முடியாததும், அரசமைப்புத் திருத்தங்களுக்கான அதிகாரம் நாடாளுமன்றத்திடமும், மக்களிடமும் விடப்பட்டிருக்கின்ற ஒரு நாடு என்ற வரைவிலக்கணத்தைக் கொண்டது - என்றார். (ற-26)

## மகிந்தவிடம்...

அந்த அளவுக்கு அவர்களின் பொருளாதார நிபுணத்துவம் காணப்படுகின்றது. இவ்வாறு சாடியுள்ளது மக்கள் விடுதலை முன்னணி.

கொழும்பில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அவர் தெரிவித்ததாவது:

இவர்களிடம்நாட்டைப் பொறுப்பளிப்பது என்பது நகைப்புக்குரியது. இடைக்கால அரசு, அரச தலைவர் வேட்பாளர், பொதுவேட்பாளர் எனத்தற்போது பல விடயங்கள் பேசப்படுகின்றன. ஆட்சியாளர்கள் அனைவரும் நாட்டு மக்களின்பிரச்சினைகளைப் புறம்தள்ளி ஒதுக்கிவிட்டுத் தத்தமது தனிப்பட்ட பிரச்சினைகளைத் தீர்ப்பதையே நோக்கமாகக் கொண்டு செயற்படுகின்றனர்.

அரசில் இருந்து விலகிய சுதந்திரக் கட்சியின் 16 நாடாளுமன்ற உறுப்பினர்களும் மைத்திரி, மகிந்தவையும் இணைந்து இடைக்கால அரசு ஒன்றை உருவாக்கி அதன்மூலம் எதையாவது பெற்றுக் கொள்ளலாம் என்று அவர்கள் எண்ணுகின்றனர் - என்றார். (ற)

## பதவிக்...

உறுப்பினர்கள் உள்ளிட்ட அனைவரது பதவிகளும் முடிவுக்கு வந்துவிடும்.

இந்த நிலையில், தமக்குத் தொடர்ந்தும் பொலிஸ் பாதுகாப்புத் தேவை என்று தெரிவித்து மூன்று உறுப்பினர்கள் விண்ணப்பித்துள்ளனர்.

மாகாண சபை உறுப்பினர்களில் பொலிஸ் பாதுகாப்பை தற்போது வைத்திருக்கும் உறுப்பினர் ஒருவர், முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா ஆகியோரே, தமது பதவிக் காலம் முடிந்த பின்னரும் பாதுகாப்புக்குப் பொலிஸார் தேவை என்று விண்ணப்பித்துள்ளனர். (5,105)

ராசி அதிர்ஷ்டம்

| திகதி | வெற்றி வாரம் | வர்ணம் |
|---|---|---|
| 21.10.2018 | 2386 | ஊதா |

கடகம்

வெற்றி இலக்கங்கள்: 12 31 33 51

செவ்வாய்க் கிழமை வெற்றிப் பொதி ரூ. 3, 156, 268/=

2018.10.23 ம் திகதி செவ்வாய்க் கிழமை நீல நிற டிக்கட்டுக்களாகும்

வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்

தொ.பே. 011 4824824 Web: www.dlb.lk

SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

கோடிபதி சனிதா KOTIPATHI SHANIDA

சீட்டிழுப்பு வாரம்: 357

வர்ணம் : பச்சை

சீட்டிழுப்பு திகதி: 2018.10.21

அடுத்த செவ்வாய்க்கிழமைக்கான ஜக்பொட் ரூ. 98,872,638/-

ஆங்கில எழுத்து மற்றும் இலக்கங்கள்: O 15 53 60 62

தொ.பே. 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

SMS: DLB<space>LOT<space>KS என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.

அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

அத கோடிபதி

சீட்டிழுப்பு வாரம்: 410

வர்ணம் : இளநீலம்

சீட்டிழுப்பு திகதி: 2018.10.21

இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 62,183,990/-

வெற்றி இலக்கங்கள்: 02 22 51 68

ஆங்கில எழுத்து: M

தொ.பே. 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

SMS: DLB<space>LOT<space>AK என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.

அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

MASSIVE VEHICLES AUCTION SALE

All Types Of Vehicles Including Two Wheel Tractors, Four Wheel Tractors, Harvesters, Motor Bikes, Lorries, Trucks, Three Wheelers In Excellent Condition

23rd of October

LOLC Vehicle Facility Centre

STATION ROAD, VAIRAVAPULIYANKULAM,

VAVUNIYA

Thimothi - 0766 58 23 29

Nelum - 0245 11 81 81

On View - 20th, 21st & 22nd October

(Please refer the Udayan On 19th of October 2018 For the Full List Of Vehicles)

LOLC FINANCE

SCHOKMAN & SAMERAWICKREME

One Country. One Auctioneer.

Head Office & Showroom
24, Torrington Road, Kandy.
Tel: 081 2227593,
Fax: 081 2224371
Email: schokmankandy@sltnet.lk

City Office & Showroom:
No.6A, Fairfield Gardens, Colombo 8.
Tel: 011 2502680, 2586408,
Tel / Fax: 011 2588176
Email: schokman@samera1892.com

Web: www.sandslanka.com

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

Best Wishes



வவுனியா / தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தில் 2018 இல் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த எமது அன்பு மருமகன்

**வாசுதேவசர்மா ஹரிஸ்**

அவர்கள் 167 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தமைக்காக பாராட்டி வாழ்த்துகின்றோம்.

மேலும் பல வெற்றிகளைப் பெற்று முன்னேற காரைக்கால் சிவனை பிரார்த்திக்கின்றோம்.

வாழ்த்துவோர்:- மாமா, அத்தை, சாயி, கஜவதனி, டாடிகா

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் **பொன்னையா சதாசிவம்**

மண் மகிழ 16.07.1934

கண் நெகிழ 01.11.2017

அன்பின் திருவுருவே!
குடும்பத்தின் ஒளிவிளக்காய் மிளிர்ந்தவரே
அறிவூட்டி சீராட்டி எம்மை வளர்த்தவரே
அளவில்லா செல்வங்கள் அளித்தவரே
வாழ்வில் வாழ்வாங்கு வாழ வழிவகுத்தவரே
பாசத்திருவுருவமாய் எம் நெஞ்சமதில் வாழ்ந்து
எட்டமுடியாத தொலைவு சென்று ஓராண்டு கடந்தாலும்
உங்கள் நினைவலைகள் என்றென்றும் எம்மைவிட்டு நீங்காது.
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
என்றென்றும் உங்கள் பிரிவால் துயருறும்...

15/39, மாரியம்மன் வீதி, திருநெல்வேலி.

மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

## உயிர் தந்த உத்தம அன்னையின் ஓராண்டு நினைவலைகள்

தோற்றம் 01 . 07 . 1936

மறைவு 02 . 11 . 2017

திருமதி **தனலெட்சுமி கோவிந்தபிள்ளை**



ஓராண்டு சென்றதோ அம்மா உள்ளமெலாம்
நிறைந்திருக்கும் உம் நினைவுகள் பாரெல்லாம் போற்றிடவே பண்போடு
பெற்றெடுத்தாய் எம்மை சீராண்டு சிறப்புடன் சிறக்க வைத்த
சேயிழையாளே தெய்வமே நூறாண்டு கடந்தாலும் நும் நினைவு
மாறுமோ எம் மனதில் பேர் சொல்லப்பிள்ளைகள் எம்மை
பெற்றெடுத்தும் பெருமை கொண்டாய் பார்வாழ்ந்த காலம் போது மெனக்கருதி
நயினை அம்பாள் பாதத்தினை நாடினிளையோ விரும்பி
காலமெல்லாம் எம்மைக்கண்ணின் இமை போலக் காத்து வளர்த்து ஆளாக்கிய
எம் இதய தெய்வமாம் அன்னைக்கு நெஞ்சுருகி நித்தமும் அஞ்சலிப்போம் :
ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!!!

என்றும் நினைவில் : குடும்பத்தினர்.

பிரம்படி லேன், கொக்குவில்.

## ஓராண்டு நினைவுகளுடன்



அமரர் **கந்தையா கயிலாயபிள்ளை**

திதி: திரயோதசி (22.10.2018)

மண்ணில் 14.02.1933

விண்ணில் 03.10.2017

ஆண்டு ஒன்று நீண்டு கடந்தாலும்
ஆறவில்லை அருகிருந்த உங்கள் நினைவுகள்
வருடங்கள் ஒன்றானாலும் மீளவில்லை அப்பா
வதைக்கிறது உங்கள் நினைவுகள் வந்து
வழி காட்டியான அன்புத் தெய்வமே!
விழிகள் கசிகின்றன விதியை எண்ணி!
பேரக் குழந்தைகள் உங்களைத் தேட
பேசிட எமக்கு வார்த்தைகள் இல்லை

தங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

உங்கள் நினைவுகளுடன்
மனைவி, பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்.

# பிரபஞ்சத்தின் விரிவு

தமிழிசை



எந்த ஒரு வெடிப்பு நிகழ்ந்தாலும் வெடித்துச் சிதறும் பொருள்கள் வேகமாக நான்கு திசைகளிலும் பரவலாகச் சென்று விழுவதைக் கண்டுள்ளோம். அவ்வாறு விழுவதற்குக் காரணம் பூமியின் ஈர்ப்புவிசை. ஈர்ப்புவிசை இல்லாத வெளியில் இந்த வெடிப்பு நிகழும் சந்தர்ப்பத்திலே வெடித்துச் சிதறும் பொருள்கள் வெடிப்பின் வேகத்தில் தொடர்ந்து சென்றுகொண்டே இருக்கும்; கீழே விழாது. உண்மையில் வேறு ஏதாவது ஒரு சக்தி அவற்றைத் தடுத்து நிறுத்தாவிட்டால் வேகமாய்ச் செல்லும் பொருள் அதன் வேகத்திலேயே தொடர்ந்தும் பயணிக்கும். உதாரணமாக வான்வெளியில் நாம் ஒரு கிரிக்கெட் பந்தை துடுப்புமட்டை கொண்டு அடிக்கும் சந்தர்ப்பத்தில், அந்தப் பந்து நிற்காது சென்று கொண்டே இருக்கும். கீழே விழாது. வேறு யாரும் அடித்த பந்தும் கூட நாம் அடித்த பந்தின் அருகில் வந்தால் இரண்டுமே ஒன்றை ஒன்று இழுத்துக்கொள்ளும். ஒன்றாக இணைவுகொண்டு பயணிக்கும். ஏனெனில் பிரபஞ்சத்தில் இருக்கும் எல்லாப் பொருள்களுக்கும் அவற்றின் நிறைக்கேற்ற ஈர்ப்புவிசை இருக்கிறது.

**வெடிப்பு**

சூரியன் உருவாகியவுடன் ஏற்பட்ட அதி பயங்கர வெடிப்புடன் உண்டான புகையும், தூசும் இப்படித்தான் தூக்கி எறியப்பட்டன. சூரியனைச் சுற்றிவர அவை ஈர்ப்பு விசையால் இணைந்து கொண்டன. நாம் வசிக்கும் இந்தப் பூமியும் ஏனைய கோள்களும் உருவாகின.

மா வெடிப்புக்குப் பின்பு விரிவடைந்த பிரபஞ்சம் அதன் வெடிப்பு வேகம் குறையும்போது பிரபஞ்சத்தில் இருக்கும் நட்சத்திரங்கள், பால்வெளி மண்டலம் போல உள்ள எண்ணற்ற மண்டலங்களின் ஈர்ப்பு விசையால் மீண்டும் ஒன்றையொன்று இழுத்துக்கொண்டு சுருக்கமடை யும். ஆரம்ப நிலைக்கே அவை வந்துவிடும் என்று விஞ்ஞானிகள் எதிர்வு கூறினர். அதை 'மா சுருக்கம்' என்று அழைத்தனர். மாவெடிப்பு ஏற்பட்டு ஆயிரத்து 300 கோடி ஆண்டுகள் கடந்துவிட்டதால், விரிவாக்க வேகம் குறைந்து ஈர்ப்பு விசையின் காரணம் கொண்டு இந்தச் சுருக்கம் ஆரம்பித்திருக்கும் என்று விஞ்ஞானிகள் கருதினர்.

**விசையின் பலம்**

ஆனால் அதிநவீன தொலைநோக்கியில் பிரபஞ்சத்தின் விரிவு வேகம் குறைய வில்லை என்பதை அறிந்தனர். பிரபஞ்சம் வேகமாய் விரிவடைவதை கண்டறிந்தபோது விஞ்ஞானிகள் ஆச்சரியத்தின் எல்லைக்கே சென்றனர். இந்த வேகத்தில் விலகிச் சென்றுகொண்டிருந்தால் ஈர்ப்பு விசை வலுவிழந்துவிடும். அதன் விளைவு மிகவும் வித்தியாசமாக இருக்கும். அதாவது எம்மைச் சுற்றி உள்ள பொருள்கள் அனைத்துமே பூமியிலிருந்து மேலே எழுந்து முதலில் மிதக்க ஆரம்பிக்கும். எல்லாப் பொருள்களும் அணுவாகப் பிரிந்து வெளியில் விலகிச் சென்றுவிடும். மனிதர்களும், விலங்குகளும் இதற்கு விதிவிலக்கல்ல.

ஏனெனில் ஈர்ப்புவிசை தான் இவை அனைத்தையும் இழுத்து இணைத்து வைத்திருக்கிறது. முன்னர் கூறியது போன்று சூரியக் குடும்பத்தில் உள்ள எல்லாக் கிரகங்களும் சூரியனை விட்டுப் பிரிந்து சென்றுவிடும். விரிவாக்க வேகம் தொடர்ந்து நடந்துகொண்டே இருந்தால் பிரபஞ்சம் அழியும் என்ற கோட்பாட்டை பல விஞ்ஞானிகள் கூறுகிறார்கள்.

ஆனாலும் கனடா நாட்டில் இயற்பியல் துறையில் ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள 'பரம்சிங்' என்ற இந்திய விஞ்ஞானி, இந்த விரிவாக்கம் தொடர்ந்து நடக்காது எனவும் பிரபஞ்சம் ஈர்ப்புவிசையால் மீண்டும் சுருங்கும் எனவும் தெரிவித்துள்ளார். அவர் ஒரு புதிய கணக்கை வெற்றிகரமாக வடிவமைத்துள்ளார். அந்தக் கணக்குக் கூறுவது யாதெனில், "ஈர்ப்பு விசையினால் சுருங்கும் பிரபஞ்சம் மிக மிகச் சிறியதாகச் சுருங்கிவிட்டால் ஈர்ப்புவிசை எதிர்விளைவுகளை ஏற்படுத்தி பிரபஞ்சத்தை விரிவாக்கும்" என்ற விடயமே அது. அதற்கு 'மா வெடிப்பு' என்று பெயர் கொடுக்கிறார். நாம் வாழும் இந்த பிரபஞ்சம் அப்படிதான் உருவாயிருக்கிறது என்று தெளிவுபடக் கூறுகிறார்.

**மீண்டும் நிகழ்தல்**

விரிவடைதலும் சுருங்குவதும் என்ற திரும்பத் திரும்ப நடைபெறும் நிகழ்ச்சி யால்தான் நாம் இப்போது வாழும் இந்தப் பிரபஞ்சம் இந்த நிலையில் இருக்கிறது. ஆயிரத்து 300 கோடி ஆண்டுகளுக்கு முன் நடந்ததாகக் கூறப்படும் மாவெடிப்பின் மூலமாக பிரபஞ்சம் முதன் முதலாகத் தோன்றவில்லை. முன்னரே இருந்த பிரபஞ்சம் சுருங்கி விரிவடைந்ததால் தான் அது பௌதீக விதிகளுக்குக் கட்டுப்பட்டு நடக்கிறது என்றும் அவர் கூறுகிறார். ஒன்றுமே இல்லாத நிலையிலிருந்து பிரபஞ்சம் உருவாகவில்லை என்றும் அவர் மேலும் உறுதிபடக் கூறுகிறார். மிகச் சிறி தாகச் சுருங்கிய பிரபஞ்சத்தை "ஒன்றுமில்லாத நிலை" என்று கூறமுடியாது என்றும் அவர் வாதிடுகிறார்.

ஆனாலும் எப்பொழுது பிரபஞ்சம் முதன்முதலில் தோன்றியது என்ற கேள்விதான் ஆராயப்பட வேண்டியது என்கிறார். அவரது கோட்பாடும் பலரது பாராட்டைப் பெற்றிருக்கிறது. முன்னர் ஒரு பிரபஞ்சத்தின் பல கருந்துளைகள் மூலமாக புதியதான பல பிரபஞ்சங்கள் தோன்றியிருக்கிறது என்று சில விஞ்ஞானிகள் கூறும் கோட்பாட்டைப் பற்றியும் சிந்தித்தல் நன்று.

**பெருக்கம்**

பிரபஞ்சம் கருந்துளைகள் மூலமாக பல புதிய பிரபஞ்சங்களை உண்டாக்குவது போலவும், ஒரு மரம் முளைத்து அது பல விதைகளை உண்டுபண்ணி பெருகுதலை ஒத்தும், விரிவடைந்து சுருங்கும் பிரபஞ்சம் ஒரு வாழை மரம் வளர்ந்து பெரிதாகி பின்னர் அழிந்து மீண்டும் பூமியின் அடியில் உள்ள கிழங்கிலிருந்து முளைப்பது போலவும் அமைந்துள்ளது. பூமியில் உயிரினங்கள் எப்படி பெருகுகின்றனவோ அதேபோலவே பிரபஞ்சமும் பெருக்கமடைகிறது என்றும் சில விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.

பிரபஞ்சத்தின் தோற்றம், வளர்ச்சி, அழிவு பற்றி ஆராய்ந்து வரும் விஞ்ஞானிகள் பல தடைக் கற்களைக் கடந்து அனைத்து உண்மைகளையும் மனித குலத்துக்கு வெற்றிகரமாக வழங்க வேண்டும்.

கரன்
Karan
Watch & Radio Electronics
வோச் அன் றேடியோ மற்றும் எலக்ரோனிக்ஸ்
ஸ்தாபனத்தாரின் மிகப் பிரமாண்டமான காட்சியறை
யாழ். நகரில் திறப்புவிழா
YK PLAZA
எலக்ரோனிக்ஸ் மற்றும் தளபாட காட்சியறை

இல. 39, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்
இன்று (22.10.2018) திங்கட்கிழமை, நேரம் : பி.ப. 12.15 - பி.ப. 1.30
திறப்பு விழாவினை முன்னிட்டு கொள்வனவு செய்யும் அனைத்து பொருள்களுக்கும் 5% 50% தள்ளுபடி
இச் சலுகை தீபாவளி பண்டிகை வரை மட்டுமே! முந்துங்கள்!
021 222 3530 / 070 304 3636 ykplazajaffna@gmail.com



# சரும வறட்சியை போக்கும் ஆவாரம் பூ

- வறண்ட சருமம் என்பது பல்வேறு நோய்களின் வெளிப்பாடு. தைராய்டு, சர்க்கரை நோய் உள்ளவர்களுக்கு வறண்ட சருமம் ஏற்படும். இந்தப் பிரச்சினையைப் போக்க அதிகளவில் பழங்கள் எடுத்துகொள்ளவேண்டும். ஆவாரம்பூவைப்பயன்படுத்திவறண்ட சருமத்தைப் போக்கும் மருந்து தயாரிக்கலாம்.

- ஆவாரம்பூ, பனங்கற்கண்டு, விளாமிச்சைஆகியவற்றைக்கொதிக்க வைக்க வேண்டும். இதை வடிகட்டி காலையில் வெறும் வயிற்றில் குடித்துவர வறண்ட சருமம் மாறும். தோல் மென்மையாகவும், பொலிவுடனும் இருக்கும். ஆவாரம் பூ பல்வேறு நன்மைகளைக் கொண்டது. வறண்ட சருமத்துக்கு மருந்தாக விளங்குகிறது.

- அருகம் புல்லை பயன்படுத்தி மருந்து தயாரிக்கலாம். அருகம்புல், கீழாநெல்லி, தயிர். 100 மில்லி அருகம்புல் சாறுடன், பெரிய நெல்லிக்காய் அளவுக்கு கீழாநெல்லி இலை பசை சேர்க்கவும். இதனுடன் ஒரு கரண்டி தயிர் சேர்த்து கலந்து சாப்பிட்டுவந்தால் வறண்டசருமம்மாறும். தோல்பொலிவுபெறும். உடலுக்குப்போதிய சத்துக்கள் கிடைக்கும். தோல் மென்மையாகும்.

- வறண்ட சருமத்துக்குக் கீழாநெல்லி மருந்தாகிறது. பல்வேறு நன்மைகளைக் கொண்ட கீழாநெல்லி ஈரலைப் பலப்படுத்தும் தன்மை கொண்டது. உடலுக்குக் குளிர்ச்சி தரக்கூடியது. மருத்துவ குணங்களை உடைய அருகம்புல் நோய் எதிர்ப்பு சக்தி உடையது. பூஞ்சைகாளான்கள், நுண்கிருமிகளைபோக்ககூடியது. ரத்தத்தை சுத்திகரிக்ககூடியது. வயது முதிர்வைதடுக்கும்தன்மைஉடையது. அருகம்புல் புரதச்சத்து கொண்டது.

- ஆவாரம் மொட்டு. இலை ஆகியவற்றை வெயிலில் காயவைத்துப் பொடி செய்து கொள்ளவும். இந்த பொடியுடன் பால் சேர்த்து கலந்து வறண்ட சருமத்தில் பூசி சுமார் 15 நிமிடங்கள் கழித்து கழுவினால் வறண்ட சருமம் சரியாகும். தினமும் இவ்வாறு செய்வதால் தோல் எண்ணெய் பசை வர ஆரம்பிக்கும். தோல் மென்மையாகும்.

- ஆவாரம்பொடி, கஸ்தூரிமஞ்சள், கசகசா ஆகியவற்றைநீரில்சேர்த்து கலந்து மேல் பூச்சாக பூசி சிறிது நேரம் கழித்து குளித்தால், வறண்ட சருமம் மாறும். தோல் பளபளப்பாகும். தோல் ஆரோக்கியத்தை அடையும். எளிதில் கிடைக்கக் கூடிய அருகம்புல், கீழாநெல்லி, ஆவாரம்பூ போன்றவற்றைப்பயன்படுத்தி இல்லத்தில்இருந்தவாறே வறண்ட சருமப் பிரச்சினைகளுக்கு எளிதில் தீர்வு காணலாம்.

## தலைவலியை தீர்க்கும் சின்மய முத்திரை



மனஅழுத்தம், வேலைப்பளுவால்ஏற்படும்மனஉளைச்சல், மனக்குழப்பம் ஆகியவற்றால் உண்டாகும் தலைவலிக்கு இந்த முத்திரை சிறந்த பலனளிக்கும்.

**செய்முறை :**
விரிப்பில் அமர்ந்து கொண்டு சுண்டுவிரல், மோதிர விரல், நடுவிரல் ஆகியவற்றை மடக்கி உள்ளங்கையில் பதியும்படி வைக்கவும். ஆட்காட்டி விரல் மற்றும் கட்டை விரலின் நுனிகள் தொட்டிருக்க வேண்டும். இரண்டு கைகளிலும் இந்த முத்திரையைப் பிடிப்பது அவசியம்.


**பலன்கள்:**
இந்த முத்திரையைத் தலைவலி தீரும் வரை செய்யலாம். மனஅழுத்தம், வேலைப்பளுவால்ஏற்படும்மனஉளைச்சல், மனக்குழப்பம் ஆகியவற்றால் உண்டாகும் தலைவலிக்கு இந்த முத்திரை சிறந்த பயனளிக்கும்.



## இது புதுசு

பெண்களுக்கான புதிய வடிவிலான கைப்பைகள் சந்தைக்கு அறிமுகமாகி யுள்ளன. இவை 3 ஆயிரத்து 250 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றன.

## முகத்தில் உள்ள அழுக்கைப் போக்கும் இயற்கை வழிகள்




முகத்தில்உள்ளஅழுக்குகள்நீங்குவதில்லை என்று பலர் குறை கூறுவதுண்டு. இவ்வாறான பிரச்சினைகள் உள்ளவர்களுக்கு முகத்தில் உள்ள அழுக்குகளைப்போக்க இதோ இயற்கையான சில வழிகள்.

தக்காளியில் ப்ளீச்சிங் தன்மை உள்ளது. எனவே தக்காளியின் சாற்றினைமுகத்தில்தடவிமென்மையாக மசாஜ் செய்து, சிறிது நேரம் ஊற வைத்து, பின் குளிர்ந்தநீரில்முகத்தைக்கழுவ வேண்டும். இதனை தினமும் செய்துவந்தால், முகத்தில்சேரும் அழுக்குகள் உடனே நீங்கும்.

அதேபோன்று, தயிரை முகத்தில் தடவி 20 நிமிடம் ஊற வைத்து, பின் நீரினால்கழுவவேண்டும். இப்படிதினமும்செய்து வந்தால், 2 வாரத்தில் உங்கள் முகத்தில் சருமத்தின் நிறத்தை அதிகரிக்க உதவும்.

தக்காளியைப்போன்றேஎலுமிச்சையிலும் ப்ளீச்சிங் த்ன்மை உள்ளது. அந்தஎலுமிச்சையின் சாற்றினை படுக்கைக்குச் செல்லும் முன், நீருடன் கலந்து முகத்தில் தடவி 10 நிமிடம் கழித்து கழுவ வேண்டும். இப்படி வாரத்துக்கு 3 முறை செய்து வந்தால், சருமத்தின் நிறம் அதிகரிக்கும்.

முகத்தின் அழகுக்கு உருளைக் கிழங்கும் நல்ல மருத்துவம் தரும். உருளைக்கிழங்கை அரைத்து அதனை முகத்தில் தடவி 20 நிமிடம் ஊற வைத்து, பின் குளிர்ந்த நீரினால் முகத்தைக்கழுவவேண்டும். இதனை வாரம் ஒருமுறை செய்து வந்தால், நல்லபயனைப்பெறலாம்.



## முளைகட்டிய கோண்டைக்கடலை சூப்

**தேவையான பொருள்கள் :**
முளைகட்டிய கொண்டைக்கடலை - ஒரு கப்
வெண்ணெய் - ஒருகரண்டி
சீரகம் - ஒரு கரண்டி
சின்ன வெங்காயம் - 50 கிராம்
கறிவேப்பிலை - சிறிதளவு
கொத்தமல்லி - சிறிதளவு
மிளகுத்தூள், உப்பு - தேவையான அளவு

**செய்முறை :**
சின்ன வெங்காயம், கொத்தமல்லியைப் பொடியாக நறுக்கிக் கொள்ளவும்.
கொண்டைக்கடலையை நன்றாகக் கழுவி 4 மணி நேரம் ஊறவைத்து நன்றாக ஊறியதும் வேகவைத்து கொள்ளவும்.
வேக வைத்த கொண்டைக்கடலையில் சிறிதளவு தனியாக எடுத்து வைத்து கொள்ளவும்.
மீதமுள்ள கடலையை வேகவைத்த தண்ணீருடன் சேர்த்து அரைக்கவும்.
அடிகனமானபாத்திரத்தில்வெண்ணெய்விட்டு உருக்கியதும் சீரகம், கறிவேப்பிலை போட்டு தாளித்த பின்னர் வெங்காயத்தை போட்டு வதக்கவும்.
வெங்காயம் சற்று வதங்கியதும் அதனுடன் அரைத்த கொண்டைக்கடலை விழுது, உப்பு சேர்த்து ஒரு கொதி விட்டு இறக்கவும்.
மேலே மிளகுத்தூள், தனியாக எடுத்துவைத்த கொண்டைக்கடலை, கொத்தமல்லிசேர்த்துக்கலந்து பருகவும்.

## மரண அறிவித்தல்கள்



### திருமதி சாரதாதேவி (லலி) பேரின்பநாதன்

வேலணையைப் பிறப்பிடமாகவும், கோண்டாவிலை வசிப்பிட மாகவும் கொண்ட திருமதி சாரதாதேவி (லலி) பேரின்பநாதன் நேற்று (21.10.2018) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**077 3648 312,**
**077 719 1108**

தகவல் :
பே. பிரசாந் (மகன்)

---

திருமதி

### அகிலேஸ்வரி குலசிங்கம்



பிறப்பு 07.11.1937 — இறப்பு 21.10.2018

அல்வாய் வடக்கு, தோட்டத்தைப் பிறப்பிட மாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அகிலேஸ்வரிகுலசிங்கம் நேற்று (21.10.2018) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.


அன்னார் காலஞ் சென்றவர்களான கோவிந்தசாமி அன்னம் தம்பதியரின் அன்புமகளும் காலஞ் சென்ற க.குலசிங்கத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற தில்லைராஜாவின் அன்புத்தாயும் தங்கவேல்பிரபாவின் பெரிய தாயும் காலஞ்சென்றவர்களான தனபாலசிங்கம் பரமேஸ்வரி, கந்தசாமி அழகேஸ்வரி, சிவபாதபுண்ணியம் மற்றும் தர்ம குலசிங்கம் (சமரக்கொடி கனடா), காலஞ்சென்றவர்களான விஷ்ணுபாதமூர்த்தி (சிவகவி), தங்கவேலு இலட்சுமிதேவி, ஸ்ரீஸ்கந்தராசா திரௌபதி ஆகியோரின் அன்புச்சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.10.2018) திங்கட்கிழமை மு.ப. 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுப்பர்மடம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
**தோட்டம் அல்வாய் வடக்கு, அல்வாய். 077 421 5885**
**கோ. தர்மகுலசிங்கம் (சமரக்கொடி, கனடா)**

---



### இராசையா தயாபரசிங்கம் (பவா)

உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா தயாபரசிங்கம் கடந்த (20.10.2018) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசையா - சிவபாக்கியம் தம்பதிகளின் பாசமிகு புதல்வனும் துரைராசசேகரம் - மகேஸ்வரி தம்பதிகளின் மருமகனும் காலஞ்சென்ற கி.கிருஸ்னேஸ்வரியின் கணவரும் பிரவீணாவின் பாசமிகு தந்தையாரும் கவிராஸின் மாமனாரும் காலஞ்சென்ற சிவராஜசிங்கம், சிவபாலசிங்கம் மற்றும் குவேந்திரசிங்கம், செல்வராணி (கனடா), காலஞ்சென்ற ஜெயபாலசிங்கம் மற்றும் இராசகுலசிங்கம், நிரோஜினி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் சந்திரபவாணி, சந்திரவதனா, சந்திராதேவி, ஹரிச்சந்திரன் (கனடா), அருந்ததிதேவி, செல்வமலர், கிருஸ்ணராஜா (C.T.B) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று (22.10.2018) திங்கட்கிழமை பி.ப. 12.30 மணிக்கு வேம்பன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

---

# ஆற்றல் உடைய அசைவிகளாக தாவரங்கள்

அறிவியலார்கள் புலன்களின் அடிப்படையில் உயிரினங்களை வகைப்படுத்தியுள்ளதை நாம் குறித்து நோக்க வேண்டியிருக்கிறது. அறிவியல் கூறும் ஐம்புலன்;கள் மெய், வாய், மூக்கு, கண், காது என்பனவே. இவற்றின் இயங்குநிலைச் செயற்பாட்டின் அடிப்படையிலே தொடுகை உணர்வு கொண்ட தாவரங்களும் மரங்களும் ஓரறிவு உள்ள உயிரிகளாக வெகு காலங்கள் முன்பே வகைப்படுத்தப்பட்டுள்ளமை ஆச்சரியத்தையும்,வியப்பையும் தருகின்ற தகவல்களாக விளங்குகின்றன. தாவரங்கள் இசை கேட்கும் ஆற்றலை கொண்டுள்ளன. இதை ஏற்றுக்கொள்வோர் உள்ளனர். ஒரு சில அறிவியல் ஆய்வுகளும் இதை வலியுறுத்தியுள்ள போதும், இந்தக் கருத்தை அறிவியல் உலகம் இன்னமும் ஏற்றுக்கொள்ளவில்லை. இருந்தபோதிலும் அறிவியல் உலகம் என்பது தாவரங்களுக்கு தொடுகை உணர்வு உண்டு என்பதை ஏற்றுக் கொண்டுள்ளது. இதற்குரிய உதாரணமாக தொட்டாற் சிணுங்கி (மிமோசா புடிக்கா - ரச் மீ நொட் பிளாண்ட்) செடியையும், பூச்சிகளை உண்ணும் தாவரத்தையும் (டையோனியா மிசிப்பியுலா - வீனஸ் பிளைராப்) கூறலாம். இவை தவிர கடுகு இனக் குழுமத்தைச் சார்ந்த தாவரமான குதிரைப்புல்லில் அண்மையில் நிகழ்த்தப்பட்ட ஆய்வின் போது தாவரங்கள் மழை, காற்று போன்ற இயற்கையின் அசைவுச் செயற்பாடுகள் ஏற்படுத்தும் அதிர்வுகளை உணர்ந்து அதற்கேற்ப செயற்படுகின்றது என்ற தகவலும் கண்டறியப்பட்டுள்ளமை குறித்து நோக்கத் தக்கது.

---

## விண்ணவரோடு முதலாம் ஆண்டு



### திருமதி மேரி எட்மன்ரா விமலேஸ்வரன்
(சந்திரா)

'நீர் இன்று என்னோடு பேரின்ப வீட்டில் இருப்பீர் என உறுதியாக உமக்குச் சொல்கின்றேன்'

அன்னை மடியில் 07.04.1961 — ஆண்டவன் அடியில் 22.10.2017

ஆண்டு ஒன்று ஆனதோ அம்மா
உன் முகம் பார்த்து நாம் கதைத்த
கதைகள் எல்லாம் எம் கண்முன்னே
வந்து நின்று வொவ்வொரு நாளும் கதை கூறுதம்மா
நீ தந்த சந்தோஷ தருணங்களுக்கு
வேறு எந்த உவமையும் இணையாய் அமையாதம்மா

உன் ஆன்மா இறைவனோடு மகிழ்ந்திருக்க வேண்டுகின்றோம்.


இல.19, மருதடி வீதி, யாழ்ப்பாணம். (CS/20715)(11,17) **குடும்பத்தினர்.**

---

## மரண அறிவித்தல்

### நடராஜா தேவராஜன்

**(முன்னாள் பணிப்பாளர் நாயகம் கட்டடங்கள் திணைக்களம்)**



துன்னலையைப் பிறப்பிட மாகவும், புத்தூர், நல்லூரைப் வசிப்பிடமாகவும், கொண்ட நடராஜா தேவராஜன் நேற்று (21.10.2018) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராஜா மங்கையற்கரசி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும் காலஞ்சென்றவர்களான திருஞானசம்பந்தர் நல்லநாயகி தம்பதியரின் அன்பு மருமகனும் தங்கலட்சுமியின் (ஓய்வு பெற்ற ஆசிரியர், புத்தூர் சோமஸ்கந்தா, யாழ். இந்து மகளிர் கல்லூரி) அன்புக்கணவரும் Dr. கேசவனின் அன்புத்தந்தையும் நிஷாங்கியின் (உதவிப்பதிவாளர், யாழ். பல்கலைக் கழகம்) அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.10.2018) திங்கட்கிழமை நண்பகல் 12.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**595 /2, நாவலர் வீதி, நல்லூர்.**

தகவல் :
குடும்பத்தினர்.

## இலங்கை....

புதுடில்லியில் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுடன் நேற்றுமுன்தினம் நடத்திய பேச்சுக்களின் போதே, இந்தியத் தலைமை அமைச்சர் தமது அதிருப்தியையும் கவலையையும் வெளிப்படுத்தியுள்ளார் என்று புதுடில்லித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த வாரம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில், தன் மீதான கொலைச் சதியில் 'றோ' தொடர்புபட்டிருப்பதாக அரச தலைவர் மைத்திரி கூறியதாக வெளியான செய்தியால் அரசியல் வட்டாரங்களில் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது. அன்றைய அமைச்சரவைக் கூட்டத்தில், கொழும்புத்துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை அபிவிருத்தி செய்வதற்கு இந்தியாவுக்கு வழங்கவேண்டும் என்று தலைமை அமைச்சர் ரணில் வலியுறுத்திய போதும், அரச தலைவர் அதனை நிராகரித்திருந்தார்.

இந்திய இலங்கை இராஜதந்திர உறவுகளில் விரிசல் நிலை ஏற்பட்டிருப்பதாக அரசியல் அவதானிகள் கூறியிருந்தனர். இவ்வாறானதொரு நிலையிலேயே, தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க இந்தியாவுக்குப் பயணம் மேற்கொண்டிருந்தார். தலைமை அமைச்சர் மோடியையும் சந்தித்திருந்தார். இந்தச் சந்திப்பில், இலங்கையின் செயற்பாடுகள் தொடர்பில் மோடி அதிருப்தி வெளியிட்டுள்ளார்.

2017ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம், செய்து கொள்ளப்பட்ட பொருளாதார ஒத்துழைப்பு புரிந்துணர்வு உடன்பாட்டை நடைமுறைப்படுத்துவதில் இலங்கை காட்டி வரும் தாமதம் குறித்தே இந்தியத் தலைமை அமைச்சர் தீவிரமான, ஏமாற்றத்தை வெளியிட்டுள்ளார். இராஜதந்திர விவகாரங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரத்தில் பெரும் பகுதியை, இலங்கை விவகாரங்களுக்காக தாம் செலவழித்துள்ளதாகவும், இந்தியத் தலைமை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

எனினும் இந்திய அரசால் வழங்கப்பட்ட உதவி தொடர்பாக இலங்கை அரசின் செயற்பாடு தமக்கு அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

தன்னைக் குறித்தோ, இந்திய அரசு குறித்தோ, ஏதேனும், கரிசனைகள் அல்லது சந்தேகங்கள் இருந்தால் அதனை தயக்கமின்றி கலந்துரையாடுமாறும், ரணிலிடம் இந்தியத் தலைமை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இந்தச் சந்தர்ப்பத்தின் போது, இந்தியத் தலைமை அமைச்சர் மோடி மீதோ அவரது அரசின் மீதோ தாமோ அல்லது இலங்கையர்களோ, எந்தச் சந்தேகத்தையும் அல்லது பிரச்சினையையும் கொண்டிருக்கவில்லை என்று ரணில் பதிலளித்துள்ளார். ஏதேனும் தவறான புரிதலை ஏற்படுத்தியிருந்தால் அதற்காக இந்தியத் தலைமை அமைச்சரிடம் மன்னிப்பைக் கோருவதாகவும், ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளார்.

நேபாளத் தலைநகர் காத்மண்டுவில் அண்மையில் இருதரப்பு உறவுகளைப் பலப்படுத்துவது குறித்து அரச தலைவர் மைத்திரிபாலவுடன் பேசிய போது, 2017 புரிந்துணர்வு உடன்பாடு தொடர்பான எல்லா விவகாரங்கள் குறித்தும் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டதாகவும், இந்தியத் தலைமை அமைச்சர் இந்தச் சந்திப்பின் போது குறிப்பிட்டார்.

இதன் போது இந்தியாவின் ஆதரவுக்கு நன்றி தெரிவித்த ரணில், அபிவிருத்தித் திட்டங்களை மூல இலக்குடன் மீண்டும் முன்னகர்த்த தேவையான நடவடிக்கைகளைத் தாம் துரிதமாக எடுப்பதாக உறுதியளித்துள்ளார். (5.61)

## விக்கிக்கு...

சிறிசேன அழைப்பு விடுத்திருந்தார். இன்று நடைபெறும் இந்தக் கூட்டத்துக்கு வடக்கு மாகாண முதலமைச்சரும் அழைக்கப்பட்டுள்ளார்.

கடந்த ஆண்டு மூன்று மாகாண சபைகளின் ஆயுள் காலம் முடிவுக்கு வந்தது. இந்த ஆண்டு இரண்டு மாகாணசபைகளின் பதவிக் காலம் ஏற்கனவே நிறைவுக்கு வந்த நிலையில், வடக்கு மாகாண சபையின் ஆயுள் காலம் எதிர்வரும் 24ஆம் திகதி நள்ளிரவுடன் நிறைவுக்கு வருகின்றது.

இவ்வாறானதொரு நிலையில் மாகாண சபைகளில் எதிர்காலத்தில் முன்னெடுக்க வேண்டிய திட்டங்கள் மற்றும் நிதி நிலைமைகள் தொடர்பில் ஆராய்வதற்கு மாகாணங்களின் ஆளுநர்கள் மற்றும் தலைமைச் செயலர்களை இன்று திங்கட் கிழமை அரச தலைவர் செயலகத்துக்கு வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், மாகாணசபையின் ஆயுள் காலம் நாளை மறுதினம் புதன் கிழமை நள்ளிரவுடன் முடிவடையவுள்ளதால் அதிகாரிகள் உள்ளிட்ட பல தரப்பினருக்கும் அவர் விருந்தளித்து வருகின்றார். இன்று திங்கட் கிழமையும் அவரது பணிமனையில் விருந்து ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதால், மைத்திரியின் கூட்டத்தில் விக்னேஸ்வரன் பங்கேற்கமாட்டார் என்றே தெரியவருகின்றது. (5.105)

## இந்திய...

கிடைக்கவில்லை. அவர்களை நினைவுகூர்ந்து நேற்று நடத்தப்பட்ட நினைவேந்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தையடுத்து அமைதிப்படையாக இந்திய இராணுவம் தாயக மண்ணில் காலடி எடுத்து வைத்தது. அமைதிப் படையாக வந்த இந்திய இராணுவத்தினர், ஆக்கிரமிப்புப் படையாக மாறி ஈழத் தமிழர்களைக் கொன்று குவித்தனர். யாழ்ப்பாணம் போதான மருத்துவமனைக்குள் புகுந்தும் தங்கள் கொலைவெறியாட்டத்தை நிகழ்த்தியிருந்தனர். இந்திய இராணுவத்தினரின் ஈவுஇரக்கமற்ற இந்தக் கொடூரத் தாண்டவத்தால் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் 68 பேர் உயிரிழந்தனர். 3 மருத்துவர்கள், இரு தாதியர்கள், மேற்பார்வையாளர் உள்பட 21 மருத்துவச் சேவையாளர்களும், சிகிச்சை பெற வந்தவர்கள், பொது மக்கள் என்று 47பேரும் இந்திய இராணுவத்தினரால் துடிதுடிக்க சாகடிக்கப்பட்டனர். 1987ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 21ஆம் மற்றும் 22ஆம் திகதிகளில் நடந்த இந்தக் கொடுந்துயர் சம்பவத்தை நினைவு கூர்ந்து, நினைவேந்தல் நேற்றுக் கடைப்பிடிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் போதானா மருத்துவமனையில் நேற்றுக் காலை இடம்பெற்ற இந்த நிகழ்வில் மருத்துவமனைப் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித்ததாவது,

மருத்துவமனையில் கடமையில் இருந்த உத்தியோகத்தர்கள், நோயாளிகள் கொடூரமாகக் கொல்லப்பட்டனர். போர் நடக்கும் போது பொதுமக்கள், பெண்கள், சிறுவர்கள், மருத்துவமனைகள் மீது தாக்குதல்கள் நடத்தக் கூடாது என்பது பன்னாட்டு விதிமுறை. அப்படியிருந்தும் வடக்குப் பகுதியில் போர்க்காலத்தில் மருத்துவமனை வளாகத்தில் கொடூரத் தாக்குதல்கள் நடைபெற்றன. இவர்கள் கொல்லப்பட்ட விதம் மிகவும் கொடூரமானது. மருத்துவமனையின் ஒவ்வொரு அறைக்குள் சென்றும் கொடூரமாகச் சுட்டுக் கொன்றனர். இந்தச் சம்பவம் சில மணிநேரத்தில் மட்டும் நடக்கவில்லை. மாறாக இரண்டு நாள்கள் தொடர்ந்தது. கொடூரத் தாக்குதலில் கடமையில் இருந்தவர்களும் நோயாளிகளும் பரிதாபமாக உயிரிழந்தனர்.

போர் ஏற்படும் சந்தர்ப்பத்தில் அதில் ஈடுபடும் இரு தரப்பும் தமது உயிர்களைக் காக்க உக்கிரமாகப் போராடுவார்கள். அங்கு கொலை என்பது மலிவாக இருக்கும். அப்பாவிகள் பலரையும் கொலை செய்ய தயங்க மாட்டார்கள். இந்தக் கொடூர தாக்குதல் தொடர்பில் உரிய விசாரணை நடத்தப்பட்டு நீதி கிடைக்க வேண்டும் - என்றார். (5.8)

## 23ஆம்...

பிரதி விவசாய அமைச்சரின் யாழ்ப்பாண இல்லத்தில் நேற்று நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாண சபை முன்வைத்த திட்டங்களில் அம்மாச்சி உணவகம் என்ற திட்டமே உருப்படியான திட்டம் என்று பலராலும் கூறப்படுகின்றது. ஆனால் அந்தத் திட்டம் மாகாண அரசின் திட்டமல்ல. கொழும்பு விவசாய அமைச்சின் ஊடாக நாட்டின் பல பகுதிகளிலும் ஆரம்பிக்கப்பட்ட திட்டமாகும். அதற்கான நிதி கொழும்பு அரசின் ஊடாகவே வழங்கப்பட்டது. ஆனால் இங்குள்ளவர்கள் அம்மாச்சி உணவகம் என்று பெயர் வைத்து உரிமை கொண்டாடுகின்றனர்.

யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் ஆரம்பிக்கப்பட்ட உணவகத்துக்குப் பெயர்ப் பலகை வைக்க முற்பட்டபோது மாகாண சபையின் இடையூறால் பெயர் வைக்க முடியாது போனது. மாகாண சபையின் காலம் எதிர்வரும் 23ஆம் திகதி முடியவுள்ளதால் அதற்குப் பின்னர் நாம் கொழும்பு அரசால் முன்மொழியப்பட்ட கொல பொஜன என்ற பெயருக்கு ஏற்ற தமிழாக்கத்தை அல்லது வேறு பெயரைச் சூட்டவுள்ளோம்.

வடக்கில் இராணுவத்தினர் மேற்கொள்ளும் விவசாய உற்பத்திப் பொருள்கள் பொதுச் சந்தைகளில் விற்பனைக்குக் கொண்டு வரப்படுவதை ஆதாரத்துடன் தெரியப்படுத்தினால் அதைத் தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்கப்படும். இராணுவத்தினர் விவசாய உற்பத்திப் பொருள்களைக் கொண்டு வந்து சிவில் உடையில் இருந்தவாறு விற்பனை செய்கின்றனர் என்று கூறப்படுகின்றது. அதையும் ஏற்றுக்கொள்ள முடியாது.

வடக்கில் உற்பத்தி செய்யப்படும் மாம்பழங்களின் தரத்தை விருத்தி செய்வதற்கும், உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்கும் விவசாயிகளுக்கு உரிய சந்தை வாய்ப்புக்களை வழங்குவதற்கும் விவசாய அமைச்சு உரிய நடவடிக்கை எடுத்துள்ளது. விவசாயிகளிடம் இருந்து நியாய விலையில் மாம்பழங்கள் கொள்வனவு செய்யப்பட்டு இயற்கை முறையில் அவை பழுக்க வைக்கப்படும். இயற்கையாகப் பழுக்க வைக்கப்படும் மாம்பழங்கள் மீது ஸ்ரிக்கர் பொறிக்கப்படும்.

அதைக் கொண்டு மக்கள் தயக்கமின்றி சுகாதாரமான பழங்களைக் கொள்வனவு செய்ய முடியம். எதிர்வரும் காலங்களில் பப்பாசிப்பழம், வாழைப்பழம் போன்றவற்றுக்கும் இப்படியான திட்டம் அறிமுகப்படுத்தப்படும் - என்றார். (ற-8)

## அரசியல்...

தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை.சோ.சேனாதிராசா தெரிவித்தார் .

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மக்கள் சந்திப்பும், உதவிப் பொருள் வழங்கலும், யாழ்ப்பாணம் ஒஸ்மானியாக் கல்லூரியில் நேற்றுக் காலை நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மக்களுக்கு உரிமைதான் வேண்டும். அபிவிருத்தி தேவையில்லை என்று சாரப்பட முதலமைச்சர் விக்னேஸ்வரன் நிகழ்வொன்றில் அண்மையில் பேசியுள்ளார். அவர் நீதியரசராக இருந்து ஓய்வு பெற்றவர். அவர் வடக்கு மாகாண சபையை நடத்திய லட்சணத்தை மக்கள் நன்று அறிவார்கள். அவரது நடத்தையால்தான், நீதிமன்ற அவமதிப்பு வழக்கை எதிர்கொள்கின்றார்.

எங்கள் கட்சியில் போட்டியிட்டுதான் வடக்கு மாகாண முதலமைச்சராகத் தெரிவானவர் விக்னேஸ்வரன். இன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஒழித்துக் கட்டுவதில் வலு தீவிரமாக இருக்கின்றார். நாடாளுமன்றத் தேர்தல், உள்ளூராட்சித் தேர்தலில் எல்லாம் எங்களுக்கு எதிராகச் செயற்பட்டார். திசை மாறிப் பறப்பவராக இருந்து கொண்டு எங்களைத் தீவிரமாக விமர்சிக்கின்றார்.

அரசியலில் அவர் இப்போதுதான் அ,ஆ படிக்கின்றார். வரலாறு தெரியாத அவர் எம்மை சகட்டு மேனிக்கு விமர்சிக்கின்றார். அவர் முதலில் அரசியல் படிக்கவேண்டும். எமது இலட்சியத்தை எப்படித் தந்திரமாகப் பெற்றுக் கொள்வது என்பது தொடர்பில் அவர் படிக்கவேண்டும் என்றார்.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான அ.அஸ்மின், கே.சயந்தன், இ.ஜெயசேகரன் ஆகியோர் கலந்து கொண்டனர். (5.8)

## மூடிய...

ரணிலுடன் அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளும் இந்தச் சந்திப்புக்காக சென்றிருந்தனர். இரண்டு நாடுகளின் தலைமை அமைச்சர்களும், அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளுடன் இணைந்து இருதரப்புப் பேச்சுக்களை நடத்தினர்.

அதற்குப் பின்னர், இந்தியத் தலைமை அமைச்சர் மோடி, தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுடன் மூடிய அறைக்குள் தனியாக பேச்சு நடத்தினர்.

இதன்போது மிக முக்கிய விவகாரங்கள் குறித்துப் பேசப்பட்டிருக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எனினும் எந்த விவரங்களும் வெளியிடப்படவில்லை.

சந்திப்பின் பின்னர் இரண்டு நாடுகளின் தலைவர்களும், ஊடகவியலாளர்களுக்கு எந்தக் கருத்துக்களையும் வெளியிடவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (5)

## 2,600 போதை...

வன்னிப் பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் அபய விக்கிரமவின் கீழ், மூத்த பொலிஸ் அத்தியட்சகர்களான எம்.தென்னக்கோன், ஜகத் பொன்சேகா ஆகியோரின் வழிகாட்டலில் ஓமந்தைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சுரேஸ் சில்வா தலைமையில் உப பொலிஸ் பொறுப்பதிகாரி சன்னஸ்கல, சார்ஜன் மாரசிங்க, கொன்ஸ்டபிள்களான புவனேஸ்வரன், பிரசாத், ஜானக, குமார, நிசாந்தன், பிரசன்னா சாரதி விராச் ஆகியோரை உள்ளடக்கிய பொலிஸ் குழுவினர் நேற்று முன்தினம் மாலை ஓமந்தைப் பகுதியில் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து வந்த ஆடம்பர மகிழுந்தை மறித்துச் சோதனை செய்தனர். இதன்போது 2 ஆயிரத்து போதைக் குளிசைகள் மகிழுந்திலிருந்து மீட்கப்பட்டன. அவற்றை உடமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் சுன்னாகத்தைச் சேர்ந்த 34 மற்றும் 23 வயதுடைய இரண்டு இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். (5.110)

## அரசியல் பயணத்தில்...

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழக விளையாட்டுத் திடலில் அமைக்கப்பட்ட கூடைப்பந்தாட்டத் திடல் திறப்பு விழா நேற்று நடைபெற்றது. அதில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே வடக்கு முதலமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

வடமாகாண சபை உறுப்பினர் சிவாஜலிங்கத்தின் விடாப்பிடியான முயற்சியால் இந்தக் கூடைப்பந்தாட்டத் திடமல் அமைக்கப்பட்டுள்ளது என்று அறிகின்றேன். இந்த விடாப்பிடியான முயற்சிக்குப் பாராட்டுக்கள். நண்பர் சிவாஜிலிங்கத்திடம் எனக்குப் பிடித்ததே இந்த விடாப்பிடிதான். உடும்புப் பிடி அவரின் பிடி. என்னுடைய அரசியல் பயணத்தில் தம்பி சிவாஜிலிங்கம் என்னுடன் கைகோர்த்துப் பயணிப்பார் என்று எதிர்பார்க்கின்றேன் - என்றார். (ற-26)

## பலாலி...

சிவில் வானூர்த்திப் போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்திருந்த நிலையில், தலைமை அமைச்சரிடம் இந்திய உள்துறை அமைச்சர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங்குடன் தலைமை அமைச்சர் மற்றும் அமைச்சர்கள், அதிகாரி கள் சந்தித்துப் பேச்சு நடத்திய போது, பாதுகாப்பு விடயங்கள் குறித்து ஆராயப்பட்டது.

மேலும், பலாலி வானூர்தி நிலையத்தின் அபிவிருத்திக்கு உதவி வழங்க இணக்கம் தெரிவித்த ராஜ்நாத் சிங், தென்னிந்தியாவில் இருந்து பலாலி மற்றும் மட்டக்களப்புக்கும் கூட நேரடி வானூர்திச் சேவைகளை ஆரம்பிக்க இந்தியா உதவும் என்றும் கூறியுள்ளார். (5)

## வாளுடன்...

வண்டி என்பற்றை அடித்து நொருக்கித் தப்பிச் சென்றது. இந்தச் சம்பவம் நேற்று இரவு 7.45 மணியளவில் யாழ்ப்பாணம், உப்பு மடச் சந்தியில் நடந்துள்ளது.

2 மோட்டார் சைக்கிள்களில் வந்த 6 பேர் அடங்கிய குழு வாள்களுடன் கடைக்குள் புகுந்தது. அங்கிருந்த பொருள்களை அடித்து நொருக்கியது. கடைக்கு முன்பாகத் தரித்து நின்ற முச்சக்கர வண்டியையும் தாக்கிச் சேதப்படுத்தியது. அதன்பின்னர் அங்கிருந்து தப்பிச் சென்றது.

சம்பவம் தொடர்பில் பொலிஸாருக்குத் அறிவிக்கப்பட்டது. பொலிஸாரும், சிறப்பு அதிரடிப் படையினரும் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டனர்..

அண்மைக் காலமாக யாழ்ப்பாணத்தில் கடைகளுக்குள் வாள்களுடன் புகுந்து தாக்குதல் நடத்திச் செல்லும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. பொலிஸாரால் வீதிச் சோதனை நடவடிக்கைகளும், ரோந்து நடவடிக்கைகளும் அதிகரிக்கப்பட்டுள்ள போதும் இவ்வாறான சம்பவங்கள் தொடர்ந்தவண்ணமே உள்ளன. (ற-7.8)

## கட்டுப்பாட்டை...

தடம்புரம்புரண்டது என்று தெரிவிக்கப்பட்டது. அந்தச் சமயம் பேருந்தில் பயணிகள் இருக்கவில்லை. சாரதியும், நடத்துநர்களுமே காயங்களுக்குள்ளாகினர்.

விபத்துத் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

இந்தப் பகுதியில் ஆபத்தான வளைவு காணப்படுகின்றது. கடந்த வாரம் இந்தப் பகுதியில் முச்சக்கரவண்டி, கார் விபத்தில் இருவர் உயிரிழந்திருந்தனர். (ற-110.8)

## கிறாஸ்கொப்பர்ஸ் அரையிறுதிக்குள்

யாழ்ப்பாணம், ஒக். 22
யாழ்ப்பாணம் ஹொக்கிச் சங்கம் தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையில் நடத்திவரும் ஹொக்கித் தொடரில் கிறாஸ் கொப்பர்ஸ் அணி அரையிறுதிக்குத் தகுதி பெற்றது.
வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற காலிறுதியாட்டத்தில் தெல்லிப்பழை கிறாஸ் கொப்பர்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது.
4:2 என்ற கோல் கணக்கில் தெல்லிப்பழை கிறாஸ்கொப்பர்ஸ் விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றது. (ம23)




## ஜொலிஸ்ரார் அணி கிண்ணம் வென்றது

யாழ்ப்பாணம், ஒக். 22
கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக்கழகம் நடத்தும் கே.ஸி.ஸி.ஸி. வெற்றிக் கிண்ணத்துக்கான கூடைப்பந்தாட்டத் தொடரில் ஜொலிஸ்ரார் அணி கிண்ணம் வென்றது.
கொக்குவில் இந்துக் கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சென்ற லைட்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது.
53:50 என்ற புள்ளிகளின் அடிப்படையில் ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழக அணி சம்பியனானது. (ம-23-422)

## வென்றது யாழ்ப்பாணம் இந்து

யாழ்ப்பாணம், ஒக். 22
இலங்கை கூடைப்பந்தாட்டச் சம்மேளனம் நடத்தும் கூடைப்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணி வெற்றிபெற்றது.
கொழும்பு மகாநாமக் கல்லூரி அணியை எதிர்த்து யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணி மோதியது. 63:47 என்ற புள்ளிகளின் அடிப்படையில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணி வெற்றிபெற்றது. (ம-23)




## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஒக். 22
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மாணவர் முதல்வர் சபையினால் நடத்தப்படும் பொன் விபுலானந்தன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான கூடைப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சென். ஜோன்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து மானிப்பாய் ஏஞ்சல் பன்னாட்டுப் பாடசாலை அணி மோதவுள்ளது. மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து கொக்குவில் இந்துக் கல்லூரி அணி மோதவுள்ளது. (ம-23)

## பமிலியன்ஸ் அணி கிண்ணம் வென்றது

யாழ்ப்பாணம், ஒக். 22
கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக் கழகம் நடத்தும் கே.ஸி.ஸி.ஸி. வெற்றிக் கிண்ணத்துக்கான கூடைப்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற பெண்கள் பிரிவு இறுதியாட்டத்தில் பமிலியன்ஸ் விளையாட்டுக் கழக அணி சம்பியனானது.
கொக்குவில் இந்துக் கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெற்ற பெண்களுக்கான இறுதியாட்டத்தில் கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக் கழக அணியை எதிர்த்துபமிலியன்ஸ்விளையாட்டுக்கழக அணி மோதியது. 52:50 என்ற புள்ளிகளின் அடிப்படையில் பமிலியன்ஸ் விளையாட்டுக் கழக அணி கிண்ணம் வென்றது. (ம-23-422)

## கொக்குவில் இந்து மாணவனுக்கு தேசிய ரீதியில் இரு பதக்கங்கள்



யாழ்ப்பாணம், ஒக். 22
சேர் ஜோன்காபற் இளையோருக்கான தடகளத் தொடரில் கொக்குவில் இந்துக் கல்லூரியை பிரதிநிதித்துவம் செய்த ரா.பிரவீன் தட்டெறிதலில் வெள்ளிப் பதக்கத்தையும் குண்டு போடுதலில் வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினார்.
தேசிய மட்ட பாடசாலைகளுக்கு இடையிலான சேர் ஜோன்காபற் இளையோருக்கான தடகளத் தொடர் அநுராதபுரத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. 14 வயதுக்கு உட்பட்ட ஆண்களுக்கான தட்டெறிதலில் கொக்குவில் இந்துக் கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த ரா.பிரவீன் 31.95 மீற்றர் தூரத்துக்கு எறிந்து வெள்ளிப் பதக்கத்தையும் குண்டு எறிதலில் 12.86 மீற்றர் தூரத்துக்கு எறிந்து வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினார். (ம-422)



# பிரவீன் குமார் விடைபெற்றார்

உத்தரப் பிரதேசத்தில் இருந்து ஏராளமான இளைஞர்கள் வாய்ப்புக்காகக் காத்திருக்கிறார்கள். அவர்களுக்கு இடையூறாக நான் இருந்துவிடக்கூடாது என்று உருக்கமாகக் கூறி பன்னாட்டு அரங்கில் இருந்து விடைபெற்றார் இந்திய அணியின் வீரர் பிரவீன் குமார்.

உத்தரப் பிரதேசத்தின் மீரட் நகரைச் சேர்ந்தவர் பிரவீன் குமார். மிதவேகப்பந்துவீச்சாளரான பிரவீன் குமார் கடந்த 2007ஆம் ஆண்டு, நவம்பர் 18ஆம் திகதி பாகிஸ்தானுக்கு எதிரான ஒருநாள் ஆட்டத்தில் இந்திய அணியில் அறிமுகமானார். ஏறக்குறைய 5 ஆண்டுகள் வரை இந்திய அணியில் ஒருநாள் மற்றும் டெஸ்ட் ஆட்டங்களில் பங்கேற்று சிறப்பாகப் பந்து வீசினார்.

இந்திய அணிக்காக 68 ஒருநாள் ஆட்டங்களில் விளையாடியுள்ள பிரவீன் குமார் 77 இலக்குகளையும், 292 ஓட்டங்களையும் சேர்த்துள்ளார். 6 டெஸ்ட் ஆட்டங்களில் விளையாடி 27 இலக்குகளைச் சாய்த்துள்ளார்.

பந்துகளை ஸ்விங் செய்வதில் சிறப்பாக செயல்படும் பிரவீன் குமார் 2011ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்துக்கான இந்திய அணியிலும் தேர்வு செய்யப்பட்டார். ஆனால், காயம் காரணமாக அவரால் இந்திய அணியில் தொடர்ந்து இடம்பிடிக்க முடியவில்லை. கடைசியாகக் கடந்த 2012ஆம் ஆண்டு, மார்ச் மாதம் 30ஆம் திகதி டாக்காவில் நடந்த தென்னாபிரிக்காவுக்கு எதிரான ஆட்டம்தான் பிரவீன் குமார் இந்தியாவுக்காக விளையாடிய கடைசி ஆட்டமாகும். அதன் பின்னர் இந்திய அணியில் இருந்து ஓரம்கட்டப்பட்ட அவர் அணிக்குத் திரும்பாமலேயே விடைபெற்றார்.

"நான் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவதில் எந்த விதமான வருத்தமும் இல்லை. நான் முழுமனதோடு இதுவரை கிரிக்கெட் விளையாடிவிட்டேன். உத்தரப் பிரதேசத்தில் இருந்து ஏராளமான இளம் வீரர்கள், சிறந்த பந்துவீச்சாளர்கள் வாய்ப்புக்காகக் காத்திருக்கிறார்கள். நான் தொடர்ந்து கிரிக்கெட் விளையாடிக் கொண்டிருந்தால், அவர்களுக்கு வாய்ப்பு கிடைக்காமல் போய்விடும். மற்ற வீரர்களின் எதிர்காலம் மிகவும் முக்கியம். என்னுடைய காலம் முடிந்துவிட்டது. அதை நான் ஏற்றுக்கொண்டிருக்கிறேன். எனக்கு இந்த வாய்ப்பைக் கொடுத்து விளையாடச் செய்த கடவுளுக்கு நான் நன்றி தெரிவிக்கிறேன்.

இதுதான் கிரிக்கெட்டில் இருந்து நான் விலகிக்கொள்ள சரியான தருணம். அதனால், கிரிக்கெட்டில் இருந்து முழுமையாக ஓய்வு பெறும் முடிவை எடுத்துவிட்டேன். எந்தவிதமான வெறுப்பாலும் எடுக்கவில்லை. அடுத்து என்னுடைய வாழ்க்கையை பந்துவீச்சுப் பயிற்சியாளராக தொடரப் போகிறேன். இளம் பந்துவீச்சாளர்களை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட உள்ளேன்" என்று தனது ஓய்வு தொடர்பில் பிரவீன்குமார் தெரிவித்தார். (ம)



# இந்து இளைஞர் மகுடம் சூடியது!



யாழ்ப்பாணம், ஒக். 22


இலங்கை கரப்பந்தாட்டச் சமேளனத்தினால் நடத்தப்படும் மஞ்சி வெற்றிக் கிண்ணத் தொடரில் யாழ்ப்பாணம் மாவட்ட அணி கிண்ணம் வென்றது.

புத்தூர் வளர்மதி விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இரவு 7 மணிக்கு இடம்பெற்ற இறுதியாட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மயிலிட்டி இராணுவ பொலிஸ் தெரிவு அணி மோதியது.

5 செற்களைக் கொண்டதாக இறுதியாட்டம் அமைந்தது. இந்து இளைஞர் விளையாட்டுக் கழக அணி 3:2 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணம் வென்றது.

(ம-422,23)

# கேலப்புக்குப் பதில் கிகி சேர்ப்பு



உலக சம்பியன்ஷிப் ரென்னிஸ் தொடரில் இருந்து கேலப் விலகியுள்ள நிலையில் அவருக்குப் பதில் வீராங்கனையாக கிகி பேர்டென்ஸ் சேர்க்கப்பட்டார்.

ஒவ்வொரு ஆண்டும் இறுதிப் பகுதியில் பன்னாட்டுத் தரப்படுத்தலில் முதல் எட்டு இடங்களிலும் உள்ள வீராங்கனைகளைத் தெரிவுசெய்து அவர்களுக்கு இடையில் தொடரொன்று நடத்தப்படும். இந்தத் தொடர் உலக சம்பியன்ஷிப் என்று அழைக்கப்படுகிறது. இந்த ஆண்டுக்கான தொடர் நேற்று ஆரம்பித்தது. எதிர்வரும் 28ஆம் திகதி வரை சிங்கப்பூரில் தொடர் நடைபெறவுள்ளது. இந்தத் தொடரில் இருந்து காயம் காரணமாக விலகினார் பன்னாட்டுத் தரப்படுத்தலில் முதலிடத்தில் உள்ளவரான சிமோனா கேலப். அவருக்குப் பதிலாக எவர் சேர்க்கப்படுவார் என்ற எதிர்பார்ப்பு நிலவிய நிலையில் இளம் வீராங்கனை கிகி பேர்டென்ஸ் சேர்க்கப்பட்டார்.

கெர்பர், ஓசாகா, ஸ்ரீபன்ஸ், கிகி ஆகியோர் ஒரு பிரிவிலும், வோஸ்னியாக்கி, கிவித்தோவா, பிளிஸ்கோவா, ஸ்வெட்டலினா ஆகியோர் இன்னொரு பிரிவிலும் விளையாடுகின்றனர். (ம)

# லக்கி ஸ்ரார் அணி போராடிச் சாதித்தது!

யாழ்ப்பாணம், ஒக். 22

திருநகர் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் வட்டக்கச்சி லக்கிஸ்ரார் விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது.

திருநகர் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் வட்டக்கச்சி லக்கிஸ்ரார் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து உருத்திரபுரம் உழவர் ஒன்றியம் விளையாட்டுக் கழக அணி மோதியது.

கோல்கள் இல்லாமல் முடிவுக்கு வந்தது முதல் பாதி. இரண்டாவது பாதியிலும் கோல்கள் எவையும் பதிவுசெய்யப்படவில்லை. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களில் கோல் கணக்கில் ஆரம்பிக்கப்படாததை அடுத்து சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. முடிவில் 3:2 என்ற கோல் கணக்கில் லக்கி ஸ்ரார் அணி வெற்றிபெற்றது. (ம-23)

# ஜெகமீட்பர் அணி அசத்தல் ஆட்டம்

யாழ்ப்பாணம், ஒக். 22

திருநகர் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் வலைப்பாடு ஜெகமீட்பர் விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது.

திருநகர் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் வலைப்பாடு ஜெகமீட்பர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பரந்தன் மத்திய விளையாட்டுக் கழக அணி மோதியது.

6:0 என்ற கோல் கணக்கில் வலைப்பாடு ஜெகமீட்பர் விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது.

(ம-23)



# கொற்றாவத்தை றேஞ்சஸ் இறுதிக்குத் தகுதிபெற்றது

யாழ்ப்பாணம், ஒக். 22

இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கம் தனது 5ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்ட கால்பந்தாட்டத் தொடரில் கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் அணி இறுதிக்குத் தகுதி பெற்றது.

இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற அரையிறுதி ஆட்டத்தில் கொற்றாவத்தை றேஞ்சஸ் அணியை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணி மோதியது. ஆட்டத்தின் 12ஆவது நிமிடத்தில் முதலாவது கோலைப் பதிவுசெய்தார் மாதுஜன். ஆர்த்திகன் 19ஆவது நிமிடத்தில் மற்றொரு கோலைப் பதிவுசெய்ய முதல் பாதியின் முடிவில் 2:0 என்ற கோல் கணக்கில் முன்னிலை பெற்றது றேஞ்சர்ஸ்.

இரண்டாவது பாதியாட்டத்தில் அபார ஆட்டத்தை வெளிப்படுத்தியது உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணி. அந்த அணியின் வீரரான கௌதமன் 50ஆவது, 57ஆவது நிமிடங்களில் அடுத்தடுத்து இரு கோல்களைப் பதிவு செய்து றேஞ்சர்ஸுக்குப் பதிலடி கொடுத்தார். அதன் பின்னர் இரு அணிகளும் பலமுறை முயற்சித்த போதும் மேலதிக கோல்களை பதிவுசெய்ய முடியவில்லை. இதனால் சமநிலைத் தவிர்ப்பு உதை மூலம் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. முடிவில் 4:2 என்ற கோல் கணக்கில் றேஞ்சர்ஸ் அணி வெற்றிபெற்றது.

(ம-422)

### எறிபந்தாட்டத் தொடரில்
## நெல்லியடி மத்தியின் அணிகள் இறுதிக்குள்


யாழ்ப்பாணம், ஒக். 22
இலங்கைப் பாடசாலைகள் எறிபந்தாட்டச் சங்கம் நடத்தும் தேசிய மட்ட எறிபந்தாட்டத் தொடரில் நெல்லியடி மத்திய கல்லூரியின் அணிகள் இறுதிக்குத் தகுதி பெற்றன.

அநுராதபுரம் மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்று நடைபெற்ற 20 வயதுக்கு உட்பட்ட ஆண்களுக்கான அரையிறுதியாட்டத்தில் நெல்லியடி மத்திய கல்லூரி அணியை எதிர்த்து எம்பிலிப்பிட்டிய மத்திய கல்லூரி அணி மோதியது. இதில் நெல்லியடி மத்திய கல்லூரி அணி 2:1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று இறுதிக்குத் தகுதி பெற்றது.

20 வயதிற்கு உட்பட்ட பெண்களுக்கான அரையிறுதியாட்டத்தில் நெல்லியடி மத்திய கல்லூரி அணியை எதிர்த்து விக்கிரசீலா மத்திய கல்லூரி அணி மோதியது. ஆட்டத்தில் ஆதிக்கம் செலுத்திய நெல்லியடி மத்திய கல்லூரி அணி 2:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்று இறுதிக்குத் தகுதி பெற்றது. (ம-422)

# மேற்கிந்தியத் தீவுகளை வென்றது இந்திய அணி





மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான ஐந்து ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடரில் நேற்று நடைபெற்ற முதலாவது ஆட்டத்தில் 47 பந்துகள் மீதமிருக்க 8 இலக்குகளால் வெற்றிபெற்றது இந்திய அணி.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. தீவுகளின் ஆரம்ப வீரர்களாக பவல் மற்றும் கேம்ராஜ் ஆகியோர் களமிறங்கினார். அணி 19 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் 9 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் கேம்ராஜ். பவல், கோப் இணைந்து இணைப்பாட்டமாக 50 ஓட்டங்களைப் பகிர்ந்தனர்.

அரைச் சதம் கடந்தார் பவல். அவரை 51 ஓட்டங்களுடன் வீழ்த்தினார் கலீல் அகமட். சாமுவேல்ஸ் ஓட்டமெதையும் பெறவில்லை. கோப் 32 ஓட்டங்களுடன் சமியிடம் வீழ்ந்தார். ஹெட்மயர் ஒரு முனையில் நிலைத்து நின்று சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். மேற்கிந்தியத் தீவுகளின் சராசரியில் பெரியதொரு ஏற்றத்தை வழங்கும் வகையில் அமைந்தது ஹெட்மயரின் ஆட்டம். 78 பந்துகளில் 106 ஓட்டங்களைக் குவித்தார் ஹெட்மயர். முடிவில் 8 இலக்குகளை இழந்து 322 ஓட்டங்களைக் குவித்தது மேற்கிந்தியத் தீவுகள் அணி.

பந்துவீச்சில் சாகல் 3 இலக்குகளையும், ஜடேயா, சமி இருவரும் தலா இரு இலக்குகளையும், கலீல் அகமட் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய இந்திய அணிக்கு 4 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து ஏமாற்றினார் தவான். எனினும் அணித் தலைவர் கோக்லி, உபதலைவர் ரோகித் சர்மா இருவரும் இணைந்து சிறந்த ஆட்டத்தை வழங்கினார்கள். இந்திய அணியின் ஓட்டங்களின் எண்ணிக்கை 50, 100, 150 என்று கிடுகிடுவென உயர்ந்து சென்றது. ரோகித், கோக்லி இருவரும் சதம் கடந்தனர். ரோகித்தையும் விட சிறந்த சராசரியில் விளையாடிக் கொண்டிருந்த கோக்லி 140 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். இந்த 140 ஓட்டங்களுக்காக கோக்லிக்கு வெறும் 107 பந்துகளே தேவைப்பட்டன. தொடர்ந்து களத்தில் நின்று ஆட்டத்தை வெற்றியுடன் முடித்து வைத்தது ரோகித், ராயிடு கூட்டணி. ரோகித் 152 ஓட்டங்களுடனும், ராயிடு 22 ஓட்டங்களுடனும் இறுதிவரை ஆட்டமிழக்காமல் களத்தில் நின்றனர். (ம)

ALLIANCE FRANCAISE DE JAFFNA
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி
➤ பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSY கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANCAISE மட்டுமே.
➤ அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
➤ யாரும் படிக்கலாம்.
www.ambafrancelk.org
021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

AL, OL பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான
இலவசக்கணினிப்பயிற்சி
ஐ.நா. அபிவிருத்தி திட்ட ஆதரவுடன் 2000ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு ஆயிரக்கணக்கான அரச ஊழியர்கள் மாணவர்களிற்கு பயிற்சியினை வழங்கிய நிறுவனம். இன்று 18 வது ஆண்டு நிறைவில் உலகின் தரமானதும் அதிக வேலைவாய்பினை உடைய நிறுவனங்களாகியOracle Campus, Microsoft IT academy, Cisco Academy, CIMA மற்றும் கொழும்பு பல்கலைககழக தகவல் தொழில்நுட்ப பிரிவு என்பனவற்றுடன் இணை நிறுவனாக தொழிற்படும் MCS IT CAMPUS இலவசக்கணினிப்பயிற்சி த்திட்டம் ஒன்றை முன்வைத்துள்ளது.பங்கு பற்ற விரும்பும் மாணவர்கள்
Type<FREE><Name><DOB><District>sendTo772395895
MCS IT CAMPUS
34 Sir Pon Ramanathan Rd, near University of Jaffna
சிறந்த பெறுபேற்றுக்காக கொழும்பு பல்கலைக்கழகம், Microsoft,CIMA-UK விருதுகளை வென்ற நிறுவனம்

முக்கிய அறிவித்தல்
எள்ளின் விலை அதிகரிப்பால் 21.10.2018 இன்றிலிருந்து
பரிமளாஸ்ரோர்ஸ் தயாரிப்பான
V.S.P நல்லெண்ணையின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது
என்பதனை வாடிக்கையாளர், ஏக விநியோகஸ்தர்களுக்கு
மனவேதனையுடன் அறியத்தருகின்றோம்
விலை விவரம்:
ஆகக்கூடிய சில்லறை விலை
➤ 750 ml - 650 /= ➤ 350 ml - 325 /= ➤ 200 ml -200 /=
பரிமளா ஸ்ரோர்ஸ்
இல.26A, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 4135, 021 222 9165
(cs.cs 15043) (13)

ஒத்துமாறல்
கிளிநொச்சி மாவட்ட பூநகரி பிரதேச செயலகத்தில் முகாமைத்துவ உதவியாளராக (III) கடமையாற்றும் ஒருவர் யாழ். மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகம் ஒன்றுக்கு ஒத்துமாற விரும்புகிறார்.
076 277 6213

ரூபா 800 விலைக்கழிவுடன்
அடிப்படை ஆங்கில அறிவற்றவர்களும் முழுமையாக ஆங்கிலம் பேசப்பழக..
ஷாம்சனின் 16 ஆங்கில புத்தகங்கள்!
அடிப்படையிலிருந்து ஆங்கிலத்தை முழுமையாக தமிழ்மூலம் கற்கும் வகையில் திரு.ஷாம்சன் ஆசிரியரால் உருவாக்கப்பட்ட
16 புத்தகங்கள் கொண்ட "STUDY PACK"
ஆங்கில ஆசிரியரின் உதவியேதுமின்றி பாடசாலை மாணவர்கள் முதல் தொழில்புரிவோர் வரை எவருமே சுயமாக ஆங்கிலம் கற்கும் வகையில் உருவாக்கப்பட்டது.
24.10.2018 வரையே இவ்விலைக்கழிவுடன் பெறமுடியும்
SAAMSON Experts in English Training
403, வெலிங்டன் சந்தி, பெருமாள் கோயிலடி யாழ்நகர் 021 320 3313

## ஐ.பி.எல். தொடருக்கான ஏலம் டிசெம்பர் மாதம்?

அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள ஐ.பி.எல். தொடருக்கான ஏலம் இந்த ஆண்டு டிசெம்பர் 16ஆம் திகதி நடைபெறலாம் என்று கருதப்படுகிறது.

வழக்கமாக நடைபெறும் மெகா ஏலமாக அல்லாமல் முக்கிய நகர்வுகளை மட்டும் கொண்டதாக இந்த வருடத்துக்கான ஏலம் அமையலாம். அதாவது ஒவ்வொரு அணியில் இருந்தும் கழற்றிவிடப்படும் வீரர்களுக்கும் புதிதாக அணியில் இணைத்துக் கொள்ளப்படும் வீரர்களுக்குமான ஏலமாக இந்த ஏலம் அமைய வாய்ப்புள்ளது என்று கருதப்படுகிறது.

இந்தியாவில் அடுத்த ஆண்டு பொதுத் தேர்தல் நடைபெறவுள்ளதால் ஐ.பி.எல். தொடரின் சில ஆட்டங்களை வெளிநாடுகளில் நடத்தவும் திட்டமிடப்பட்டு வருகிறது. எனினும் இந்த விடயத்தில் இறுதி முடிவெதுவும் எடுக்கப்படவில்லை. (ம)

அமெரிக்க லொத்தர் இலவச விசா
உடனடியாக பதிவு செய்யுங்கள்
இந்த வருடமே இறுதி வருடம்
இன்னும் சில நாட்களில் பதிவுகள்
V2 TRAVELS
செல்வராஜா -அருணன்
V2 TRAVELS
0768226243

வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை
அதி விரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
கடலுணவு, இறைச்சி, எண்ணெய் வகை, மருந்துப் பொருள்கள், பழ வகைகள், பால் மா வகைகள் என்பவற்றையும் அனுப்பி கொள்ள முடியும்.
நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.
20 வருடகால அசைக்க முடியாத நம்பிக்கையை வென்ற நாம்
அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்
1, பிறவுண் வீதி, நாவலர் சந்தி, யாழ்ப்பாணம்.
021 222 6113

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 22.10.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.